
படைப்பு

ஊற்று: 1 | நதி: 10 | பிப்ரவரி 2019 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “நான் எழுதிய எல்லாக் கதைகளிலும் வரும் கதாபாத்திரங்கள் நான் கண்ட நிஜமான மனிதர்கள்தான்”

எழுத்தாளர் **சி.ஆர்.ரவீந்திரன்** அவர்களுடன் ஒரு நேர்காணல்



**குவளைக்கண்ணனின் கவிதைப்பெண்கள்**
– கவிஞர் விக்ரமாதித்யன்



**இருளும் ஒளியும் இரண்டு கண்கள்**
– முனைவர் கு.ஞானசம்பந்தன்



**கவிதை நிமித்தம் ஒரு பறத்தல்**
– இரா.பூபாலன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 1 | நதி: 10 | பிப்ரவரி 2019

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
**padaippugal@padaippu.com**

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
✉ admin@padaippu.com
✆ 9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே. கதை மற்றும்
கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **"நான் எழுதிய எல்லாக் கதைகளிலும் வரும் கதாபாத்திரங்கள் நான் கண்ட நிஜமான மனிதர்கள்தான்"**
  - எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரன் அவர்களுடன் ஒரு நேர்காணல் - பக். 05
- **புதுக்கவிதைகள்**
  - முகம்மதுபாட்சா - பக். 14
- **கவிதை நிமித்தம் ஒரு பறத்தல்**
  - இரா.பூபாலன் - பக். 17
- **இலக்கியத்தின் தோரணவாயில்**
  - தா.ஜோ.ஜூலியஸ் - பக். 24
- **தாழ்வாரத்திற்குக் கதவுகள் இல்லை**
  - கு.இலக்கியன் - பக். 28
- **குவளைக்கண்ணனின் கவிதைப் பெண்கள்**
  - கவிஞர் விக்ரமாதித்யன் - பக். 30
- **சிலேட்டுக்குச்சி**
  - கட்டாரி - பக். 36
- **சுகன் என்றொரு அன்பு**
  - கிருஷ்ணப்ரியா - பக். 38
- **வாழ்த்துக்கள் என்றொரு வார்த்தை**
  - ஆ.நாகமுத்துபாண்டியன் - பக். 42
- **இருளும் ஒளியும் இரண்டு கண்கள்**
  - முனைவர் கு.ஞானசம்பந்தன் - பக். 47
- **கொஞ்சம் சுஜாதாவைப் பற்றி**
  - தேவரசிகன் - பக். 52

- **இலக்குமிகுமாரன் ஞானதிரவியத்தின் அகலுட்டு**
  - செ.ஓவியம் – பக். 55
- **நெடுவெண்ணிலவு**
  - ஆகி – பக். 63


## சிறுகதைகள்


- **சாய்ந்த கோபுரமும் சாயாத மனித நம்பிக்கையும்**
  - பிரேமபிரபா – பக். 20
- **தனிமை**
  - ரிஸ்வான் ராஜா – பக். 45
- **பாற்கடல்**
  - லா.ச.ராமாமிர்தம் – பக். 57


## கவிதைகள்


- **கார்த்திக் திலகன்** – பக். 13
- **நீர்க்குமிழ்கள்**
  - தங்கேஸ் – பக். 23
- **ரிஸ்கா முக்தார்** – பக். 35
- **படைப்புலகம்** – பக். 40
- **பறவைகளுக்கு வீர வணக்கம்**
  - ராம் பெரியசாமி – பக். 44
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 5**
  - ஜின்னாஅஸ்மி – பக். 54
- **இறுதியாத்திரை**
  - அனாமிகா – பக். 61






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' பத்தாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

நாம் தமிழால் ஒன்றிணைந்த இனம். பண்டைத் தமிழ் இலக்கியப் பதிவுகள் தமிழனின் வீர உணர்வை மிகுவித்தே உரைக்கின்றன. போர் என்பது அச்சமூகத்தில் மிகவும் சாதாரணமாக நிகழும் செயல் என்றே இலக்கிய, இலக்கண நூல்கள் விவரிக்கின்றன.

இலக்கியம் என்பது மக்களின் இயல்பு வாழ்வுடன் தொடர்புடையதுதான் எனினும் சங்கப்பாக்கள் அம்மக்களின் வாழ்வை முழுவதுமாக எடுத்துரைத்துவிடவில்லை. இலக்கியத்திற்கான பாடுபொருள்கள் அச்சமூகத்தில் வரையறுத்துத்தான் எழுதப்பட்டன. போர் சூழ்ந்த சமூகமாக இருந்தாலும் வீரமும் போரும்கூட அப்படித்தான் பதியப்பட்டிருக்கவேண்டும்.

போருக்கான வெற்றி என்பது பகைநாட்டின் அழிவை வைத்தே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் போர்ச்சூழலும் எப்போதும் அப்படித்தான் அமைந்துவிடுகின்றது. அதனால்தான் தீவிரமான கலவரச்சூழலில்கூட காந்தி அமைதியை வலியுறுத்தினார்.

கொண்டி மகளிர் என்றொரு தொடர்ப் பயன்பாடு பண்டை இலக்கியத்தில் உண்டு. பகைநாட்டிலிருந்து கவர்ந்து வரப்பட்ட பெண்களான அவர்களது இருப்பு ஊர்ப் பொதுமன்றத்தில் என்பது பதிவு. பகைநாட்டின் விளைநிலங்களும் வாழிடங்களும் வீரம்கொண்ட மாந்தர்களும் அழிக்கப்பட்டதுதான் போர்ச் செயற்பாடாக இருந்திருக்கிறது.

போர் நிகழ்வுகளைக் கூறும் சங்க இலக்கியங்கள் அழிவுகளை முன்னிறுத்தியே பேசுகின்றன. அவ்அழிவுகளை வாசித்த எவரும் போர்குறித்த எதிர்நிலைப்பாட்டையே கொண்டிருப்பர்.

மன்னர்களின் வீரத்தைப் புகழ்ந்து பெருமிதம் எய்திய பாடல்களை இயற்றியவர்தான் ஔவையார். எனினும் புறநானூற்றின் தொண்ணூற்றைந்தாவது பாடலாக உள்ள அவரது பாடல் தனிச்சிறப்பு மிக்கது. அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் போர் அரும்பும் சூழல் வந்தது. ஔவையார் தொண்டைமானிடம் சென்று, அவனது படைகளைப் புகழ்வது போல இகழ்ந்தும், அதியமானின் படைகளை இகழ்வது போலப் புகழ்ந்தும் பாடுகிறார். அதாவது அதியமானின் படைப்பெருக்கத்தைக் கூறிப் போரின் இழப்புகளைக் கருத்திற்கொண்டு போர்ச் சிந்தனையைத் தவிர்க்கக் கூறுகிறார். பெண்பால் என்பதையும் தாண்டி ஒரு புலவரின் எண்ணம் அதுவாகத்தான் இருக்கமுடியும்.

வலியை ஏற்படுத்தியவர்கள், வலியை ஏற்படுத்தத் துடிப்பவர்கள் என அனைவருக்குமான எழுத்தாகவும் அமைவது படைப்பின் சிறப்பு. உணர்வுமோதல்களினால் நாம் கண்டடைந்த ஏதோ ஒரு வெளிச்சத்தை நமது கலை இலக்கிய முயற்சிகளினால் பிறருக்கும் சுட்டிக்காட்ட முடிகிறது என்றால், அதுவே நம் படைப்பின் வெற்றி.

அவ்விதம் நிலைத்த படைப்புகள் நம் இதழின் வாயிலாகவும் குழுமத்தின் வாயிலாகவும் வெளிவர விழைகிறது, தகவு.

மக்களின் எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரனின் நேர்காணல், கவிஞர் விக்ரமாதித்யனின் கட்டுரை, எழுத்தாளர் சுஜாதா குறித்த கட்டுரை, தொடர்க் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என நிறைந்திருக்கும் இதழை வாசியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– **ஆசிரியர்**

• கவிஜி
படங்கள் : காதலாரா



# “நான் எழுதிய எல்லாக் கதைகளிலும் வரும் கதாபாத்திரங்கள் நான் கண்ட நிஜமான மனிதர்கள்தான்”

## எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரன் கிட்டத்தட்ட பதினாறு நாவல்கள், ஆறு சிறுகதைத் தொகுப்புகள், இருபது மொழிபெயர்ப்புகள்.. இன்னும் பல என்று வாழ்நாளெல்லாம் எழுதி... இப்போதும் எழுதிக்கொண்டிருப்பவர். ஆகச் சிறந்த இலக்கியவாதி. எழுபதைக் கடந்த பழுப்புக் கண்கள் நம்மை ஆய்கின்றன. வார்த்தைகளை எண்ணங்கள் முந்திக்கொண்டு பேசுகின்றன. ஒரு காலை வேளையில் பேரூரில் அவர் இல்லத்தில் அறை முழுக்கப் புத்தகங்கள் சூழ அமர்ந்திருந்த அவரோடு பேசியதிலிருந்து.....

**வானம்பாடி பற்றி....?**

வானம்பாடிங்கிற மூவ்மெண்ட் ரொம்பக் கடுமையான முயற்சி. அந்த முயற்சியோட வெளிப்பாடு என்னன்னா, முன்னெல்லாம் மரபுல எழுதுவாங்க.. அது எல்லாருக்கும்

போய்ச் சேராது. பழைய வடிவங்கள் புதிய கருத்துக்களைக் கொண்டு போறதுக்குத் தடையா இருந்துச்சு. ஆனா "வானம்பாடி" அந்தத் தடைகளைத் தகர்த்துச்சு. அந்த வடிவங்கள்ல காதலை எழுதலாம். பக்தியை எழுதலாம். கடவுளைப் பாராட்டி எழுதலாம். ஆனா சமூகப் பிரச்சனையக் கவிதையா மாத்தணும்னா அதுக்குப் புதிய வடிவம் வேணும்னு யோசிச்சாங்க. அதுல ஆரம்பிக்கப்பட்டதுதான் "வானம்பாடி".

## உங்களின் சிறுவயதுக் காலம் பற்றி.....!

ரொம்பப் பின்தங்கிய குடும்பம்தான் எங்களோடது. எங்கப்பா மூணாங்கிளாஸ்தான் படிச்சார். அதுக்கு மேல அவரால படிக்க முடியல. அதனால என்னை நிறையப் படிக்கவைக்கணும்னு ஒரு ஆசை. "நான்தான் மாட்டு வாலைப் புடிச்சிட்டுத் திரியறேன். நீ நல்லாப் படிச்சு மேல வரணும்"னு சொல்லுவார். அவர் கடைசிவரை உழைப்பாளியாத்தான் இருந்தாரு. ராஜாஜி பீரியட்ல ஒருநேரப் பள்ளிக்கூடம் கொண்டு வந்தாங்க. ஒரு வேளை வீட்டு வேலை பாக்கணும். ஒரு வேளை பள்ளிக்கூடம் போகணும். சில குடும்பச் சூழல்னால அந்தப் பள்ளிக்கூடம் வேண்டானுட்டுத் திண்ணைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினாங்க. ஓராசிரியர் பள்ளிக்கூடம். பெருமாள் வாத்தியார்னு ஒரு வாத்தியார். அந்தக் காலத்துல அவர் டெர்ரர். பயங்கரமா அடிச்சுப் படிக்க வைப்பாரு. அவரு நம்மள போட்டு டார்ச்சர் பண்ணுனாரு. நாம சுதந்தரமா வளந்ததால அங்க இருக்க முடியல. நமக்குப் படிப்பு மேல இன்ட்ரெஸ்ட் வேற இல்லாமப் போச்சு. நான் தப்பிச்சு ஓடி வந்துட்டேன். ஆனா திரும்பவும் கண்டுபிடிச்சுக் கொண்டுபோய் விட்டாங்க. திரும்பவும் ஓடி வந்துட்டேன். நம்மள போட்டு அடிச்சு இழுத்துட்டுப் போய் மறுபடியும் பள்ளிக் கூடத்துல விட்டாங்க. ஒரு கட்டத்துல படிக்க ஆரம்பிச்சிட்டேன்.

## உங்கள் இலக்கியம் குறித்து...!

என் இலக்கியத்தை வாழ்விலிருந்துதான் எடுக்கறேன். வாழ்க்கை மாறிக்கொண்டே இருக்கிறது. மனிதர்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். சமுதாயம் மாறிக்கொண்டே இருக்கிறது. ஆதிமனிதன் விலங்குகளோடு இருந்தவன். விலங்கு நிலையில் இருந்து கோடான கோடி உயிர்களிடமிருந்து மாறுபட்டு அவன்தான் உற்பத்தியில் இறங்கினான். உணவை உற்பத்தி பண்ணக்கூடிய ஒரே ஒரு உயிர், மனிதன்தான். அதுல இருந்து வளர்ந்ததுதான் சோசியல் சயின்ஸ் மதம் ஜாதி... எல்லாம். எல்லாம் தப்பில்ல. ஒவ்வொரு சமூக அமைப்புக்கும் அந்தந்தக் காலத்துல அது தேவையா இருந்துச்சு.

## உங்கள் எழுத்துக்குக் கச்சாப் பொருள் எங்கிருந்து வருகிறது...?

வால்பாறை சூசைட் பாறையில் காட்டு யானைக் கூட்டத்தை அத்தனை அருகில் கண்டது இன்னமும் என் கண் முன்னால் இருக்கிறது. வாளையார் பகுதியில் சிறுத்தையிடம் தப்பித்த மனிதனிடம் பேசுகையில்... கண்ட தரிசனங்கள் அற்புதமானவை. இப்படி நிறைய நேரடி அனுபவங்களைத்தான் நான் எழுதுகிறேன். என்னோட அனுபவங்கள், நண்பர்களின் அனுபவங்கள், நான் காணும் மனிதர்களின் அனுபவங்கள் என்று என் இலக்கியம் மனிதர்களின் அனுபவங்களில் இருந்துதான் பிறக்கிறது. நான் கற்பனையாக எழுதுவதில்லை.

நாம பாக்கறது பிட்டுங்க. இந்த வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது. மனிதனுடைய வாழ்க்கை என்பது சாதாரணமானது அல்ல. பல பாத்திரங்களை, பல சம்பவங்களை இணைத்து ஒரு மையத்தில் வைக்கையில் ஒரு கதை சுவாரசியமாகும். அதைத்தான் என் கதைகள் பேசுகின்றன. அப்படித்தான் என் கதைகள் உருவாகின்றன.

## முதல் எழுத்து எப்போது..?

நான் ஏதோ ஆர்வத்துல கவிதை எழுதினேன். என்னோட முதல் கவிதை கண்ணதாசன் எடிட்டரா இருந்த பத்திரிக்கை ஒன்னுல சும்மா போட்டுவிட்டாங்க. "காலடிச் சுவடுகள்"னு தலைப்பு. அது ஒரு பிளாங்க் வெர்ஸ். மரபு அது இதுனு ஏதும் தெரியாது. எதுகை மோனையோட எழுதுவேன். நான் அப்போ கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ்ல எம்.ஏ. இங்கிலிஷ் படிச்சிட்டு இருக்கேன். மேத்தா, முல்லை யாதவன், அக்கினிபுத்திரன் எல்லாம் தமிழ் டிபார்ட் மெண்ட்ல இருந்தாங்க. அப்போதான் எழுத்து தீவிரமாச்சு.

**தமிழ் மீது எப்போது ஈடுபாடு ஆரம்பித்தது....?**

சிறு வயசுல இருந்தே தமிழ்ச்சூழலின் பாதிப்பு இருந்தது. பேரூர் தமிழ்க் கல்லூரி பக்கம்தான் நான் படிச்ச பள்ளிக்கூடம் இருந்துச்சு. அதனால அங்க வர்ற தமிழ் மேதைகளைக் கவனிக்கும் சூழல் எனக்கு அமைந்தது. அதுல பா. ஜீவானந்தம் பேச்சு கேட்டுருக்கேன். ஆசான் ஞானசம்பந்தம், ம.பொ.சிவஞானம்.. இந்த மாதிரி நிறைய தமிழ் அறிஞர்கள் வருவாங்க. தேவசிகாமணின்னு குன்றக்குடி அடிகளார் வருவார். அவர் மார்க்சியம், இலக்கியம், சமூகவியல்ன்னு பிரமாதமா, ஆழமாத் தெரிஞ்சவரு. பெரிய மேதை. அவர் மூலமாத்தான் இந்தத் தமிழ்க் கல்லூரி வளர்ச்சி அடைஞ்சது. அப்டியே வெண்கலம் மாதிரி இருக்கும்.. அவரோட தமிழ். அப்புறம் புலமைப்பித்தன்கூட இங்கதான் படிச்சார். இவங்கெல்லாரையும் பார்க்கற, பேச்சு கேக்கற வாய்ப்பு எனக்குக் கிடைச்சது. அழ.வள்ளியப்பாவை ஒருதரம் கூட்டிட்டு வந்திருந்தாங்க. அவர் குழந்தைக் கவிஞர். அவர் மீட்டிங் எல்லாம் பேசிட்டு, பள்ளிக்கூடத்துக்குப் "பூனையும் மணியும்"னு ஒரு புத்தகம் குடுத்துட்டுப் போனார். அதை வாங்கி நான் படிச்சேன். இந்த மாதிரித் தூண்டுதல் தொடர்ந்து என்னைத் தமிழோடு வெச்சிருக்க வெச்சுது.

**கலை என்பது...?**

கலை உணர்ச்சி என்பது எல்லாருக்கும் உண்டு. அது பொதுவானது.

**உங்கள் நண்பர் புவியரசு பற்றி....!**

புலவர்களில் புவியரசு கொஞ்சம் வித்தியாசமான கண்ணோட்டம் உள்ளவர். பல துறைகளில் பயணம் செய்வாரு. நாடகத்துறை, சினிமா, கவிதை, மொழிபெயர்ப்பு, கதை, பத்திரிக்கைத்துறை அப்டீன்னு. வானம்பாடில அவர் முக்கியமான ஆளா இருந்தார்.

**ஒரு ஏழு ஆண்டுகள் நீங்கள் எழுதவில்லை என்று ஒருமுறை கூறி இருந்தீர்கள்... ஏன் அந்த ஏழு ஆண்டுகள் எழுதவில்லை..?**

ஒன்னுமில்ல. படிக்க வேண்டும் என்ற ஆர்வம்தான். யாரிடமும் நான் கோவிச்சிக்கல. ஏழு வருஷம் தொடர்ந்து படிச்சேன். உலக இலக்கியமெல்லாம் அப்போதான் படிச்சேன். ஷேக்ஸ்பியரத் தரவாப் படிச்சிருக்கேன். ஆங்கில இலக்கியம், ரஷ்ய இலக்கியம், பிரஞ்சு இலக்கியம் எல்லாம் படிச்சேன். அப்போ படிச்சதுதான் இப்போ பயன்படுது.

**மறக்க முடியாத வாசகன்.....!**

"தேயிலைக் கொழுந்து" நாவலுக்கு இலங்கை மட்டக்களப்புல இருந்து ஒரு போன் வருது. போன் பண்ணினவன், பாவம் அழறான். "எப்படி சார் எங்க வாழ்க்கையை அப்டியே எழுதிருக்கீங்க"ன்னுச் சொல்லி அழறான். ஒவ்வொரு கதாபாத்திரமாச் சொல்லிச்சொல்லி ஆச்சரியப்படுறான். அப்புறம் அவன்கூட கொஞ்ச நேரம் பேசினேன். அவன் ஒரு தகவலும் சொன்னான். 'நாங்க நாற்பதாயிரம் பேர் தமிழ்நாட்டுல இருந்து வந்துருக்கறோம். இங்க பனிலயும் குளிர்லயும் போராடி வாழ்ந்துட்டுருக்க றோம். எங்களைக் கவனிக்கறதுக்கு யாருமே இல்ல. இங்க ஜாதி வெறி பிடிச்ச மனிதர்கள்தான் இருக்காங்க. எந்தக் கட்சியும் எந்த இயக்கமும் எங்களைக் கண்டுகொள்வதில்லை' ன்னு சொன்னான். அவனை இன்னமும் மறக்க முடியவில்லை.



**இந்தியாவைப் பற்றி ஒரு எழுத்தாளராய் உங்கள் பார்வை...?**

சாகித்திய அகாதமி எனக்கு டூர் கிராண்ட் குடுத்தாங்க. இந்தியாவுல எங்க வேணாலும் போய்க்கலாம். அப்டி வரும்போது, நான் அதுவரை டெல்லி பார்த்ததில்லை. சரி டெல்லி போலான்னு நானும் என் நண்பர் ஒருவரும் போனோம். அப்போ கிழக்குக் கடற்கரை வழியாப் போனோம். மத்திய இந்தியா வழியாப் போனோம். அப்டியே இந்தப் பக்கம் திருவனந்தபுரம், மங்களூர்னு போனோம். ராஜஸ்தான் அப்டி இப்டினு கொஞ்சம்தான் பாக்கல. ஆனா இத்தனையும் பாக்கறபோது இந்தியாங்கறது ஒரு அற்புதமான தேசம். அற்புதமான மனிதர்கள் கொண்ட தேசம்னு புரிஞ்சது. கார்ல் மார்க்ஸ் ரொம்ப அழகாச் சொல்வார். இத்தனை மதம், இத்தனை ஜாதி, இத்தனை இனம், இத்தனை மொழி, இத்தனை வேதங்கள் உள்ள இந்தத் தேசம் எப்படி அமைதியாக இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை என்று.

அதுதான் இந்தியா. ஈரோப்ல அப்டி இருக்க முடியல. சின்ன விஷயத்துக்கு எல்லாம் அடிச்சுக்கிட்டுக் கிடந்தாங்க. ஆனா இந்தியால அப்டி எதுவும் நடக்கல. அதுக்குக் காரணம் ஆன்மீகம்தான். இதையெல்லாம் சொல்றதுக்கு ஒரு கமிட்மென்ட் வேணும்.

**உங்கள் மொழிநடை குறித்து..?**

சென்னைல இருந்தபோது சா.கந்தசாமி, ஞானக்கூத்தன் அவுங்க இவுங்கன்னு இலக்கியவாதிகள் எல்லாரும்.... அந்தக் 'கசடதபற' க்ரூப் முழுதும், அங்க ஒரு ஹோட்டல்ல சந்திச்சுக்குவாங்க. நானும் சேர்ந்துக்குவேன். அப்புறம் பாண்டிபஜார் போனா அசோகமித்திரன், அவுங்க லிங்க். அப்டியப்டியே வந்து நிறைய தொடர்புகள் ஏற்பட்டது. திகசி, வண்ணதாசனுடைய அப்பா "தாமரை"க்குக் கதை அனுப்பச் சொன்னார். நானும் அனுப்பி இருந்தேன். அப்புறம் ஒருமுறை கோயமுத்தூர்ல நடந்த ஏழாவது வானம்பாடி வெளியீட்டுக்கு வந்திருந்தார். அப்போ நேர்ல சந்திச்சேன். கதை நல்லா இருக்கு. ஆனா கவிதை நடையில இருக்கு. அந்த ரொமாண்டிச நடை வேண்டாம். சாதாரண எளிய நடையில எழுதுன்னார். அதுக்கப்புறம் அதே கதையை நான் மக்கள் மொழில எழுதினேன். உதாரணத்துக்கு.. சிகப்பு மண்ணில் கருப்பு மலர்கள் அப்டி இப்டினு எழுதாமச் செம்மண் அப்டீன்னு எழுதினேன். அந்த மாதிரி இயல்பு மாறாம எளிய மனிதர்களின் மொழில எழுதி அனுப்பினேன். உடனே போட்டுட்டாங்க.

**சுந்தர ராமசாமி பற்றி....!**

ஒருமுறை அக்னிபுத்திரனோட திருவனந்தபுரத்துல நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக்குப் போனேன். அவர் சென்னையில இருந்ததால எல்லா எழுத்தாளரும் அவருக்குப் பழக்கம். அப்போதான் சுந்தரராமசாமி பழக்கமானார். அவரோட 'ஒரு புளிய மரத்தின் கதை' ஏற்கனவே நான் படிச்சிருக்கேன். 'தகழி சிவசங்கரன்' எழுதிய 'செம்மீனை'த் தமிழில் மொழிபெயர்த்தவர் சுந்தரராமசாமி. அவரைப் பாக்கலான்னு வீட்டுக்குப் போனோம். முதல்நாள் அவர் வீட்ல இல்ல. அப்புறம் இந்த மாதிரி வந்திருந்த விஷயத்தை வீட்ல சொல்லி நாளைக்கு வர்றோம்னு சொல்லிட்டு வந்துட்டோம். அப்புறம் மறுநாள் போனோம். அவர் எங்களுக்காகக் காத்திருந்தார். நிறைய பேசினார். பேசிட்டே பக்கத்துல ஒரு கடைக்குக் கூட்டிட்டுப் போய் ப்ரூட் சாலட் வாங்கிக் குடுத்தார். வாழ்க்கையில முதன்முதலாக நான் ப்ரூட் சாலட் அன்னைக்குத்தான் சாப்ட்டேன் (சிரித்துக் கொள்கிறார்). நிறைய இடங்களுக்குக் கூட்டிட்டுப் போய்ச் சுத்திக் காட்டினார். அப்புறம் நீல பத்மனாபன் வீட்டுக்குப் போய் அவரைச் சந்திச்சோம். அந்த ட்ரிப் மனநிறைவானது.

**நீங்கள் எந்த மாதிரி ரைட்டர்..?**

சுந்தரராமசாமி போன்றோர் எல்லாம் சீரியஸ் ரைட்டர்ஸ். பாப்புலர் பத்திரிக்கைல எழுதாமச் சிறுபத்திரிக்கைல எழுதிட்டிருந்தாங்க. எனக்கும் அப்டி ஒரு சீரியஸ் ரைட்டர் ஆகணும்னுதான் ஏக்கம். அதனால, நான் எழுதுவதற்கு முன் ஒரு முடிவுக்கு வந்தேன். ஜெயகாந்தனோட எழுத்து யதார்த்தமும் கற்பனையும் கலந்ததா இருக்கும். எளிய மக்களைப் பத்தி நல்லா எழுதறாரு. ஆனா இதைவிட நாம நல்லா எழுதணும்னு எனக்குள்ள ஒரு முடிவு. அதுலயும் அவர் எழுதின கற்பனைக் கதாபாத்திரங்களைத் தவிர்த்து ஆக்சுவல் கதாபாத்திரங்களை வெச்சுத்தான் நாம் எழுதணும்னு முடிவெடுத்தேன். அப்டி எழுதினது தான் "செவ்வானம்"னு தாமரைல வந்த கதை. நான்

எழுதிய எல்லாக் கதைகளிலும் வரும் கதாபாத்திரங்கள் நான் கண்ட நிஜமான மனிதர்கள்தான். அது மூலமா நிறைய பிரச்சனைகளைச் சந்தித்திருக்கிறேன். ஆனாலும் அப்படி எழுதுவதுதான் என் பாணி என்று நம்புகிறேன்.

## வட்டார மொழி இலக்கியங்கள் எப்படிப் பொது இலக்கியத்திலிருந்து வேறுபடுகிறது..?

நான் ஆங்கில இலக்கியமும் படிச்சவன், அது மட்டுமில்லாமப் பிரெஞ்சு, ரஷியன் இப்படிப் பல இலக்கியங்கள் படிச்சிருக்கேன். என்னன்னா.. அவுங்க யூனிவெர்சல் இன்டெர்னேஷனலா ஒரு தீம்-ஐ வெச்சிருக்காங்க. ஆனாலும் அவுங்க, அவுங்க மண் சார்ந்துதான் எழுதறாங்க. அதுக்கான வடிவம் அதுக்கான உருவம்னு எல்லாமே அவுங்ககிட்ட இருக்கு. அதை பாலோ பண்ணி நாம அந்த மாடல்ல எழுதறோம். அந்த வகையில் பார்த்தால் தமிழில் எழுதுவதெல்லாம் தமிழ் இலக்கியமல்ல. வட்டாரமொழின்னுச் சொல்றீங்க பாருங்க, அது இந்த மண் சார்ந்த மொழி. இங்க உழைக்கும் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், அவர்களின் வலி இதெல்லாமே இதுலதான் இருக்கு. நடுத்தர வர்க்கம்தான் இந்த இலக்கியத்தைப் படிக்குது. மேல்தட்டு வர்க்கம் படிப்பதில்லை. அதைத் தாண்டியும், நாட்டுப்புற இலக்கியம் உலகத்தில் இருக்கற ஒவ்வொரு மொழியிலயும் இருக்கு. அது வாய்ச்சொல்லாகவே இருந்துட்டு இருக்கே தவிர பதிவாகிறது இல்ல. வாழ்வியல் தன்மை, வட்டார வழக்குகள் என்று சொல்லக்கூடிய மண் சார்ந்த விஷயங்களில்தான் இருக்கு. மற்றதெல்லாம் நாம் சிந்தனாப்பூர்வமாக, உத்திமுறைகளில், கருத்துக்களை வைத்துக் கொண்டு அதைச் சுவாரசியமாகச் சொல்றது. கருத்துக்கு முதலிடம் குடுக்கறப்போ புனைவுதான் வருது. ஆனா மண் சார்ந்த இலக்கியம் ரொம்ப உயிர்ப்புத்தன்மையோடு இருப்பதாக நாங்க நம்பறோம்.

எசென்ஸ் ஆப் மேன்.. வாழும் மனிதனுடைய உயிர்த்துடிப்பான விஷயங்கள் இதுலதான் இருக்குனு சொல்லலாம். உத்திகளைப் பயன் படுத்திக் கருத்துக்களை நிலைநாட்டலாம். ஆனா அது மேல்தட்டு இலக்கியம். அதைத்தான் பொதுவா இங்க செஞ்சுட்டு இருக்காங்க. உலகத்துல இப்போ, சோஷலிசக் கண்ணோட்டமெல்லாம் வளர்ந்த பின்னால வட்டார இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கறாங்க.

மலையாளத்துல "தகழி சிவசங்கரன்" உலகம் முழுதும் அறியப்பட்டவர். அவரு ஒரு விஷயம் சொன்னாரு. "'குருசே' கூட அவர் மாளிகையில் உக்காந்து டிபன் சாப்பிட்டேன். கென்னடி கூடவெல்லாம் இருந்திருக்கேன். ஆனால் எதுவுமே என்னைப் பாதிக்கவில்லை. என்னைப் பாதித்தது எல்லாம் என் கிராமமும் அங்கே இருக்கும் மனிதர்களும் அங்கிருக்கும் பறவை பட்சிகளும்தான். அதனால நான் இவுங்களைப் பத்தித்தான் எழுதறேன்"னு சொன்னார்.

மண் சார்ந்து எழுதறவங்களுக்குப் பெரிய விளம்பரம் எதும் கிடைக்கறது இல்ல. ஆனாலும் அவர்கள் எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்கள். வட்டாரம்ன்னு சொல்றத விட மண் சார்ந்த எழுத்துன்னு சொல்றதுதான் சரியாகப் பொருந்தும்.

## பெரும்பாலும் எழுத்தாளர்கள் இயல்பு வாழ்வை வாழ்வதில்லையே.. அது பற்றி....!

மக்கள் மக்களாகவே அவுங்க தளத்துக் குள்ளயே சிந்திக்கறாங்க. எழுத்தாளன் மக்களோடு இருந்தாலும் மக்களை விட்டு விலகி நின்று சிந்திக்கிறான். மக்களைப் பற்றிச் சிந்திக்கையில் கொஞ்சம் அந்நியமாக வேண்டி வருது. "ஏலினேஷன்"ன்னு சொல்வாங்க. சாதாரண மனிதனுக்கு, வாழ்வதுதான் முக்கியமே தவிர கலாப்பூர்வமாக வாழணுங்கறது கிடையாது. ஆனா எழுத்தாளன் கலாப்பூர்வமாக வாழ்க்கையை அணுகுவான். சாதாரணமா வாழறவன் சமூகத்தில் இருக்கும் கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டு அதில் இருக்கும் சந்தோஷங் களைக் கொண்டாடிக்கொண்டு இருப்பான். ஆனா எழுத்தாளன் இந்தச் சமூகம் ஏன் இப்படி இருக்குனு சமூகத்துல இருக்கற பிரச்சனைகளைத் தேடி, கொஞ்சம் தள்ளி நின்னு பார்ப்பான். சாதாரண மனிதர்களுக்கு வாழ்வதே நோக்கமாக இருக்கும். எழுதுபவனுக்கு வாழ்க்கையில் சில நோக்கங்கள் இருக்கும்.

எழுதுபவன் எல்லார் கூடவும் இருந்தாலும் தேவைப்படும் நேரத்தில் தனித்து நின்று வித்தியாசமாச் சிந்திப்பான். இந்த மாதிரியான இரட்டை வாழ்க்கை முறை எழுதுபவனுக்கு இருக்கு.

**உங்கள் படைப்புகளைப் பற்றி உங்கள் வீட்டில் பகிர்ந்துகொள்வது உண்டா…?**

பெரும்பாலும் இல்லை.

**புத்தகங்கள் படிப்பது ஒருவகை அடிக்டா…?**

அடிக்ட்ன்னு இல்ல. ஆர்வம்தான். தெரிஞ்சுக் கணுங்கிற ஆர்வம்தான். வாசிப்பனுபவம் என்பதும் ஒருவகை பரிணாமம்தான். தமிழ்நாட்டுல நூலகங்கள் இருக்கு. இல்லன்னு சொல்லல. ஆனா இன்னும் விரிவுபடுத்தணும். அப்போதான் வாசிப்புத்தன்மையை இன்னும் பரவலாக்க முடியும்.

**குறிப்பிட்ட 'எபிக்'கை மறு ஆக்கம் செய்வது குறித்து…!**

இப்பவும் நிறைய பேர் மகாபாரதத்தை மாத்தி எழுதறாங்க. கதையின் மையத்தை மாற்றாமல் கதை சொல்லும் விதத்தை மாத்தறாங்க. எப்டியோ கதை சுவாரசியமா இருக்கற மாதிரி பார்த்துக்கறாங்க. இன்னைக்கு இருக்கற தலைமுறைக்குச் சில செய்திகளை இப்படித்தான் கொண்டு சேர்க்கவேண்டி இருக்கு. எம்.டி.வாசுதேவன்தான் மலையாளத்துல பீமனை மையமா வெச்சு மகாபாரதத்தை 'இரண்டாம் உலகம்'னு மாத்தி எழுதினாரு. ஞானபீட பரிசுகூட குடுத்தாங்க. அதனால கதையைச் சிதைக்காம யுத்திகள் மூலமாகச் சுவாரசியப்படுத்தினாப் பரவால்லதான்.

**மொழிபெயர்ப்பின் அவசியங்கள் குறித்துக் கூறுங்களேன்…!**

வேற நாட்டுக் கலாச்சாரங்களும் நம்ம நாட்டுக் கலாச்சாரங்களும் சேரும்போது பல புதிய வடிவங்கள் கிடைக்குது. அங்க என்ன நடந்துட்டு இருக்குனு நாம தெரிஞ்சுக்கணும். அதே சமயம் நம்ம என்ன பண்ணிட்டு இருக்கோம்னு அவங்களுக்கும் தெரியப் படுத்தணும். அதுக்கு மொழிபெயர்ப்பு அவசியம்.

லட்சிய நோக்கமுள்ள எழுத்துதான் முதல்ல இருந்தது. லட்சியம் மட்டும் இல்ல. வாழ்க்கை என்பதில் பல சிக்கல்கள் இருக்குன்னு மேற்கத்திய இலக்கியம் சொல்லுச்சு. முதல்ல அறம் சார்ந்தது செவ்வியல் இலக்கியம்னு சொல்றது, அடுத்து ரொமாண்ட்டிசம், ரியலிசம், நியோ ரியலிசம்….. இப்போ மேற்கத்திய நாடுகள் எல்லாவற்றையும் கடந்து மார்டனிசம், போஸ்ட் மார்டனிசம் அப்டின்னு பல வடிவங்களுக்குப் போறாங்க. அதுக்கு நிகரா அந்தச் சமுதாய அமைப்பும், உற்பத்தி முறையெல்லாமும் மாறுது. ஒவ்வொரு தலைமுறையும் மாறுது. அந்தந்தக் காலத்தை இலக்கியத்துல பிரதிபலிக்கறாங்க. அப்படிப்பட்ட மாறுதல்கள் அதற்குள் நடந்து கொண்டே இருக்கு. நகரத்தின் தாக்கம் வந்த பின்னால கிராமத்தின் இறுக்கங்கள் தகர்ந்து இன்னொரு கட்டத்துக்குப் போகுது. முன்னெல்லாம் கிராமம்னாக் கிராமம்தான். நகரத்துக்காரன் கிராமத்துக்குள்ள வர மாட்டான். கிராமத்துக்காரன் நகரத்துக்குள்ள போக மாட்டான். இப்போ ரெண்டும் நடக்குது. இவன் அங்கப் போறான். அவன் இங்க வர்றான். எல்லா ஊர்லயும், எல்லா நாட்டுலயும் இது நடக்குது. இதுதான் வளர்ச்சி. அப்டித்தான் நிறைய மாற்றங்கள் வர முடியும். மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்வதுதான் மனிதனின் பரிணாம வளர்ச்சி. மொழிபெயர்ப்பு மனித வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகிறது. உலக மனிதனைத் தெரிந்து கொள்ள…. வேற்று நாட்டைப் புரிந்துகொள்ள மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் வாயிலாகத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

**தொழில் கலாச்சாரம் குறித்து…!**

முதலில் இங்க நிலத்தை வைத்துத்தான் உற்பத்தியைச் செஞ்சுட்டு இருந்தான். ஆங்கிலேயனோ… பிரெஞ்சுக்காரனோ…. போர்ச்சுக்கீசியனோ…. இங்க வரும்போது அவனோட தொழில் நாகரிகத்தை உள்ள கொண்டு வர்றான். அந்தச் சமயத்துல நம்ம வாழ்க்கைமுறையும் மாறுது. கார்ல் மார்க்ஸ் அழகாச் சொல்வாரு. மூன்று விஷயங்கள்தான் வாழ்க்கையைத் தீர்மானிக்குது. உற்பத்தி முறை, உற்பத்திப் பங்கீடு, உற்பத்தி விநியோகம்னு.

பல பேர் சேர்ந்து உற்பத்தி பண்ணுவான். அப்டி அது தொடரும்போது தொழில் கலாச்சாரம் வளருது.

**கலை இலக்கியத்தின் நோக்கம்….!**

மனிதனை இலக்கியம்தான் செழுமைப் படுத்துகிறது. மனிதனுடைய உணர்வுகளை ரிபைண்ட் பண்ணுகிறது. ஐம்புலன்களின் உணர்வுகளும் ஒழுங்கற்றவைதான். முரட்டுத்தனமானவைதான். அதையெல்லாம் சரிபடுத்துவது கலை இலக்கியம்தான். இப்போ ஒரு கோயில்ல ஒரு கலை நிகழ்ச்சின்னா… பல

தரப்பட்ட மக்களும் அந்தக் கோயிலுக்கு வர்றான். பல இனங்களாலும் மொழியாலும் சாதிகளாலும் மதங்களாலும் பிரிந்திருந்தபோதும் இந்தியாவை இங்கிருக்கும் கலை இலக்கியம் உணர்வுப்பூர்வமாக ஒருங்கிணைக்கிறது. குத்தினால் எனக்கு வலிக்கற மாதிரிதான அடுத்தவனுக்கும் வலிக்கும்னு உணரவைப்பது கலைதான்.

## இடதுசாரி சிந்தனையின் தேவை குறித்து...!

எப்போதுமே அது இருந்துதான் தீரும். அணு முதல் அண்டம் வரை பொருள்கள் முரண்பட்டுத்தான் இருக்கும். நீங்க அணுவை எடுத்துக்கிட்டீங்கன்னா ப்ரோடான்ஸ் நியூட்ரான்ஸ்னு இருக்கும். ப்ரோடான்ஸ் பாசிட்டிவ் சார்ஜ். பிரபஞ்சம் முழுவதுமே இந்த இயங்கியல்தான். இப்போ ஒரு சக்தி வலுவா இருக்கும்போது இன்னொரு சக்தி வலுவில்லாமத்தான் இருக்கும். இதே கோட்டுலதான் உடைமையை முன்னிறுத்தி உற்பத்தி பண்றவன் முதலாளி ஆகிடறான். அவன்கிட்ட வேலை செய்யறவன் தொழிலாளி ஆகிடறான். முதலாளி குடுக்கறதத்தான் தொழிலாளி வாங்கிக்கணும். இங்கதான் வர்க்க வேறுபாடு தொடங்குது. அவன் கண்ட்ரோல்லதான் இவன் இருக்கவேண்டி இருக்கு. சமூக அந்தஸ்து இரண்டு பேருக்குமே மாறுபடுது. உற்பத்தி பாதிக்கப்பட்டா முதலாளி ரொம்பப் பாதுகாப்பா இருப்பான். தொழிலாளி சீரழிஞ்சிட்டுப் போவான். மார்க்ஸ் எல்லாம் வர்றதுக்கு முன்னாடி பெரும்பாலும் அடிமைகளாகத்தான் இருந்தாங்க. நில உற்பத்தி முறையிலேயே அடிமை முறை இருக்கு. இடதுசாரி சிந்தனைதான் அவனை அடிமை என்றே உணர்த்துது. அதுக்கு அப்புறம்தான் அவன் சிந்திக்கத் துவங்கறான். நாம தனித்தனியா இருக்கறவரை இப்படித்தான் இருக்கும். நாம ஒற்றுமையா இருந்தாத்தான் சமமா மாற முடியும்னு நம்பறான். அந்த நம்பிக்கையை இடதுசாரி சிந்தனைதான் குடுக்குது.

## சோஷலிச உற்பத்தி முறை...!

1917க்குப் பின்னால உலகத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் வருது. சுரண்டல்கள் குறைவாகி யிருக்கு. இப்போ அடிமைமுறைங்கிறது போய்டுச்சு. இன்னைக்கு எந்த நாட்லயும் தொழிலாளியை அடிமையா நடத்தமுடியாது. இப்போ உதாரணத்துக்குத் திருப்பூர்ல தொழிலாளியைக் கை வைச்சீங்கன்னாப் பொருளை வெளிநாட்டுக்காரன் வாங்க மாட்டான். எல்லா ரிப்போர்ட்டையும் கண்காணிக்கிறார்கள். சரியா இல்லைனா ஆர்டரக் கேன்சல் பண்ணிடுவான். இங்க, கோடிக்கணக்கில லாஸ் ஆகிடும். அதுக்குப் பயந்துக்கிட்டே கம்பெனியை ஒழுங்கா நடத்துவான். ஆக, இவனும் ஆர்கனைஸ் ஆகி ஒரு ஒழுங்குக்குள்ள வந்துடுவான்.

ஒரு கட்டம்வரை சோஷலிச உற்பத்தி முறை சுயதேவையைப் பூர்த்தி செய்தால் போதும் என்றிருந்தது. ரஷ்யாவுல உணவு உடை இருப்பிடம் இந்த மூனுக்காகத்தான் உழைச்சான். லாபத்துக்கேற்ப உற்பத்தி கிடையாது. தேவைக் கேற்பத்தான். மக்களுக்கு என்ன தேவையோ அதை உற்பத்தி பண்ணி விநியோகம் பண்ணிட்டு இருந்தான். ரஷ்யாக்காரன் எந்த நாட்டுல கம்யூனிஸ்ட் இருக்கோ அங்கெல்லாம் மறைமுகமா உதவி செஞ்சான். சைனாக்காரனும் முதல்ல சுயதேவைதான்னு சொல்லிட்டு இருந்தான். ஆனா ஒரு கட்டத்துல முரண்பட்டுச் சைனா அந்த வேலையச் செய்யல. மா சே துங்க்கு அப்புறம் அவன் யோசிச்சான். உலகம் முழுக்க சயின்ஸ் அண்ட் டெக்னாலஜில பயங்கரமா வளந்துட்டு இருக்கான். நாம இன்னும் பழைய உற்பத்தி முறையிலேயே இருக்கோமேன்னு யோசிச்சான். நாமளும் மாடர்ன் ஆகணும்னு, சுதந்திரம் குடுத்துட்டு, எவனுக்கும் சொந்தச் சொத்து கிடையாது. பிரைவேட் ப்ராப்பர்ட்டினு எவனுக்கும் கிடையாது. எல்லாமே அரசுக்குக் கீழதான்னு கொண்டுவந்துட்டான். இப்பவும் அப்படித்தான். ஒரு சொத்து உங்க கையில ஒப்படைக்கலாம். நீங்க கூட போய் ஒரு தொழில் தொடங்கலாம். குடுப்பான். ஆனா அதை விற்பதற்கும் வாங்குவதற்கும் உங்களுக்கு உரிமை கிடையாது. நீங்க வாடகை கட்டணும். அவன் கண்டிஷன்படி லேபர்க்கு என்ன குடுக்கணுமோ அதைக் குடுக்கணும். கவர்ன்மெண்ட்டுக்கு எவ்ளோ குடுக்கணுமோ அவ்ளோ குடுக்கணும். உற்பத்தி பண்ணலாம். ஏற்றுமதி பண்ணலாம். நீங்க எவ்ளோ எடுக்கணுமோ அவளோதான் எடுக்கணும். அப்டி வரையறை பண்ணியிருக்கான். அப்போ லஞ்ச லாவண்யம்.. ஏற்றத்தாழ்வு.. ஒரே பக்கம் பணம் குவிவது எல்லாமே தவிர்க்கப் படுகிறது. சைனா இன்னைக்கு நிறைய ஓவர்டேக் பண்ணிட்டான்.

**இன்றைய நவீன எழுத்தாளர்களைக் கவனிக்கிறீர்களா...?**

கண்டிப்பாகக் கவனிக்கிறேன். அருமையா எழுதறாங்க. நிறைய பேர் துடிப்போடு புதிய சிந்தனையோடு வர்றாங்க. நாங்க வந்த காலத்துல அறியாமை ஏழ்மை வறுமை எல்லாம் இருந்துச்சு. அதைப் பத்தி விஷயங்களை எழுதினோம். இன்னைக்கு நவீன வாழ்க்கைமுறை வந்துருச்சு. சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி இன்னைக்கு மக்கள் வாழ்வுக்குச் சாதகமா இருக்கு. அதைப்பத்தி எழுதறாங்க. ரொம்ப அறிவுக் கூர்மையா அழகியலோடு வேறு கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். முன்பெல்லாம் ஒரு சோகம் இருந்தது. இன்று அப்படி இல்லை.

**காலச்சுவடு 'கிளாசிக் நாவல்' வரிசையில் உங்கள் 'ஈரம் கசிந்த நிலம்' நாவல் இடம் பிடித்திருக்கிறது... எப்படி உணர்கிறீர்கள்.?**

சந்தோஷமாக இருக்கிறது (ஒரு நேர்மையான சிரிப்பு சிரிக்கிறார்).

**ஈரம் கசிந்த நிலம்...?**

எழுதத் தொடங்கிய ஒரு கட்டத்துல "ஈரம் கசிந்த நிலம்" ன்னு ஒரு நாவல் எழுதிப் புவியரசுகிட்ட குடுத்து நீங்க படிச்சாத்தான் நான் போட்டிக்கு அனுப்புவேன்னு சொன்னேன். அவர், இவ்ளோ பக்கம் இருக்கு.. நான் எங்க படிக்கறது.. நீங்க அனுப்புங்க... பார்த்துக்கலான்னு சொல்லிட்டார். ஞானி ரொம்ப நல்லாருக்குன்னு சொல்றாரு. நீங்களும் படிச்சிட்டா நல்லா இருக்கும்னு சொன்னேன். சரின்னு அப்டி இப்பிடின்னு படிச்சிட்டார் போல. நான் அடுத்த நாள் போறேன். எல்லாரும், 'காலையிலருந்து புவியரசு உன்னைத் தேடிட்டு இருக்காரு.. போங்க'ன்னு சொன்னாங்க. நான் போனதும்.. 'ரவி நாவல் அற்புதமா வந்திருக்கு' ன்னார் புவியரசு. அப்புறம் 'விஜயா' வேலாயுதத்துக்கிட்ட கொண்டு வந்து குடுத்தேன். 'இதை நாம போடறத விட சென்னைல யாராவது போட்டா இன்னும் நல்லா இருக்கும்'ன்னு யோசிச்சாரு. அந்த நேரத்துல 'அகிலன்' போட்டி நடக்குது. வேலாயுதமே அனுப்பி வெச்சாரு. அந்தப் போட்டில ஜெயமோகனோட 'ரப்பர்' நாவலுக்கு முதல் பரிசும் இரண்டாவது பரிசு "ஈரம் கசிந்த நிலம்" இந்த நாவலுக்கும் வருது. இந்த நாவலுக்குத்தான் முதல் பரிசு கொடுக்கணும்னு ஜூரில சொன்னதாகவும்... போன வருஷம் கோயமுத்தூர்க்குக் குடுத்திருக்கு.... இந்த வருசமும் வேண்டான்னுதான் அப்டி ஒரு நெகோசியேசன்க்குக் கொண்டுபோய் இந்த முடிவுக்கு வந்திருக்காங்க. அப்டிதான் ரெண்டாவது பரிசு கிடைச்சது. அப்புறம் அவுங்களே ஒரு வருசத்துக்கு அப்புறம் புக் போட்டு பாரதிய பாஷா விருதுக்கு அனுப்பியிருக்காங்க. அங்க அது வின் பண்ணிடுச்சு. பத்தாயிரம் ரூபாய் பரிசு. வாங்க கல்கத்தா போகணும். அப்போ கல்கத்தா போக என்கிட்ட காசு இல்ல. அப்புறம் வேலாயுதத்துக்கிட்ட போய்ச் சொன்னேன்.



"என்கிட்ட ஏதுங்க காசு? கல்யாணமான சமயம். வேலையும் இல்ல... என்ன பண்றது, அமௌண்ட்டைத் தபாலில் அனுப்பச் சொல்லிடுங்கனு சொல்லிட்டேன்"னு சொன்னேன். "அய்யய்யோ.. இதுக்கெல்லாம் நேர்லதான் போகணும். எவ்ளோ பெரிய மரியாதை..." அப்டீன்னுட்டு அப்புறம் அவரே அண்டர்டேக் பண்ணி அவரும் கூட வந்தாரு. அப்படித்தான் அந்த விருதை வாங்கினேன்.. (சிரித்துக்கொள்கிறார்).

'ஈரம் கசிந்த நிலம்'ல வர்ற கதாபாத்திரம் குறித்து, "ஐயோ ரவி.. 'அம்மணி'யக் கொன்னுட்டீங்களே" ன்னு ஞானி சொல்லி வருத்தப்பட்டார். அதுதான் 'ஈரம் கசிந்த நிலம்'க்குக் கிடைச்ச மிகப்பெரிய விருதா நினைக்கறேன்.

**எழுதுவது வரமா சாபமா..?**

நிச்சயமா வரம்.

• கவி : கார்த்திக் திலகன்
சித்திரம் : கொ.வடிவேல்



## கண் கலங்குதல்

ஒரு வெள்ளைத்தாளின் மத்தியில்
ஒற்றை எழுத்தை எழுதினேன்.
ஒரு வெற்றுக்காகிதத்தில்
என்னைப் போலவே
தன்னந்தனியாக நின்று தேம்புகிற
அந்த ஒற்றை எழுத்தைப் பார்த்துக்
கண் கலங்கிவிட்டேன்.

## களிமண் பற்றை

என்னை வனையும் விரல்களில்
கொளகொளத்துக் கூழாகவேண்டும்
என்று நினைக்கிற பைத்தியம் நான்.
மீண்டும் மீண்டும் அந்த விரல்கள்
தன்னை வனையும் சுகத்திற்காக ஏங்குகிற களிமண்
பற்றை நான்.
என்னை டா போட்டு அழைப்பவர்கள்
பற்றிய சிறுகுறிப்புகளால் நிறைந்ததுதான் எனது
சந்தோஷங்களின் பட்டியல்.
இன்னும் சொல்லப்போனால்
உங்களை ஒரு எழுத்தாக என் மீது
எழுதிப் பார்ப்பதற்கு
வெறுமனே காத்திருக்கும்
வெற்றுக்காகிதம் நான்.

## அரும்பும் எழுத்துக்கள்

நான் வெற்றுக்காகிதத்தையே
உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
அரும்பரும்பாக அதிலிருந்து
எழுத்துக்கள் முளைத்து
அர்த்த அடர்த்தியான
வார்த்தைக் கொத்துக்கள்
தோன்றுவதும் பின் மறைவதுமாய் இருக்கின்றன.
எனக்கு ஒரே யோசனையாக இருக்கிறது.
இந்த வெற்றுக்காகிதத்திற்குள்
இருக்கும் எழுத்துச்சுரப்பிகளை
இயக்குவது யார்?

## காற்றாக மாறினேன்

கவிதை என்பது
வெற்றுக்காகிதங்களில் மலரும்
ஒரு வினோதப்பூ.
அதன் ஒவ்வொரு அடுக்கிலும்
வெவ்வேறு வாசனைகள்.
சுரோணிதத்தைப் போலச் சுரக்கும்
அதன் மதுவில்
மூழ்கிக்குளிக்க விரும்பி நான்
காற்றாக மாறினேன்.
காத்திருந்த வினோதப்பூவைக்
கட்டி அணைத்து முத்தமிட்டேன்.
என் கொதிக்கும் முத்தத்தில்
அதிர்ந்துகொண்டிருந்தது
அதன் அல்லிவட்டம். ■

• முகம்மது பாட்சா

# புதுக்கவிதைகள்

**"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" – நன்னூல்**

காலம் சுழற்சிக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக்கொள்கிறது... புதிய சிந்தனைகளும், புதிய தத்துவங்களும் காலத்தின் படிக்கற்கள். பழமையைப் பேசிக்கொண்டு அங்கேயே நின்றுவிட்டால், நாம் குட்டையாகத் தேங்கிவிட வேண்டியதுதான்.


இலக்கணச்சிறையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பிறந்ததுதான் புதுக்கவிதைகள். மன்னர்களின் புகழ் பாடிக் கொண்டும், கடவுள்களின் துதி பாடிக்கொண்டும் இருந்த கவிதைகள், சமூக அவலத்தைச் சங்கடத்துடனே பேசின. சாதிய அவலங்களும், மதங்களின் துவேசங்களும் மக்களை இனம் பிரித்து இரசித்த சமூகத்தில்.. கட்டுடைத்து அவர்களின் அவலம் பொதுவில் பேசவேண்டியது கட்டாயமாகியது. தங்களை அறிவுஜீவிகளாகக் காட்டிக்கொண்ட ஒருவித அந்தஸ்துப் பிரியர்களிடம் மரபுக்கவிதைகள் சிக்கிக்கொண்டு, அவர்களைப்போலவே அங்கவஸ்திரத்துடன் திரிந்தன.

புதுக்கவிதைகளின் முன்னோடிகளாக உலகம் முன்மொழிவதில் மிக முக்கியமானவர்கள்... அமெரிக்காவின் வால்ட்விட்மன், இங்கிலாந்தின் எஸ்ரா பவுண்ட், டி.எஸ். எலியட், பிரான்சின் போதலேர் மற்றும் மல்லார்மே ஆவார்கள். Verse Libre, New Poetry, Free verse என்றெல்லாம் அழைக்கப்பட்ட இந்தப் புது வடிவம் தமிழில் முயற்சிக்கும்போது முதலில் வசனக்கவிதைகள் என்றும் பின்னர் லகு கவிதைகள், சுயேச்சா கவிதைகள், விடுநிலைப்பா என்றெல்லாம் அழைக்கப்பட்டாலும் பின்னாளில் புதுக்கவிதை என்ற அடைமொழியைப் பெற்றுக்கொண்டது. தமிழில் புதுக்கவிதை என்று பெயர் வைத்தது க.நா.சுப்ரமணியம் என்று தனது புதுக்கவிதையைப் பற்றிய நூலில் வல்லிக்கண்ணன் ஐயா அவர்கள் எழுதியுள்ளார்.

தமிழில் இதற்கான முயற்சியை முதலில் மேற்கொண்டவர் நமது தேசியக்கவி பாரதியார் அவர்கள்தான். ஹைக்கூவை முதலில் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்த்த பாரதியார், தனது வசனக்கவிதைகளின் மூலமாகவும் புதுக்கவிதையை அறிமுகம் செய்கிறார். அதேசமயம், 'காட்சிகள்' என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய கவிதைகள் கவிஞர் ஷெல்லி அவர்களின் 'புல்லின் இதழ்கள்' என்ற கவிதைத் தொகுப்பின் தாக்கமே என்ற கருத்தாடலும் இங்கு உண்டு.

**'வீமனும் அனுமானும் காற்றின் மக்கள் என்று புராணங்கள் கூறும்.**
**உயிருடையனவெல்லாம் காற்றின் மக்களே என்பது வேதம்.**
**உயிர்தான் காற்று.**
**உயிர் பொருள், காற்று அதன் செய்கை.**
**பூமித்தாய் உயிரோடிருக்கிறாள்.**
**அவளுடைய மூச்சே பூமியிலுள்ள காற்று.**
**காற்றே உயிர். அவன் உயிர்களை அழிப்பவன்.**
**காற்றே உயிர். எனவே, உயிர்கள் அழிவதில்லை.**
**சிற்றுயிர் பேருயிரோடு சேர்கிறது:' – பாரதியார்.**

பாரதியாருக்கு அடுத்துப் புதுக்கவிதையில் முன்னெடுப்பு செய்தவராக ந.பிச்சமூர்த்தி அவர்களையே அறியமுடிகிறது. அவரது கவிதைகள் 1934இல் இருந்து மணிக்கொடி இதழில் வெளிவரத்தொடங்கின. இவரது கவிதைகளைத் தொகுத்து 1975இல் எழுத்துப் பிரசுரம் வெளியீடாகச் சி.சு. செல்லப்பா அவர்கள் வெளியிட்டார். விடுபட்டிருந்த 8 கவிதைகளைத் தேடிச் சேர்த்துப் பிச்சமூர்த்திக்



கவிதைகள் என்ற பெயரில் 1985இல் க்ரியா பதிப்பகம் வெளியிட்டது.

“மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை
உடுத்தியிருக்கிறது
மலர்கள் வாசம் கமழ்கிறது
மரத்திலிருந்து ஆண்குயில் கத்துகிறது
என்ன மதுரம்! என்னதுயரம்!
ஆண்குயில் சொல்லுகிறது
காதற்கனல் பெருக்கெடுத்து விட்டது
கரைகள் உடைந்து போயின
நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன
குயிலி! காதல் நீரை வார்த்துத் தீயை
அணைப்பாய்
கருகிய வேர்களுக்கு உயிரை ஊட்டுவாய்
க்காவூ...க்காவூ...”

- ந.பிச்சமூர்த்தி அவர்களின் முதல் கவிதை.

அவரது கவிதைகளில் புதிய பரிமாணங்களும் படிமங்களும் விரவிக்கிடப்பதை நாம் இரசிக்க முடிகிறது. இருளும் ஒளியும் என்ற கவிதையில்

“ஒளியும் இருளும் கலந்து கூடி
நற்பாம்பும் சாரை போலும்
பின்னிக் காலம் ஓடலாச்சு”

- என்கிறார். அகலிகையைப் பற்றிய உயிர்மகள் என்ற தனது நீண்ட கவிதையில் தனது புதிய பார்வையைப் பதிக்கிறார் கவிஞர்...

“காட்டு மல்லிகைப் புதரில்
புகைபட்ட கண்ணை ஆற்ற
அகலிகை உலவும்போது
மின்னழகோன் அங்கு வந்து
மடை வாயைப் போன்றிரைந்து
உயிரினில் பள்ளம் செய்தான்
அகலிகையே!
உயிரின் மின்னே!
இன்ப துன்பம் ஒராப்பெருக்கே!
சட்ட திட்டம் ஒன்றமைத்தோன்
சூழ்ச்சியில் சிக்கி விட்டாய்
சொத்துரிமை போல உன்னைப்
பாவிக்கும் பிடாரன் கையில்
பல்லற்ற பாம்பாய்ச் சாவாய்!
குரலற்ற குயிலாய் இருப்பாய்!
புலனின்ப வைபவத்தைப்
பொசிப்பின்றி
உதறிவிட்டாய்!”



புதுக்கவிதைகளின் முன்னோடிகளில் சி.மணி அவர்களும் முக்கியத்துவம் பெறுகிறார்.

“துவைக்க
வெளுத்தது துணி..
ஞாயிறு வெறிக்க
வெளுத்தது நிலம்..
காதலன் சுவைக்க
வெளுத்தது இதழ்...
வாழ்வு தெறிக்க
வெளுத்தது முடி”

– சி.மணி


“ஏனிந்த வாழ்வென்னும்
வளர் குழப்பம்
முகமயிராய்க்
கவலையின்றிக்
கூட்டு வட்டிக்
கடனாய் வளர் குழப்பம்?”

– சி.மணி

புதுக்கவிதைகளை, அதன் ஆரம்பக் காலங்களில் எதிர்ப்பவராகவே எழுத்தாளர் புதுமைப்பித்தன் இருந்தார். பின்னர் அதன் செறிவுகளில் ஆட்பட்டு, புதுக்கவிதைகளை எழுதுவதில் அவரும் தனது பங்களிப்பை ஆற்றத் தொடங்கினார்...

‘வேதம் படித்திடுவோம்
வெறும் கை
முழம் போட்டிடுவோம்...
சாதத்துக்காகச்
சங்கரனை விற்றிடுவோம்
அஹிம்சைக் கதைபேசி
வித்தகனாம்
காந்தியினை
விற்றுப்
பிழைக்கின்றோம்!
இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்!’





புதுமைப்பித்தன் எழுதிய இந்தக் கவிதை 1945இல் கலாமோஹினி என்ற பத்திரிக்கையில் 'இணையற்ற இந்தியா' என்ற தலைப்பில் நீண்டவொரு கவிதையாக வெளியானது.

இதே காலகட்டத்தில் நகுலன், பசுவய்யா, தருமு சிவராமன் (பிரமிள்) என்று ஒரு நீண்ட பட்டியலே நகர்கிறது.

புதுக்கவிதைகள், சமூகத்தை மட்டுமல்லாமல் பிராய்டுவின் உளவியல் கோட்பாடுகளையும் பேசத் தொடங்கின. அதைப் பற்றிப் பின் நவீனம் பற்றிப் பேசும்போது விரிவாகப் பார்க்கலாம்.

1962இல் சி.சு.செல்லப்பா அவர்களின் முயற்சியால் புதுக்கவிதைகளைத் திரட்டிப் 'புதுக்குரல்கள்' என்ற தலைப்பில் முதன்முதலாகப் புதுக்கவிதைகளின் தொகுப்பு வெளியிடப்பட்டது.

புதுக்கவிதைகளைப் பற்றித் திறனாய்வு செய்யும் ஆய்வாளர்கள், மணிக்கொடி காலம் எழுத்துக் காலம் வானம்பாடிக் காலம் என்று பிரித்து வகைமை செய்கிறார்கள்… மணிக்கொடி மற்றும் எழுத்துப் பத்திரிக்கைகளுக்குப் பிறகு வானம்பாடி புதுக்கவிதைகளின் வளர்ச்சிக்குப் பெரும் துணை நின்றது… அப்போது அதிலெழுதிய கவிஞர்கள் வானம்பாடிக் கவிஞர்களென்றே அழைக்கப்பட்டார்கள். எழுத்து இதழ்சார்ந்த புதுக்கவிதை இயக்கத்தினர் 'வானம்பாடி' இயக்கக் கவிதைகளைப் புதுக்கவிதை என்றே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் சுவாரசியமானது.

வானம்பாடியின் குரல், உழைக்கும் மக்களின் குரலாக வெளிவந்தது. சமூகக் கொடுமைகளை எதிர்த்தது. சாமானியனின் குரலில் கவிதைகளைப் பேசத்தொடங்கியது. இதனால் புதுக்கவிதை பலராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. இடதுசாரிக் கொள்கைகள் இதன் மூலம் வெளிவரத்தொடங்கின. திராவிடச் சிந்தனைகள் இதனால் வளர்ந்தன என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதனையே பரிசோதனைக் காலம் (1934-1947), மறுமலர்ச்சிக் காலம் (1959 -1969), செல்வாக்குக் காலம் (1970க்கு மேல்) என்று புதுக்கவிதையின் வளர்ச்சியை அப்துல் ரகுமான் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.




வானம்பாடி இயக்கத்தின் கவிஞர்களாகச் சிற்பி, மு.மேத்தா, மீரா, பாலா, கங்கைகொண்டான், புவியரசு, அக்னிபுத்திரன், சி.ஆர்.ரவீந்திரன், ஈரோடு தமிழன்பன், தமிழ்நாடன், இன்குலாப், அப்துல் ரகுமான் என்று ஒரு சிறப்பான பட்டியல் உண்டு. வானம்பாடி இயக்கத்தைத் தீவிரவாதிகளின் கூடாரம் என்று சில தமிழறிஞர்கள் வெளிப் படையாகவே விமர்சிக்கவும் தொடங்கினார்கள்.

வானம்பாடியில் வெளியான கவிதைகளை, இலங்கையிலிருந்து வெளிவந்த டொமினிக் ஜீவா அவர்களின் மல்லிகை இதழ் தொடர்ந்து வெளியிட்டது.

புதுக்கவிதைகளில் ஆதிக்கம் செலுத்திய மு.மேத்தாவின் 'கண்ணீர்ப்பூக்கள்', மீரா என்கின்ற மீ.ராசேந்திரனின் 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' என்ற கவிதைத்தொகுப்புகள் பலராலும் பாராட்டப்பட்டன.

மரபுக்கவிதைகளுக்கு முக்கியத்துவம் அளித்த ஜனரஞ்சக இதழ்களும் தங்களின் போக்கை மாற்றிக்கொண்டு புதுக்கவிதையின் பக்கம் திரும்பின. வைரமுத்து, நா.காமராசன், மு.மேத்தா, பழனிபாரதி, முத்துக்குமார் இவர்களெல்லாம் புதுக்கவிதையின் அறிமுகத்தால் பின்னர், திரையிசைப் பாடல்களை எழுதச் சினிமா என்ற கலைக்கூடத்திற்குச் சென்றவர்கள். திரையிசை எழுதிக்கொண்டிருந்த கவிஞர் வாலி அவர்கள் புதுக்கவிதைகளை விரும்பி எழுதத் தொடங்கினார் என்பதும்கூட வரலாறுதான்.

மரபுக்கவிதைகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டு புதுக்கவிதைகள் வளர்ந்தது போல்தான் இன்று நவீனங்களும், பின் நவீனங்களும்கூட, திணறத்தான் செய்கின்றன….

– இன்னமும் அகழ்வோம் ■

• இரா.பூபாலன்

# கவிதை நிமித்தம் ஒரு பறத்தல்

( சாகித்ய அகாதமி இளம் எழுத்தாளர் சந்திப்புக்கு டெல்லி சென்ற பயண அனுபவங்கள்.. )






பயணம் எப்போதும் அனுபவங்களால் ஆனது. பழகிய பாதையிலேயே செக்கு மாடெனச் சுற்றிச் சுழலும் மனதைக் கொஞ்சம் மாற்றுப்பாதைக்கு அழைத்துச் சென்று ஆசுவாசப்படுத்துவது.

பயணம் நிறைய புதிய முகங்களை அறிமுகம் செய்கிறது, நிறைய புதிய சித்திரங்களை நம்முள் வரைகிறது. புதிய பாதைகள், புதிய இடங்கள், புதிய காட்சிகள் என ஒரு புதிய திசைப் பயணம் ஒரு புதிய வாழ்க்கையையே வாழச் செய்கிறது. அப்படியான பயணம் ஒன்று கவிதையின் நிமித்தம் அமைந்தால் எப்படி இருக்கும்? அப்படியான ஒரு பயணமாகத்தான் அமைந்தது டெல்லி பயணம். சாகித்ய அகாதமியின் இளம் எழுத்தாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தமிழகத்தின் சார்பில் கவிதை வாசித்துவிட்டுத் திரும்பியிருக்கிறேன். அந்த அனுபவங்கள் இன்னும் கொஞ்ச நாட்கள் டெல்லியின் மூடுபனியைப் போல நினைவின் வெளிகளில் மங்கலாகப் படர்ந்தபடியிருக்கும்.

இச்சந்திப்பில் கலந்துகொள்ள வேண்டும் எனச் சில மாதங்களாகவே கவிஞர் சிற்பி ஐயா கேட்டுக்கொண்டே இருந்தார். வேலைப்பளு, சொந்த நிகழ்வுகள் என ஏதாவது காரணத்தின் பொருட்டு என்னால் கலந்துகொள்ள இயலாமலே இருந்தது. இந்த முறை அவர் அழைத்ததும் மறுக்க இயலவில்லை. உடனே ஒப்புக்கொண்டேன். எப்போதும் வெளியூர்ப் பயணம் என்றால் தனியாக அல்லது நண்பர்களுடன் செல்லத்தான் வாய்க்கும். இந்த முறை டெல்லி செல்ல வேண்டியிருப்பதை வீட்டில் சொன்னவுடன் மகள் பாரதியும் 'நானும் வருகிறேன் அப்பா' என்றாள் ஆச்சர்யமாக. ஏதோ ஆர்வத்தில் கேட்கிறாள் என்று நினைத்து விட்டேன். ஆனால், மிகுந்த ஆர்வத்துடன் தினமும் கேட்கத் துவங்கிவிட்டாள். எப்போதும் இப்படி அவள் விரும்பியதில்லை. ஒன்றுக்கு இரண்டு முறை கேட்டுவிட்டுச் சரி என்று ஒப்புக்கொண்டேன். ஒருநாள் கவிதை வாசிப்புக்குச் சாகித்ய அகாதமியில் கலந்துகொள்வது, மேலும் இரண்டு நாட்கள் அவளுக்கு டெல்லியைச் சுற்றிக் காட்டுவது என்று திட்டமிட்டுக்கொண்டேன். நான் மூன்று நாட்கள் அலுவலகத்துக்கு விடுப்பு, அவள் பள்ளிக்கு விடுப்பு. இது எங்கள் இருவருக்குமே முதல் முறை.. இவ்வாறு தனியாகப் பயணிப்பதும் இத்தனை நாட்கள் விடுப்பு எடுப்பதுவும்.

ஜனவரி 31 மாலை நான்கு மணிக்கு, ரவீந்திர பவனில் கவிதை வாசிக்க வேண்டும். ஜனவரி 30 கிளம்புகிறோம். டெல்லியில் தட்பவெப்ப நிலை எட்டு டிகிரி என்றார்கள். குளிராடைகளையெல்லாம் வாங்கித் தயாராகிவிட்டோம். ஜனவரி 30 அன்று விமானம். பாரதிக்கு இது முதல் விமான அனுபவம். உற்சாகமாகக் கிளம்பிவிட்டாள். விமானம் பறக்கத் துவங்கியது.. மேகத்துக்கு மேல் பறக்கும் அனுபவத்தை ஒரு குழந்தையின் கண் கொண்டு பார்ப்பது அவ்வளவு

அழகான அனுபவமாக இருக்கும். பாரதியின் கண்களில் அது தெரிந்தது. சன்னல் இருக்கைகள் எப்போதும் குழந்தைகளுக்கானவை அல்லது வளர்ந்தவர்களைக் குழந்தைகளாக்குபவை என்று பேருந்துப் பயணத்தைப் பற்றி எப்போதோ ஒரு கவிதை எழுதியிருக்கிறேன். அது விமானப் பயணத்துக்கும் பொருந்துகிறதுதான். நாங்கள் சென்று சேரும்போது மாலை நான்கு மணியாகிவிட்டது. அங்கிருந்து கரோல் பாக் என்ற இடத்தில் ஒரு விடுதியில் சாகித்ய அகாதமி அறை ஏற்பாடு செய்திருந்தது. ஒரு மணி நேரப் பயணத்தில் அறையை அடைந்தோம். டெல்லியின் பனிக்காற்று முகத்தை ஈரமாக்கிக்கொண்டிருந்தது. அன்றைய மாலையை ஒரு சிறு நடைப்பயணத்துடன் டெல்லியின் தெருக்களை வேடிக்கை பார்த்து முடித்துக்கொள்ள விரும்பிக் கரோல் பாக் சந்தைக்குள் நடந்தோம். தம்பி தினேஷ் கவிபாடி, முகநூலில் என் நிலைத்தகவலைப் பார்த்துவிட்டு அழைத்தான், இரவு உணவுக்குச் சந்திக்கலாமா என்று. அவனே கரோல் பாக் வந்து தனது இந்திய வேளாண் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் விடுதிக்கு அழைத்துச் சென்றான். மரங்கள் அடர்ந்த அந்தக் கல்லூரியின் சாலை முகப்பிலிருந்து விடுதி வரை ஒரு மைல் தூரம் நீண்டிருந்தது. குளிர் பொங்கும் இரவில் அந்தச் சாலையில் நடப்பதைப் பாரதி கொண்டாட்டமாக்கிக் கொண்டாள். அங்கு நிறைய தமிழ் மாணவர்கள், அவர்களுடன் பேசிவிட்டு இரவு உணவை முடித்துவிட்டு வந்தோம்.

ஜனவரி 31, மாலை நான்கு மணிக்குத்தான் எனது கவிதை வாசிப்பு அமர்வு. ஆனால், காலையிலேயே சாகித்ய அகாதமி சென்றுவிடுவதாகத் திட்ட மிட்டோம். காரணம், அதற்கு முந்தைய தினம்தான் எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு சஞ்சாரம் நாவலுக்கு இந்த ஆண்டின் சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டிருந்தது. அவருடன் பேராசிரியர் இரா.வேங்கடாசலபதி அவர்கள் உரையாடும் நேர்முகம் என்ற நிகழ்வை ஒருங்கிணைத்திருந்தார்கள். அந்த நேர்முகத்தில் கலந்துகொள்ளலாம், மேலும் பல நிகழ்வுகள் இருந்தன.. அவற்றிலும் கலந்துகொள்ளலாம் என நினைத்தோம். அன்றைய நிகழ்வுக்கு டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் வந்திருந்தனர். தம்பி தமிழ்பாரதனை அங்குச் சந்தித்ததில் மகிழ்ச்சி. முழுநாளும் உடன் இருந்தான். பேராசிரியர் இரா.வேங்கடாசலபதி எழுத்தாளர் எஸ்.ரா. அவர்களை மிகச் சிறப்பாக நேர்முகம் செய்தார். அவரது இயல்பான கேள்விகளுக்கு எஸ்.ரா. உடனடியான அதே சமயம் ஆழமான பதில்களைத் தந்தார். தான் கதைகளால் ஆனவன், கட்டுரை, சிறுகதை, நாவல் அல்லது பத்தி என எதை எழுதினாலும் அதில் கதை இருக்கும் என்றார். மிக அழகான உரையாடலாக அது அமைந்தது. நிகழ்வின் பின்னர் மாணவர்களுடன் தரையில் வட்டமாக அமர்ந்து வெகுநேரம் உரையாடிக் கொண்டிருந்தார். எழுத்தாளர் மாலன், மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதில் மகிழ்ச்சியாக இருந்தது.

மாலை நான்கு மணிக்குக் கவிதைக்கான அமர்வு. எனது கவிதைகளை மங்கலபிரதாபன், அனாமிகா ரிஷி, சிந்து ஆகியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்திருந்தனர். ஆங்கிலத்தில் இரண்டு கவிதைகள், தமிழில் ஒரு கவிதை வாசிக்கக் கேட்டிருந்தார்கள். தயாராக இருந்தேன்.

இளம் எழுத்தாளர் சந்திப்புக்கு அனைத்து மாநிலங்களில் இருந்தும் இளம் கவிஞர்கள் வந்திருந்தனர். பெரும்பாலும் இந்தியில் வாசித்தனர். சிலர் ஆங்கிலத்தில் வாசித்தனர். சுஃபியா, ஸ்ரீஜித் ஆகியோர் நன்றாகப் பேசினார்கள், ஸ்ரீஜித் மலையாளத்தின் சமகால இலக்கியப் போக்குகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். எனது முறை வந்ததும் கவிதைகளை வாசித்தேன். கவிதை வாசிப்பை ஒரு திருவிழா போலச் சாகித்ய அகாதமி கொண்டாடியதைப் பார்த்தேன். கவிதைகளை நேசிப்பவனுக்கு அது எவ்வளவு பெரிய ஆறுதலாக இருந்திருக்கும். அப்படித்தான் இருந்தது.

மாலை மலைமந்திர் கோவிலுக்குத் தமிழ்பாரதனுடன் சென்றுவிட்டு, தில்லி தமிழ்ச்சங்கத்துக்குச் சென்றோம். அங்கு எஸ்.ரா. அவர்களுக்குப் பாராட்டு விழா. நான் சென்றதன் முக்கியக் காரணம் ஷாஜகான் ஐயாவையும், கவிஞர் சுரேஷ் பரதனையும் சந்திக்க. சுரேஷ் பரதனின் ஊர் நடுவே ஒரு வன தேவதை கவிதைத் தொகுப்பை வாசித்திருக்கிறேன். சிறப்பான தொகுப்பு. அவரது கவிதைகளை இருமுறை பொள்ளாச்சி இலக்கிய வட்டத்தின் படித்ததில் பிடித்தது பகுதியில் பகிர்ந்துகொண்டிருக்கிறேன். ஆகவே அவரைச் சந்திக்க ஆவலாயிருந்தேன். ஷாஜகான் ஐயாவின் எழுத்தும் சமூகச் செயல்பாடுகளும் எப்போதும் நான்

வியந்து பார்க்கும் ஒன்று. ஆகவே அவரையும் சந்திக்க விரும்பினேன். அதிக நேரமில்லை, காரணம் பாரதியும் காலையிலிருந்து இலக்கியத்தின் முகத்திலேயே திரும்பத்திரும்ப முழித்ததால் சோர்வாக இருந்தாள். சுரேஷ் பரதன், வனிதா ரெஜி (சுரேஷ் பரதனின் மனைவி), ஷாஜகான் ஐயா, தமிழ்பாரதன் எனக் கொஞ்சம் பேச்சு.. ஒரு குவளை காபி. அவ்வளவுதான்.. வேகமாக அறைக்கு வந்துவிட்டோம். அன்று மட்டும்தான் பாரதி வெகுசீக்கிரம் உறங்கிவிட்டாள்.

வெள்ளிக்கிழமை, டெல்லியைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பினோம். பணிக்கர் டிராவல்ஸில் முன்பதிவு செய்திருந்தேன். தினமும் காலையில் ஒரு பேருந்து டெல்லி முழுக்கச் சுற்றிக்காட்டச் செல்லும். ஒரு ஆளுக்கு நானூற்று ஐம்பது ரூபாய். குதுப்மினார், செங்கோட்டை, மகாத்மா காந்தி சமாதி, தாமரைக்கோவில் என டெல்லி முழுக்கச் சுற்றிக் காட்டினார்கள். பேருந்தில் நிறைய தமிழர்கள் இருந்தனர். ஒவ்வொரு இடத்திலும் இறக்கி விட்டுவிட்டு அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் கால அவகாசம் தருவார்கள். அதற்குள் பேருந்துக்குத் திரும்பிவிட வேண்டும். முதல் இரண்டு இடங்களில் நானும் பாரதியும் நெடுநேரம் சுற்றிவிட்டுத் தாமதமாக வந்தோம். வழிகாட்டி சொன்னார். ‘சீக்கிரமாக வாங்க.. இல்லை என்றால் பேருந்து கிளம்பிவிடும். அடுத்த இடத்துக்கு ஆட்டோ பிடித்துத்தான் வர வேண்டும்’ என்றார். அடுத்தடுத்த இடங்களில் சரியான நேரத்துக்கு வந்துவிட்டோம்.

சனிக்கிழமை ஆக்ரா சென்றுவிட்டு இரவு விமானத்தில் ஊர் திரும்புவதாகத் திட்டம். பணிக்கர் டிராவல்ஸில் அதற்கும் ஒரு பேருந்து இருக்கிறது. ஒரு ஆளுக்கு ஆயிரத்து நூறு ரூபாய். ஆனால் அவர்கள் டெல்லி திரும்ப இரவு பத்து மணி ஆகிவிடும், நான் விமானத்தைப் பிடிக்க முடியாது. ஆனால், ஆக்ரா போக பாரதி ஆர்வமாக இருந்தாள். எனவே, நண்பரிடம் சொல்லி ஆக்ராவுக்கு டாக்சி ஏற்பாடு செய்துகொண்டோம். நண்பரும் எங்களுடன் இணைந்துகொண்டார். அதிகாலை ஐந்து மணிக்கே கிளம்பவேண்டும். நான்கு மணிக்கு எழுந்து குளிக்கவேண்டும். பள்ளிக்குக் கிளம்ப அத்தனைப் பாடுபடும் பாரதி ஒரு மறுப்பும் இல்லாமல் நான்கு மணிக்கு எழுந்துவிட்டாள். வாகனம் கிளம்பும்போது பார்க்கிறோம்.. எதிரில் ஒரு வெண் திரையெனப் பனி படர்ந்து கிடக்கிறது. சாலை தெரியவேயில்லை. கார் கண்ணாடி முழுதும் பனி படர்கிறது. ஆனால் அவற்றை அவ்வப்போது துடைத்துக்கொண்டு வண்டி போய்க்கொண்டே இருக்கிறது. சில்லென்றிருந்த அனுபவம் அது. மதுராவில் கிருஷ்ணன் பிறந்த இடம், ஆக்ரா கோட்டை மற்றும் தாஜ்மகால் சென்றோம். பனி மூடிக்கிடந்த தாஜ்மகாலைத் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டே இருக்கலாம். அவ்வளவு அழகு, ஒரு வெள்ளை நிறப் பிரம்மாண்டம். அதற்குள்தான் மும்தாஜும் அருகிலேயே ஷாஜகானும் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். உலகின் மிக அழகான ஒரு கல்லறையில் உறங்கும் பேறு பெற்றவர்கள்.

நாங்கள் திட்டமிட்டு நேரமின்மையால் அக்ஷர்தாம் கோவிலுக்குச் செல்ல இயலவில்லை. சென்றமுறை நான் சென்றபோதும் அங்குச் செல்ல இயலவில்லை. இன்னொரு முறை பார்க்கலாம் என்று நினைத்துக்கொண்டு திரும்பி வரும்போது ஒரு குறுஞ்செய்தி வந்தது. உங்களது விமானம் இரண்டுமணிநேரம் தாமதமாகும் என. டாக்சியை அப்படியே அக்ஷர்தாம் கோவிலுக்கு விடச் சொல்லிவிட்டோம். இரவு ஏழு மணிக்குத் தினமும் அக்கோவிலில் ஒலி ஒளி அமைப்புகளுடன் அரை மணி நேர இசை நிகழ்ச்சி ஒன்று நடக்கும். முழுமையாக அதைப் பார்த்தோம். அற்புதம். தொழில் நுட்பத்தின் பிரம்மாண்டத்தை மிகப் பொருத்தமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஏராளமான பார்வையாளர்கள் அதற்கு. இரவு சீக்கிரமாக விமான நிலையம் வந்துவிட்டோம். கோவை வந்து சேர அதிகாலை மூன்று மணி ஆகிவிட்டது. வீட்டில் அனைவரும் வந்து அழைத்துச்சென்றார்கள். இந்தப் பயணம் தந்த நினைவுகள் அவ்வளவு சீக்கிரம் அழியாது மனதை விட்டு. அப்படித் தற்காலிகமாக மறந்தாலும் ஒவ்வொரு இடத்திலும் நாங்கள் எடுத்துக்கொண்ட நூறு புகைப்படங்கள் அந்த மகிழ் கணத்தினை உறைவித்துத் தரும்.

நான் பள்ளி நாட்களில் அடிக்கடி விமானத்தை வரைந்து பார்ப்பேன். கோட்டோவியத்தில் வரைய எளிதான ஒரு கனவு வாகனம் அது என்பதால். இத்தனை வருடம் ஆகியிருக்கிறது அந்தக் கனவுக்குள் என்னைப் பொருத்திக்கொள்ள. இந்த முறை என்னை இவ்வளவு உயரத்தில் பறக்கவைத்த என் கவிதைகளுக்கு நன்றி. கவிதைதான் என் சிறகு. அதைப் பொருத்திக்கொண்டுதான் நான் கனவிலும் கண்டிடாத வெளிகளில் எல்லாம் பறந்து திரிகிறேன். இப்போது கூடடைகிறேன். ■

# சாய்ந்த கோபுரமும் சாயாத மனித நம்பிக்கையும்

• பிரேமபிரபா

**கா**லை பத்து மணி. விசாரணைக் குழு அங்கத்தினர்கள் யாவரும் அவைக்கு வந்துவிட்டார்கள். விசாரணைக் குழுத் தலைவன் தன் இருக்கையில் வந்தமர்ந்தார். அவரின் இருக்கைக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கும் அலங்காரச் சர விளக்கு காற்றிற்கு மெதுவாக முன்னும் பின்னும் அசைந்தாடியது. கைதிக் கூண்டில் நின்றுகொண்டு அதையே உற்றுப் பார்த்த அந்த முதியவருக்கு உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரத்திற்கருகில் இருக்கும் தேவாலயத்தின் அலங்கார விளக்குதான் ஞாபகத்திற்கு வந்தது. அவருக்கு அப்போது வயது இருபதுதான் இருக்கும். தேவாலயத்தின் சர விளக்கு காற்றில் ஆடும்போதெல்லாம் தன் மணிக்கட்டின் நாடித் துடிப்பின் மூலம், சரவிளக்கின் ஊசலாட்ட நேரத்தைக் கணக்கிடுவார். ஒவ்வொரு ஊசலாட்ட நேரமும் ஒரே கால அளவில் இருப்பதாக அப்போதே அவர் கண்டறிந்தார். நீண்ட நேரம் சர விளக்கை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த முதியவரைப் பார்த்து விசாரணைக் குழுத் தலைவர் “உங்களின் முதிய வயது கருதி ஒரு கடைசி சந்தர்ப்பம் அளிக்கிறோம். சூரியனைச் சுற்றித்தான் எல்லாக் கிரகங்களும் சுற்றுகின்றன என்ற இயற்கைக்கு எதிரான தத்துவத்தைப் போதிக்கும் கோபர் நிக்கஸின் கோட்பாட்டை மறுதலித்து ஒரு அறிக்கை வெளியிட்டால் போதும். உங்களை மன்னித்து விடுதலை அளித்துவிடுவோம்'' என்றார். சபையோரின் கண்களில் தெரியும் மூடத்தனத்தைக் கண்ட அந்த முதியவர் “என்னைப் பொய் கூற நிர்ப்பந்திக்கத் தங்களால் நிச்சயம் முடியாது” என்று வெகு நிதானமாக வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்.



“ஐயா, தாங்கள் செய்த இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா? திருச்சபையை அவமதித்த குற்றத்திற்காகவும், இயற்கைக்குப் புறம்பான தத்துவத்தை மக்களிடையே பிரசங்கித்ததற்காகவும், இத்தாலிய அரசியல் சட்டப்படி ஆயுள் தண்டனை கிடைக்கும்” என்று மூச்சிறைக்கப் பேசி முடித்துத் தன் கையில்

இருக்கும் தாளினைக் குறுக்குவசமாக இரண்டாக மடித்து இருக்கையில் வந்தமர்ந்தார் குழுத் தலைவர்.

நிச்சயம் தன்னைத் தண்டனைக்குள்ளாக்கு வதற்கான அனைத்து முயற்சிகளிலும் சபையோர் அனைவரும் திட்டமிட்டு இயங்குவதை அறிந்த முதியவர் “பரவாயில்லை சீமான்களே. என்னால் நிச்சயம் தங்களின் தவறான கருத்துக்களுடன் ஒத்துப் போக முடியாது. நேரத்தை வீணடிக்காமல் எனக்கான தண்டனையைத் தாங்கள் தாராளமாக வழங்கலாம்” என்றார்.

முதியவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது. அவரின் வயது கருதித் தெற்கு பிளாரென்ஸில் உள்ள தனி வீட்டில் அவரைச் சிறை வைத்தார்கள். நகர எல்லைக்கு அப்பால் இருந்ததால் எந்தவித இரைச்சல்களும் இல்லாமல் நெடிய அமைதி அங்கு சூழ்ந்திருந்தது.


அன்று பலத்த மழைக்குப் பிறகு லேசான தூறல் விட்டுவிட்டுத் தூறிக்கொண்டே இருந்தது. வீட்டைச் சுற்றிலும் தேங்கிய மழைநீர்த் தேக்கங்களில் வீட்டின் வடிவம் தெளிவாகப் பிரதிபலிப்பதும், அடுத்த நொடியிலேயே மழைத்துளிகள் பட்டுக் கலைவதுமாக இருந்தது. அகன்ற அந்த வீட்டு வாசலின் இருபுறமும் நிற்கும் அரசாங்கக் காவலர்கள் தத்தம் பணி முடிய அடுத்து வரும் காவலர்களுக்காகப் பொறுமையின்றிக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

முதியவரின் கண்பார்வை மங்கிக்கொண்டே வந்தாலும், எப்போதும் எதையாவது படித்துக் கொண்டும், எழுதிக்கொண்டும்தான் இருப்பார். குளிரின் அவதி தாங்காமல், இரண்டு சிறிய விறகுத் துண்டங்களை நடு அறையில் இருக்கும் கணப்பு ஏற்படுத்தும் பகுதியில் போட்டு மீண்டும் ஜன்னலருகே வந்து நின்றார். பழைய காவலர்களின் பணி நேரம் முடிந்து புதுக் காவலர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். ஈரம் படிந்த சுற்றுச் சுவர்களில் பற்றித் தொங்கிக் கொண்டிருக்கும் சிறு மலர்க் கொடிகள் ஒன்றோடொன்று மோதிக் காற்றிற்கு அசைந்தாடின. திரைச் சீலைகளற்ற விசாலமான கண்ணாடி ஜன்னலுக்கு அருகில் உள்ள சாய்வு நாற்காலியில் அமர்ந்த முதியவரின் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. அந்த முதியவர்தான் உலகப் புகழ்பெற்ற வான சாஸ்திர மேதையான கலீலியோ கலீலி.

வசந்த காலம் என்பதால் அந்தக் கற்பாலத்தில் வழக்கத்திற்கு மாறாக ஏராளமான பட்டாம் பூச்சிகள் பறந்துகொண்டிருந்தன. மழை நீரினால் பாசி படர்ந்த பாலச்சுவர்களில் சிறுசிறு ஊதாப்பூக்களும் ஆங்காங்கே பூத்திருந்தன. பாலத்தின் கைப்பிடிச் சுவற்றினைப் பற்றியபடி நின்றுகொண்டிருந்தான் மாசிமோ. தன் மாமா அண்டோனியோவின் படகை எதிர்பார்த்தபடி நின்றிருந்தவன், அவன் அம்மா கொடுத்தனுப்பிய உணவுப் பொட்டலத்தைச் சுவற்றின் மேல் வைத்து அதைத் தன் வலது கையால் பாதுகாப்பாக அரவணைத்திருந்தான். பாலத்தின் கீழ் இருக்கும் குறுகிய கணவாய் பகுதி வழியாக மாமாவின் படகு கடந்துசெல்லும் நேரம் பார்த்து மாசிமோ ஒரு கையில் சீஸ் பொட்டலத்தையும், மறுகையில் ரொட்டித் துண்டையும் ஒரே நேரத்தில் கீழே போட்டான். அதைத் தன் இரு கைகளாலும் பெற்றுக்கொண்ட அண்டோனியோ மாலை சீக்கிரம் வீடு திரும்பி விடுவேனென்று உரத்த குரலில் கூறி, மாசிலோனாவைப் பார்த்து நீண்ட நேரம் கை அசைத்தான். இதை மிக அருகில் இருந்து கூர்ந்து கவனித்த கலீலியோவின் விஞ்ஞான மனதில் ஒரு பொறி தட்டியது. ஒரு குறிப்பிட்ட உயரத்தில் இருந்து வித்தியாசமான எடையில் இரண்டு பொருட்களைக் கீழே போட்டால், ஏறக்குறைய இரண்டும் ஒரே நேரத்தில் பூமியை வந்தடையும் என்ற அறிவியல் உண்மையை நிரூபிக்க அவர் மிகவும் போராடவேண்டி இருந்தது. அரிஸ்டாட்டலின் தத்துவப்படி பொருட்கள் பூமியை வந்தடையும் நேரம், அதன் தம் எடையைப் பொறுத்துத்தான் என்ற கருத்தியலைப் பொய்ப்பிக்கக் கலீலியோ அரும்பாடுபட்டு ஏராளமான பரிசோதனை களைப் பிஸ்ஸாவில் அமைந்த உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரத்தில் தான் மேற்கொண்டார். அவரின் ஆராய்ச்சிக்குத் துணையாக மாசிமோவும் உடன் இருந்தான்.

ஒவ்வொரு முறையும் சாய்ந்த கோபுரத்தின் மணிக்கூண்டில் நின்றுகொண்டு கலீலியோ மாறுபட்ட எடைகளில் உள்ள இரண்டு உலோகப் பந்துகளை மேலிருந்து கீழே போட, மாசிமோ அவைகள் தரைக்கு வந்தடையும் நேரத்தைக் குறித்துக்கொள்ள வேண்டும். கலீலியோவின் கையிருப்பில் உள்ள உலோகப்பந்துகள் தீர்ந்தவுடன் மணிக்கூண்டில் இருந்து மாசிமோவிற்குச் சைகை செய்வார். அவனும் கீழே விழுந்த அனைத்து உலோகக் குண்டுகளையும் சேகரித்துக்கொண்டு 294 படிக்கட்டுகளைத் தாண்டி மேலே இருக்கும் மணிக்கூண்டிற்கு வந்தடைவான்.

"என்ன மாசிமோ.. களைப்பாயிருந்தால், நம் பரிசோதனையை நாளை வைத்துக் கொள்ளலாம்" என்று கலீலியோ கூறும்போதெல்லாம், "இல்லை ஆசானே, எனக்குத் துளியும் களைப்பே இல்லை. மீண்டுமோர் பரிசோதனை நடத்தி விடுவோம்" என்று மின்னலெனப் படி இறங்கிடுவான்.



மொத்தம் எட்டு மாடிகள் கொண்ட கோபுரத்தின் மேலிருக்கும் வெள்ளைப் பளிங்கினால் ஆன மணிக்கூண்டு மட்டும் 170 அடி உயரம் கொண்டது. இந்தக் கோபுரம் அஸ்திவாரத்தில் இருந்து 14 அடிக்கு விலகிச் சாய்ந்திருப்பதுதான் இதன் சரித்திர முக்கியத்துவத்திற்குக் காரணம். தென் கிழக்குப் பகுதியில் இருக்கும் கோபுரத்தின் சாய்வு நிலையில் இருந்துதான் கலீலியோ பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

கடுமையான முடக்குவாதத்தாலும், கண்பார்வைக் குறைவாலும் கலீலியோ மிகவும் அவஸ்தைப்பட்டார். தன் கடைசி நான்கு வருடங்களில் அவர் பார்வை முழுவதையும் இழந்திருந்தார். தண்டனைக் காலம் முழுவதையும் இறக்கும்வரை வீட்டுச் சிறையிலேயே கழித்தார். அவருக்கு 77 வயதிருக்கும்போது விஷக் காய்ச்சலால் மிகவும் சுகவீனப்பட்டார். அதுவே அவரின் கடைசி சுகவீனம். ஒரு வருடம் கழித்து 1642ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி உயிர் துறந்தார்.

1971ஆம் வருடம், ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி அப்பல்லோ 15இன் விண்வெளிக் குழுவில் ஒருவரான டேவிட் ஆர் ஸ்காட் சந்திரனின் நிலப்பரப்பில் இறங்கினார். தன் ஒரு கையில் பறவையின் சிறகையும், மறு கையில் ஒரு சுத்தியலையும் ஒரே நேரத்தில் கீழே போட, காற்றின் தடை துளியும் இல்லாததால், இரண்டும் ஒரே சமயத்தில் மெதுவாகத் தரை இறங்கியது. அதைத் தொலைக்காட்சியில் நேராகக் கண்டு ரசித்த கோடானுகோடி மக்கள் கைதட்டிப் பெருத்த ஆரவாரம் செய்தார்கள்.

183 அடி உயரமான சாய்ந்த பிஸ்ஸா கோபுரமும் கர்வத்துடன் தலையுயர்த்திப் பார்க்கிறது, கலீலியோ கலீலியின் அசைக்க முடியாத பிரபஞ்சம் குறித்த நம்பிக்கையையும், அவர் வாழ்ந்த உன்னதமான காலங்களையும்.

இப்படியாகத்தான் கட்டிடக்கலையில் ஏற்பட்ட மாபெரும் மனிதத் தவறு பிற்காலத்தில் சரித்திரப் புகழ்பெற்ற ஒரு வானவியல் விஞ்ஞானியை நமக்கு அடையாளம் காட்டியது. ■

• கவி : தங்கேஸ்
சித்திரம் : கொ.வடிவேல்

# நீர்க்குமிழிகள்

வெறிச்சோடிப்போன வீதிகளில் தன்னிச்சையாக
அலைகின்றன
கேட்பாரற்ற ஞாபகங்கள்
நள்ளிரவில் உறங்காத தெரு நாய்களின்
அதீத குரைப்புகளுக்கு அஞ்சி
அங்கங்கே ஒளிந்திருக்கின்றன
அரூப ஓவியங்களாக
வாசலில் வளர்ந்திருக்கும் ஒரு பன்னீர் மரமோ
ஒவ்வொரு வெண்ணிற மூச்சாக
உதிர்த்துக்கொண்டிருக்கிறது
தரையில்
கிளை விட்டுக் கிளை தாவிக்கொண்டிருக்கும்
ஒரு இரகசியக் கேவல்
அத்தனை பரிச்சயமானது உனக்கும்தான்
நேசத்தால் சபிக்கப்பட்ட தூக்கமறியா விழிகள்
உதிர்க்கும் கண்ணீர்த்துளிகள்
யார் வீட்டு
முற்றத்திலோ விழித்திருக்கும்
செம்பருத்தி இலைகளில் தேங்கியிருக்கும்
பனித்துளிகளின் அளவே என்றாலும்
அதையும் விட மிக அடர்த்தியானது
ஒரு ஒற்றைத் தலைவலி போல
விலகாத நினைவுகளைச்
சுமந்தலையும் மனதுகள்தான்
உலகமெல்லாம்
இரவின் கருமையைச்
சோப்பு நுரையாக்கி
நீர்க்குமிழிகளாய் ஊதிக்கொண்டிருக்கின்றன
விடியும்வரை. ■



• தா. ஜோ. ஜூலியஸ்




# இலக்கியத்தின் தோரண வாயில்

**ஸ்வெட்லானா அலெக்சீவிக்**

உலகில் மனித மாண்பு சிதைக்கப்படும்போதும், மூடி மறைத்துப் புதைக்கப்படும்போதும், அதனை வெளிக்கொணர்ந்து படிப்போர் அனைவரும் பதைபதைக்கும்வண்ணம் எடுத்துச் சொல்வது ஒரு புதுவகை இலக்கியத்தைப் படைக்கிறது. இவ்விலக்கியம் இலக்கியத்திற்கான பழைய இலக்கணத்தை உடைத்துப் புதுமைப்பூக்களை மலரச் செய்கிறது. சாதாரணமாக இத்தகைய சூழல்களைக் கதைக் களமாக்கி விட்டு அதனைக் காசாக்க நினைப்போரின் மத்தியில் உள்ளது உள்ளபடி, ஆங்கிலத்தில் 'குதிரையின் வாயில் இருந்து' எனக் கூறுவதைப்போல், பலி ஆனவர்களே தங்கள் அனுபவங்களைச் சொல்வது புதிய படைப்பாளி என ஒருவர்க்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது.

ஸ்வெட்லானா அலெக்சீவிக் உக்ரேனில் உள்ள பழைய பெயராகிய ஸ்டனிஸ்லாவ் (தற்போது 1962 முதல் ஐவனோ ஃப்ராகீஸ்) எனும் ஊரில் மே மாதம் 31ஆம் நாள், 1948ஆம் ஆண்டில் பிறந்தவர். அவரது தந்தை பெலாரசியர், தாயோ உக்ரேனியர். அலெக்சீவிக், அவரது தாய் தந்தை இருவருமே ஆசிரியப் பணி புரிந்த பெலாரசில் தான் வளர்ந்தார். மின்ஸ்க் பல்கலைக்கழகத்தில் பத்திரிக்கையாளர் ஆவதற்காகப் பத்திரிக்கைப் படிப்பினை 1972இல் படித்து, பின் ஆசிரியர், பத்திரிக்கையாளர் மற்றும் பத்திரிக்கை ஆசிரியர் ஆகிய தொழில்களைச் செய்துவந்தார். 1976இல் நியோமான் எனும் பத்திரிக்கையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். மின்ஸ்கில் உள்ள செல்ஸ்கஜா கெஸட்டாவில் பணிபுரிந்த போது சோவியத் யூனியனில் மற்றும் பெலாரசில் அப்போது ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகள் மீது அவர் செய்த விமர்சனம் காரணமாக அவர் இத்தாலி, ஃப்ரான்ஸ் மற்றும் ஸ்வீடன் போன்ற வெளிநாடுகளில் தங்கி வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.



"ஒரு தேசம், இன்னும் சொல்லப்போனால் ஓர் ஊர் என்பது வெறுமே கல்லாய், மண்ணாய், மரஞ்செடி தோப்பாய், ஊமையாய் நிற்குமாப் போல் இருந்தாலும் மனிதரை வாழ்விக்கும் உயிர் அணுக்கள் அவைதான். ஆதலால் ஓர் ஊர் என்பதனை நம் வாழ்வின் தொன்மம் என்றே கருதுகிறேன். அத்தொன்மத் தொடரை யாராலும் அறுத்துவிட முடியாது.அந்த ஊரென்னும் குறுஞ்சூழல் படிவுகளிலேயே ஒவ்வொரு மனிதரும் வார்க்கப்படுகின்றனர். அங்கிருந்தே அவர்தம் உலகமும் வளர்கின்றது. அந்த ஊருக்கு அந்நியமாகாமல் அதன் நேசத்திற்குரிய மகனாக இருத்தல் எல்லோருக்கும் வாய்த்ததொன்றல்ல" எனும், சு.வில்வரத்தினம் எனும் தமிழ்க் கவிஞரின் வாக்கு அலெக்சீவிக்கிற்கு முழுவதும் பொருந்தும். புலம் பெயர்ந்த வாழ்வின் வலிகளை அறிந்தவர் என்ற முறையில் அலெக்சீவிக்கின் அனுபவங்களும், பிறரது அனுபவங்களுமே அவரைப் பெரிய படைப்பாளியாக மாற்ற உதவின.

அவர் தமது படைப்புகளில் வாழ்க்கையைப் பிற மனிதர்களின் அனுபவம் வாயிலாக அணுகி அதனைக் காட்சிப்படுத்தியுள்ளார். அவரது புத்தகங்களில் பல குரல்களின் கதம்பமாக

வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்ட நேர்முகப் பேட்டிகளைப் பயன்படுத்தி உள்ளார். "ஆவண நவீனம்'' எனும் புதிய உத்தியில், பத்திரிக்கையாளராகிய இவர், நிருபருக்கும் புதின எழுத்தாளருக்கும் இடையிலான எல்லைக்குள் அனாயாசமாக இயங்கி உள்ளார். அவரது மிகப் பெரிய படைப்பு, ஐந்து பாகங்களைக் கொண்ட Voices of Utopia "கற்பனையுலகின் குரல்கள்'' ஆகும். இவருக்கு 2015ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு, "இவரது, பலகுரல் எழுத்துக்கட்கும், துன்பத்தின் எழுத்தாலான நினைவுச் சின்னத்திற்கும், நாம் வாழும் காலத்தின் அரிய துணிச்சலுக்குமாக வழங்கப்படுகிறது'' என இவருக்கான பாராட்டுப் பட்டயம் கூறுகிறது. பெலாரசில் இருந்து நோபல் பரிசு பெறும் முதல் நபரும் இவரேதான்.

பத்திரிக்கையாளராக இருந்தபோது அவர் சோகம் நிறைந்த நிகழ்வுகளில் துன்பப்படுவோரின் சாட்சியங்களை வர்ணனை செய்யும் கலையாக வளர்த்து அதில் மிளிர்ந்தார். இதன் மூலம் அவர் சோவியத் யூனியனில் நிகழ்ந்த, இரண்டாம் உலகப் போர், ஆஃப்கன் போர், சோவியத் யூனியனின் வீழ்ச்சி மற்றும் செர்னோபில் பேரிடர் போன்ற பல திருப்புமுனை கொண்ட வரலாற்று நிகழ்வுகளை வாய்மொழி வரலாறாக ஆவணப்படுத்தினார். லூகாஷென்கோ நிர்வாகத்தினரால், அரசியல் துன்புறுத்தலால் அவர் 2000ஆம் ஆண்டில் பெலாரசை விட்டு நீங்கினார். பன்னாட்டு அடைக்கல வலை நகரம் அவர்க்கு வாழுமிடம் கொடுத்தது. அதற்கு அடுத்த பத்து ஆண்டுகளில் அவர் பாரீஸ், கோதென்பர்க் மற்றும் பெர்லின் ஆகிய நகரங்களில் வாழ்ந்தார். 2011இல் மீண்டும் மின்ஸ்க்கு வந்தார்.

இவரது படைப்புகள் சோவியத்தின் உணர்வுபூர்வ வரலாற்றை, சோவியத் ரஷியாவிற்குப் பிற்பட்ட காலத்தின் தனி மனிதனின் வாழ்க்கை நிலையைப் பிரதிபலிக்கும் வகையில், நேர்முகப் பேட்டிகளை இலக்கிய மணம் வீசிட அடுக்கி வைத்துப் படைக்கப் பட்டன. ருஷ்ய எழுத்தாளரும் விமர்சகருமாகிய, டிமிட்ரி பைகோவின் கூற்றுப்படி, ரஷ்யாவின் இருபதாம் நூற்றாண்டின் திகிலூட்டும் சம்பவங்களை, புதினமாக அல்லாமல், நேரில் கண்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியமாகப் பதிவிடுவதே சிறப்பான வழியாகும் என்ற பெலாரசிய எழுத்தாளராகிய அலெஸ் ஆடமோவிக்கின் எண்ணங்களைப் பிரதிபலிப் பவையாகவே உள்ளன. பெலாரசியக் கவிஞராகிய உலாட்ஸிமிர் நியாக்லயாயேவ், ஆடமோவிக்கினை இவரது ஞானத்தந்தை என்றே குறிப்பிடுகிறார். பெலாரசை ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்துக் கிராமங்களை எரித்துச் செய்த அட்டூழியங்களை, ஆடமோவிக்கின் "நான் எரிந்த கிராமத்திலிருந்து வந்தவன்" எனும் புதினம், நாஜிக் கட்சிக்கு எதிரான மக்களின் போராட்டங்களைச் சிறு கதைகள் வாயிலாகச் சித்தரித்த மற்றொரு எழுத்தாளராகிய யான்கா ப்ரில் ஆகியோரின் படைப்புகள் அலெக்சீவிக்கின் இலக்கியப் படைப்புக்கள் மீது வெகுவாகத் தாக்கம் செலுத்தின.

ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்ட அவரது படைப்புகளில் மிக முக்கியமானவை, ஸின்கி பாய்ஸ்: மறந்து விட்ட போரிலிருந்து சோவியத் குரல்கள் (Zinky Boys: Soviet Voices from a Forgotten War) என ஆஃப்கானிஸ்தான் போர் மற்றும் செர்னோபிலின் பிரார்த்தனை/செர்னோபிலிலிருந்து குரல்கள் எனச் செர்னோபில் பேரிடர் (Chernobyl Prayer / Voices from Chernobyl ) குறித்த அவலங்களை விளக்கும் வாய்மொழி வரலாற்று நூல்கள் ஆகும். அவரே தனது படைப்புகளின் மையக் கருத்து எனக் கூறுவது பின்வருமாறு..

"சோவியத் யூனியன் மற்றும் அதற்குப் பிற்பட்ட காலத்தின் முழு வரலாற்றையும் நாம் காண நேர்ந்தால், அது ஒரு பெரும் பொது இடுகாடு மற்றும் குருதிக் குளியல் ஆகும். கொலையாளிகளுக்கும் பலியாவோர்க்கும் இடையிலான நித்திய உரையாடல். சபிக்கப்பட்ட ரசியக் குடிமகன் கேட்கிறான், நான் என்ன செய்ய, யாரைப் பழி சொல்ல? ரஷியப் புரட்சி, குலகுகள், இரண்டாம் உலகப்போர், அரக்கன் போலிருந்த சோஷலிச நாட்டின் வீழ்ச்சி, புதிய புனைவான நாடு, இத்தோடு நில்லாமல் பிரபஞ்சப் பரிமாணச் சவாலாகச் செர்னோபில் என இவை அனைத்தும் உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்குமான சவால்.. நமது வரலாறு அப்படிப்பட்டது. எனது நூல்களின் மையக் கருத்தும் இதுவே, எனது வழியும் இதுவே. இதுவே மனிதரிடமிருந்து மனிதர்க்கு எனது நரகத்தின் வட்டங்கள் என்றும் கூறுவேன்."

அவரது முதல் புத்தகமாகிய போரின் பெண்மையல்லாத முகம் (War's Unwomanly Face) 1985இல் வெளிவந்தது. அது மீண்டும் மீண்டும் பல பதிப்புக்களைப் பெற்று ஐந்து ஆண்டுகளில் இரண்டு மில்லியன் புத்தகங்கள் விற்பனை ஆயின. முன்னர் எவரும் தெரிவிக்காத வகையில் இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட

பெண்கள் போர் பற்றிக் கூறிய தனிமொழிகளின் தொகுப்பாக அது இருந்தது. மற்றொரு படைப்பாகிய கடைசி சாட்சி: குழந்தைத்தனமற்ற கதைகளின் புத்தகம் (The Last Witnesses: the Book of Unchildlike Stories) என்பது போர்க்காலத்தில் குழந்தைகள் பெற்ற அனுபவங்களின் நினைவுகளை விவரிப்பதாகும். பெண்கள் மற்றும் குழந்தைகளின் கண்ணோட்டத்தில் போர் அந்தப் புதிய உலகின் உணர்வுகளை வெளிப்படுத்தியது. 1993ஆம் ஆண்டில் மரண வசியம் (Enchanted with Death) சோவியத் யூனியனின் வீழ்ச்சியினால், தற்கொலைக்கு முயன்ற மற்றும் தற்கொலை செய்து இறந்தவர்களைப் பற்றிய நூல் வெளியிடப்பட்டது. இது, கம்யூனிஸக் கொள்கையிலிருந்து புதிய கொள்கைகளை ஏற்றுக்கொள்ள இயலாதோர் மற்றும் அன்றைய புதிய வரலாற்றினை ஏற்காதோர் பற்றிய நூலாகும்.

அவரது புத்தகங்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பெலாரசியப் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்படாமல் இருந்தன ஆயினும் 1993க்குப் பிறகு, செர்னோபில் பிரார்த்தனை 1999லும் மற்றும் இரண்டாம் கை நேரம் (Second-hand Time) 2013லும் பெலாரசிய மொழியில் மொழியாக்கம் செய்து பதிப்பிக்கப்பட்டன. அதனால் பெலாரசை விட உலகின் பிற நாடுகளில் அதிகமாக இவரைத் தெரிந்து வைத்து இருந்தனர்.

இவர் நோபல் பரிசு பெறும் முதல் பத்திரிக்கையாளர் என அழைக்கப்படுகிறார். தான் ஒரு பத்திரிக்கையாளர் என்பதை மறுத்து விடுகிறார்.

நோபல் பரிசு தவிர 22க்கும் மேற்பட்ட விருதுகள், பாராட்டு மெடல்கள், பரிசுகள் எனப் பெற்றுள்ள இவர் இந்த நோபல் பரிசு தனக்குக் குழப்பமான உணர்வுகளைக் கொடுத்து விட்டதாகக் கூறுகிறார். ஒரு நிலையில், இவான் ப்யூனின் மற்றும் போரிஸ் பாஸ்டர்னாக் போன்ற இதர நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர்களை நினைவுக்குக் கொண்டுவருகிறது என்பதால் அந்த வரிசையில் தானும் என நினைக்கும்போது மகிழ்ச்சியாக இருப்பினும், மற்றொருபுறம் என்னை இது நிலைகுலைய வைக்கிறது என்கிறார். ஸ்வீடிஷ் அகாடமி இவருக்குப் பரிசு தருவது பற்றிக் கூறியபோது தான் இஸ்திரி போட்டுக்கொண்டு இருப்பதாகவும் அதேசமயம் இந்த 8 மில்லியன் ஸ்வீடிஷ் க்ரோனா தனது விடுதலையை வாங்கிட உதவும் என்றும் கூறினார். ஆடமோவிக்கின் பாணியில் இவர், ஒரு புதிய வகைமையையே தோற்றுவித்தார் என்றால் அது மிகை ஆகாது. இந்தப் பாணிக்கு, ஆடமோவிக்கே பல்வகைப் பெயர்களைச் சொல்லி உள்ளார். அவை கூட்டுப் புதினம், புதினச் சொற்பொழிவு, புதின சாட்சியம், மக்கள் தங்களைப் பற்றிப் பேசுவது மற்றும் காவியக் குழுப்பாடல் போன்ற பெயர்கள் ஆகும். இந்தப் பெயர்கள் அலெக்சீவிக்கின் பாணிக்கு மிகப் பொருத்தமாக இருக்கின்றன.

செர்னோபிலிலிருந்து குரல்கள் எனும் நூலில், இவர், அணு உலை வெடித்த பேரிடரால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களை நேர்முகப் பேட்டி கண்டதில், இறந்து கொண்டிருக்கும் கணவனைக் கையில் ஏந்தி இருந்த மனைவி, அங்கிருந்த செவிலியர், 'அவர் மனிதரே அல்ல, அணுவினைப் பொருள்' எனச் சொல்லியும் கேளாமல், அழுதுகொண்டு நிற்பது, உதவிக்கு அனுப்புவதாகப் படை வீரர்களை, "அணு உலை மீது மண்ணை வீசியது போல் தூக்கி வீசியது'' போன்ற துயரங்களை, அவலங்களைக் கண்ணீர் வந்து பார்வையை அடைக்கும்படியாகத் துடைத்துவிட்டுத்தான் மேலே படிக்க வேண்டும் போன்ற உணர்ச்சிக் காவியத்தைப் படைத்துள்ளார். சின்க்கி பாய்ஸ் எனும் நூலில், ஆஃப்கானிஸ்தான் போரில் போர்க்களத்தில் அவதியுற்ற படை வீரர்கள், மருத்துவர்கள், விதவைகள் மற்றும் தாய்மார்களின் குரல்களை ஒலிக்கச் செய்து தொகுத்துள்ளார். 'நான், மக்களை சோஷலிசத்தைப் பற்றிக் கேட்கமாட்டேன். அவர்களிடம், அன்பு, பொறாமை, பிள்ளைப் பிராயம், முதுமை ஆகியவை பற்றியே கேட்பேன்' என்று இரண்டாம் கை நேரம் எனும் நூலின் முகவுரையில் எழுதி உள்ளார். 'அவர்களது இசை, நடனம், தலை அலங்காரம் போன்ற வாழ்வின் சின்ன சின்ன சந்தோஷங்களைப் பற்றியும் அவை மறைந்துவிட்டது பற்றியும் கேட்பேன். அந்தப் பேரிடரைத் துரத்திச் சென்று ஒரு கதையினைப் பெறுவதற்கு இவ்வாறு கேட்டுப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. அன்றாட சாதாரண வாழ்க்கை எவ்வளவு சுவையானது என்பது எனக்கு ஆச்சரியம் குறையாத விஷயமாகும். மனித வாழ்வில் கணக்கிட முடியாத உண்மைகள் இருக்கின்றன. வரலாறோ உண்மைகளை மட்டுமே காட்டும். அதில் உணர்ச்சிகட்கு இடமில்லை. உணர்ச்சி இல்லாததை வரலாறு எனச் சேர்ப்பது முறையற்றது ஆகும் எனக் கருதப்படுகிறது. நான் உலகினை ஒரு எழுத்தாளர்

பார்வையில் இருந்தே காண்கிறேன், வரலாற்று ஆசிரியராக அல்ல. மக்கள் என்னைத் தம் வசப்படுத்துகின்றனர்' என்றும் கூறுகின்றார்.

போரின் பெண்மையல்லாத முகம் எனும் அவரது முதல் நூல் இரண்டாம் உலகப் போரில் நேரிடையாக ஈடுபட்ட நூற்றுக்கணக்கான பெண்களைப் பேட்டி கண்டு அதன் அடிப்படையில் எழுதப்பட்டது. அந்தப் புத்தகம் எழுதப்படுவதற்கு முன் இரண்டாம் உலகப் போரைப் பற்றிய உலகத்தின் எண்ணம் வேறாக இருந்தது. இந்தப் போரில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சோவியத் யூனியன் பெண்கள் போர்க்களத்திற்குள் தள்ளப்பட்டனர் என்பது இதற்கு முன்னர் எவர்க்கும் தெரியாது. இந்த நூலில் அதனைப் பேசும் பெண்கள் மறைந் தாலும் அவர்களது வலி மிக்க குரல் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. ஆண்ட்ரே சான்னிகாவ் எனும் பெலாரசிய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அலெக்சீவிக்கின் நண்பருமாகிய அவர் இவ்வாறு கூறுகிறார். "அலெக்சீவிச் சிவப்பு மனிதனின் வரலாற்றை எழுதுகிறார்". அலெக்சீவிச் கூற்றுப்படி, 'வலிகளைத் தாங்கிக்கொள்ளும் இந்த மனிதன் இறந்து விடவில்லை. அவன் நமக்குள் வாழ்கிறான். ஒவ்வொரு சோவியத் பிரஜைக்கு உள்ளும் வசிகிறான்.' இயற்கையாக மனித இயல்பில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதைத் துல்லியமாகப் படமெடுக்கும் வகையில் அவரது பேட்டிகள் இருப்பதால், அவற்றையே அவரது எழுத்தும் பிரதிபலிக்கிறது. வரலாறு என்பது நாட்டின் பெரும் தலைவர்களால் ஆவதில்லை, வீட்டில் சமையல் அறையில் இருக்கும் மக்களாலும் அது உருவாகின்றது என்ற அப்பட்டமான உண்மையைப் போட்டு உடைக்கும் படைப்பு இவருடையது. இவர் வாழ்க்கையை எப்படி அணுகுகிறார் என்பதைத் தனது நோபல் பரிசு பெறும் உரையில் இவ்வாறு கூறுகிறார்.. 'நான் அன்றாட வாழ்வின் உணர்ச்சிகள், எண்ணங்கள், வார்த்தைகளைச் சேகரிக்கிறேன். நான் வாழும் காலத்தின் வாழ்க்கையைக் காண்கிறேன். நான் ஆன்மாவின் வரலாறு பற்றியே ஆர்வம் கொள்கிறேன், வரலாற்றின் பெரிய பக்கங்கள் எதையெல்லாம் கணக்கில் கொள்ள மறுக்கிறதோ அதை எல்லாம் நான் கணக்கில் எடுத்துக்கொள்கிறேன்'.

போரின் பெண்மையல்லாத முகம் எனும் நூலுக்காக அவர் பேட்டி கண்ட ஆயிரக் கணக்கான பெண்களில் ஒருவரைத் தன்னால் மறக்க இயலாது எனக் கூறும் இவர், அந்தப் பெண்மணி கூறியதை அப்படியே இவ்வாறு எழுதுகிறார். "போரில் சண்டை இடுவது பற்றி எனக்குக் கவலை இல்லை. நாட்டுக்காக இதைச் செய்யலாம். ஆனால் ஒரு ஆணின் சீருடையில், அதிலும் ஆணின் உள்ளாடைகளை அணிந்து போரிடுவது, சகிக்க முடியாத ஒன்று" எனக் கூறியுள்ளார்.

செர்னோபிலிலிருந்து குரல்கள் எனும் புத்தகத்திற்கான பேட்டியில் ஒரு பெண்மணி அணுக்கதிர் வீச்சால் இறந்துகொண்டு இருந்த தனது கணவனைக் குப்பைகள் நடுவில் இருந்து எடுத்து வந்ததாகவும் தனக்கு அப்போது இரண்டு விஷயங்கள் செய்யத் தோன்றியதாகவும் கூறி உள்ளார். ஒன்று - அந்தக் கணவனின் வாயில் வோட்கா எனும் மதுவினை ஊற்றி அவரது வலிகளைக் குறைப்பது. இரண்டாவது - நேரமின்மையால் அவர் உடனே இறக்கக்கூடும் என்பதால் அங்கேயே அவரைக் கடைசியாகப் புணர்ந்துவிட வேண்டும் எனத் தோன்றியது என மனித உணர்வுகளை எந்தவித மறைப்புமின்றி எடுத்துக் கூறியதை நினைவுகூர்ந்துள்ளார்.

அந்தப் பெண்மணியின் பெயருக்குப் பங்கம் வரக்கூடாது எனப் பெயரை மாற்றி நூலை வெளியிட்டபோது, அவர் தன்னைத் தொலை பேசியில் தொடர்புகொண்டு, "என் கணவரும் நானும் அத்தனைக் கஷ்டங்களை அனுபவித்த போது அவரது பெயரையும் எனது பெயரையுமே வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டதையும் நினைவுகூர்கிறார்.

போர்க் கதைகளைச் சற்றே மூட்டை கட்டிவிட்டு, அன்பு, முதுமை பற்றி எழுதப் போவதாகக் கூறுவதால், காதல் புதினமா என்ற கேள்விக்கு, இல்லவே இல்லை, நான் வாழ்க்கை யின் மீதுதான் ஆர்வம் கொண்டுள்ளேன் என்கிறார் இந்த நோபல் பரிசு வெற்றியாளர்.

ஆத்மார்த்தமான விஷயங்களை வெளிக் கொணரும் ஊடகங்களாகவே முற்காலத்தில் கலை இலக்கியங்கள் தோன்றின எனலாம். அதாவது மனித இருப்பின்அனுபவங்கள் சில சாதாரண வார்த்தைகளால் சொல்லக்கூடியவை யாகவும், சில அப்படிச்சொல்ல முடியாதவை யாகவும் நிற்கின்றன. அப்படிச் சொல்லமுடியாத உணர்வுகளையும் எண்ணங்களையும் சொல்லில் வடித்துக் காட்டும் ஊடகங்களாகவே கலை இலக்கியங்கள் தோன்றின. அப்படிப்பட்ட இலக்கியம் படைத்தவர் ஸ்வெட்லானா அலெக்சீவிச் ஆவார் என்றால் அது மிகை ஆகாது. ■

• கு. இலக்கியன்


# தாழ்வாரத்திற்குக் கதவுகள் இல்லை...

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டமாக இருந்த காலம்தொட்டே குடந்தையில் பல்வேறு இலக்கிய அமைப்புகள் இயங்கிவருகின்றன. திருக்குறள் பேரவை முதல் பல்வேறு இலக்கிய வடிவங்களை விவாதிக்கக்கூடிய எண்ணற்ற இலக்கியக் கூட்டங்களை எண்ணிக்கையில் அடர்ந்தும் குறைந்தும் பலர் நடத்திவந்திருக் கிறார்கள். ஏனெனில் குடந்தை மண் என்பது கலைகள் இலக்கியம் ஆன்மீகம் என்று முத்துறையிலும் தன் தடத்தைப் பதித்திருப்பது தான்.

அத்தகைய குடந்தை மண்ணில் இலக்கிய உலகில் பெரும் வீச்சோடு கருத்தியல்புகளை முன்வைக்கிற, நவீன இலக்கியங்கள் குறித்து விவாதிக்கிற, நூல்களை அறிமுகப்படுத்துகிற ஒரு இலக்கிய அமைப்பு இல்லையே என்ற கேள்வியின் முடிவில் தோன்றித் துவங்கியதுதான் தாழ்வாரம் - நவீன இலக்கியக் களம். இதன் வேர்களாக மூன்று பேரும் அதனை நீரூற்றி வளர்க்கிற மனிதங்களாக இலக்கிய ஆர்வலர்களும் படைப்பார்வலர்களும் இருந்துவருவது மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

சென்ற ஆண்டின் பிப்பிரவரி மாதத்தின் பிந்தைய ஞாயிறு ஒன்றில் எழுத்தாளர் கண்மணி குணசேகரன், பாடலாசிரியர் இயக்குநர் ஏகாதசி, கவிஞர்கள் ஸ்டாலின் சரவணன், கு.இலக்கியன், கோ.பாரதிமோகன், செருகுடி செந்தில், திரைப்பட வசன எழுத்தாளர் பாக்கியம் சங்கர், இளங்கவி அருள், முருக தீட்சண்யா, மீனா சுந்தர், கேபாக்யா, யாழி, நிலாதரன், வலங்கைமான் நூர்தீன், சத்யன் போன்ற திரளான படைப்பாளர்களின் பங்கேற்போடு துவங்கப்பட்டது தாழ்வாரம்.





அன்று முதல் இன்று வரை சமகால எழுத்தாளர்களின் நூல்களை அறிமுகப்படுத்தி விவாதிப்பதும் கலந்துரையாடுவதும் அடுத்த நிலைக்குப் படைப்புகளை முன்னிருத்தி ஊக்கப்படுத்துவதும் என்று செம்மையாகப் பயணித்துக்கொண்டிருக்கிறது தாழ்வாரம்.

சிறந்த இலக்கிய விமர்சகராக அறியப்படுகிற பொதியவெற்பன், சமகாலத்தில் தவிர்க்கமுடியாத ஆளுமைகளான கவிஞர் யவனிகாஸ்ரீராம், வெய்யில், எழுத்தாளர்கள் கணேசகுமாரன், விஷ்ணுபுரம் சரவணன், கவிஞர் சக்திஜோதி, ஜமாலன், அமானுஷ்யன், திண்டுக்கல் தமிழ்ப்பித்தன், முத்தமிழ்விரும்பி, ஏர்.மகாராசன், ஆண்டன்பெனி என்று தாழ்வாரத்தில் விவாதிக்கப்படும் நூல்களை எழுதிய படைப்பாளர்களின் வரிசை நீண்டுகொண்டே இருக்கிறது.

2019ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இரண்டாம் ஆண்டில் தன் தடத்தைப் பதிக்கவிருக்கிற தாழ்வாரம் மற்றுமொரு புதிய முயற்சியைக் கைக்கொண்டிருக்கிறது. அது தாழ்வாரம் இலக்கிய விருதுகள் வழங்கத் திட்டமிட்டிருப்பது.

எப்போதும் படைப்பாளர்களையும், படைப்பார்வலர்களையும் ஊக்கப்படுத்தும் தாழ்வாரம் விருதின் மூலமும் கொண்டாட விருக்கிறது. அந்தந்த ஆண்டிற்கான சிறந்த கவிதை, சிறுகதை, நாவல், குழந்தை இலக்கியம் ஆகிய நூல்களுக்கான விருது அறிவித்திருக்கிறது தாழ்வாரம். மேலும் இவ்விருதின் மூலம் நட்சத்திர எழுத்தாளர்களைக் கடந்து அறியப்படாத பல நல்ல நூல்களை அடையாளம் காண்பதும் அதன் படைப்பாளர்களை அடையாளப்படுத்துவதும் இதன் நோக்கம்.

இவற்றைக் கடந்து இன்றைக்குத் தொடர்ந்து எழுதிவருகிற எல்லாப் படைப்பாளர்களும் சிற்றிதழ்களின் முக்கியத்துவத்தை அறிந்தவர்கள் தான். தம் எழுத்துக்களைச் சிற்றிதழ்களின் வழியாக அச்சில் பார்த்துத்தான் எழுத்துப் பயணத்தைத் தொடங்கியிருக்கக்கூடும். ஆகவே அத்தகைய சிற்றிதழ்களின் வளர்ச்சி என்பது இன்று பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. அந்தச் சிற்றிதழ்களை மீண்டும் உயிர்ப்பிப்பதும் அவற்றை அடையாளப்படுத்துவதும் சந்தா சேர்த்துப் பிரசுரம் செய்ய வழிவகை செய்வதுமாகிய பணிகளைச் செய்துவருகிறது தாழ்வாரம்.

மேன்மை பொருந்திய இலக்கிய ஆர்வலர்களும் ஆளுமைகளும் தொடர்ந்து தருகிற நம்பிக்கையாலும் ஊக்கத்தாலும் தாழ்வாரத்தில் பல புதிய முயற்சிகளும் முன்னெடுப்புகளும் பிறக்கின்றன. அதனைத் தீர்க்கமாக ஒரு விளக்கின் தீபத்தை அணையாமல் காப்பாற்றப் போராடுகிற கரங்களாகிக் காப்பீர்கள் என்ற நம்பிக்கையோடும் உத்வேகத்தோடும் தாழ்வாரம் செழித்தோங்கும். அதில் நீங்கள் மனம் திறந்து ஈரம் சில்லிட இளைப்பாறலாம். இலக்கியம் சுகிக்கலாம். ஏனெனில் தாழ்வாரத்திற்குக் கதவுகள் இல்லை.■

கட்டுரை

• கவிஞர் விக்ரமாதித்யன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# குவளைக் கண்ணனின் கவிதைப் பெண்கள்

கவிதை தன்னிடமிருந்து வருவதாகக் கவிஞர் நினைத்துவிடுவதுண்டு. ஒருகாலத்தில் நான் நினைத்திருக்கிறேன். நானே கவிதையின் தோற்றுவாய் என்று கவிஞனுக்குத் தோன்றக்கூடும். இது கவிஞனுக்கு நேரக்கூடிய மிகப்பெரிய கோளாறுகளில் ஒன்று. இந்தக் கோளாறுக்கு வைத்தியம், எழுதிய கவிதையைப் பொறுமையாக வாசித்துப்பார்ப்பதுதான். வாசித்துப்பார்த்தால், நம் அறிவின் எல்லைக்கும் அனுபவ எல்லைக்கும் அப்பாலிருந்து வந்த வரிகள் கவிதையில் இடம்பெற்றிருப்பது தெரியவரும். இதை மற்றவர் சொல்லித் தெரியவைத்துவிட முடியாது. படாதபாடு பட்டபின் மெதுவாக இந்தத் தெளிவு கவிஞனை வந்துசேர்கிறது. என்னதான் கவிதை அவஸ்தைக்கு ஆட்படுத்திப் படாதபாடு படுத்தினாலும், அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையையும் கவிதைதானே தந்தது. சாதாரணமாக எவரும் நுழையத்துணியாத இடங்களுக்குள் நுழைந்து புழங்கமுடிந்தது, இந்த வலிமையால்தானோ. இந்த வலிமையால்தானே பெரிய தோல்விகளைத் தாங்கிக்கொள்ள முடிந்தது. எதையும் நேரிடும் அசாத்தியத் துணிச்சல் இதனால்தானே கிடைத்திருக்கிறது.

கவிதை எனும் பிரமாண்டம் என் தலையிலிருந்து வருவதாக நினைத்துக்கொள்ளும் அளவுக்கு மடையனல்ல நான். கோடானுகோடி மனிதர்களில் இருந்து கவிதை வெகுசிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் வழியாக வெளிப் படுகிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் ஒருவனாக இருக்கிறேன்.

கவிதை என்னிடமிருந்து வரவில்லை, என் வழியாக வெளிப்படுகிறது. என் வழியாக எது வெளிப்படவேண்டுமோ, அது வெளிப்படுவதற்குத் தோதாக என் மனத்தையும் என் மொழியையும் பராமரித்து வைத்துக்கொள்வது என் கடமை. இப்படியாகக் கவிதையின் முறைப்பாடும் புரிய ஆரம்பித்திருக்கிறது.

ஆதியில் வார்த்தை இருந்தது என்கிறது பைபிள். இந்திய மரபிலும் வார்த்தையின் முக்கியத்துவம் பல இடங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. வாக்தேவி, வாக்கின் தேவி. அதாவது, சொல்லின் தேவி. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் என்னைத் தீண்டி உள்ளே நுழைந்திருக்கிறாள். அப்போது அவளுடைய வேகத்தையும் தாக்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியாத இளைஞனாக இருந்தேன். நான் திணறினேன், திமிறினேன், விட்டாளில்லை. இந்த இருபத்தைந்து வருடங் களும் கூடவே இருந்து என்னைப் பழக்கி விட்டாள். உங்களுக்குத் தெரிந்திருக்கும், வருடத்தில் ஒரேஒருநாள் அதுவும் கண்ணாடிச் சட்டமிட்ட படத்தில் இரவிவர்மா வரைந்த ஓவியமாகப் பார்த்திருப்பீர்கள். பரிட்சை ஹாலில் நுழைவதற்கு முன்னால் வேண்டிக்கொண்டு கன்னத்தில் போட்டுக்கொண்டிருப்பீர்கள். வருடத்திற்கு ஒருநாள் கண்களை மூடிக்கொண்டு கன்னத்தில் போட்டுக்கொள்கிறவரோடு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தாயிற்று. நிறைவாக இருக்கிறது.

அவள் இன்னும் என்னை இளைஞனாகத்தான் வைத்திருக்கிறாள். நான் கவிஞனாகிவிட்டேன். கவிதை எழுதிவிட்டேனா என்றுதான் தெரியவில்லை. வாழ்க்கை இன்னும் புதிதாகவே இருக்கிறது. புதிதுபுதிதாக வந்துகொண்டே இருக்கின்றன. இன்னமும் என்னவெல்லாம் பார்க்கப்போகிறேன், எதையெல்லாம் எழுதப்

போகிறேன் என்று தெரியவில்லை. இப்போது ஒருவகையான தெளிவோடு இருக்கிறேன். ஒருவகையான திளைப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இந்தக் கொண்டாட்ட நேரத்தில் உங்களுடன் இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்கிறேன்.

சொல்லின் செல்விக்கு வந்தனம். ('வெள்ளி விழாக் கொண்டாட்டம்' எனும் தலைப்பிட்டு, 'கண்ணுக்குத் தெரியாததன் காதலன்' கவிதைத் தொகுப்பில் எழுதிய தன்னுரையிலிருந்து...)

**அவள்**

**இக்கரையில் ஒருகாலும்**
**மறுகரையில் மறுகாலுமென**
**வைத்து**
**எதிர்வரும் வாகனங்களும்**
**மனிதர்களும் பொருட்டல்லவென்று**
**வானுக்கும் பூமிக்குமாகத்**
**துள்ளி நடக்கிறாள்**
**இவள்தான் வெகுமுன்னர்**
**தலைக் கூடையில் இடித்ததெனச்**
**சூரியனைப் புறங்கையாலும்**
**இன்பப் புணர்ச்சியில்**
**கண்களைக் கூசவைத்த**
**நிலவினைக் காலாலும்**
**அப்பாலுக்கு அப்பால்**
**தள்ளியவளாக இருக்கவேண்டும்**
**இவளது அருளால்தான் சகலமும் நடக்கிறது**
**பற்ற முலைகளும்**
**பொருந்த இடமுமே**
**பெண்ணென்று இருப்பவர்க்கு**
**இவள் தெரிவதில்லை**

('பிள்ளைவிளையாட்டு' தொகுப்பு, பக்கம்:25)


தலைப்பு : அவள்; அவள் யார்;

"பற்ற முலைகளும்
பொருந்த இடமுமே
பெண்ணென்று இருப்பவர்க்கு
இவள் தெரிவதில்லை"

"இவளது அருளால்தான் சகலமும் நடக்கிறது."

முதல் பத்தி : அவளின் இயல்பு.

இரண்டாவது பத்தி : அவள் குறித்த யூகம் / நம்பிக்கை விவரிப்பும் சித்தரிப்புமாக இவை; பின்



உள்ள அடிகள், கவிஞனின் நிச்சயம் மற்றும் கவிக்குரல். எளிமையிலேயே எல்லாம் சாத்தியமாகும்.

பெண்ணை / பெண்மையைப் போற்றிடும் மகத்தான கவிதை / மகாகவி.

மாந்திரிக எதார்த்தமாகக் கூறல் / இயல்பான கவிதைமொழி.

சுருக்கமே செறிவு தரும். பெண்ணின் பெருமையை இதைவிட அருமையாகச் சொல்லிவிட முடியுமா? கடைசி நாலடிகள் ஒரு வாசகம்.

**உறுதிகூறல்**

**வரவேற்பறைப் பெண்ணாகச்**
**சிரிக்கிறாய்**
**விற்பனைப் பிரதிநிதியாகக்**

காத்திருக்கிறாய்
நெடுஞ்சாலையின்
சட்டென்ற திருப்பத்தில்
வாகனமாக எதிர்வருகிறாய்
வலியின் உச்சத்திலும்
புணர்ச்சிக் களியிலும்
உள்ளே இருந்தாய்
நினைவுறுத்தத் தேவையில்லை
தண்ணென்ற இருளோடிருக்கும்
உறைவிடத்து வாசனை இன்னமும் உள்ளது
எந்த இடத்தை மறந்தாலும்
இருந்த இடத்தை மறப்பேனோ
எவ்வழி மறந்தாலும்
பெருவழி மறப்பேனோ?
கடைசி ஓசையைக் கேட்டுவிட்டுக்
கடைசிக் காட்சியைப் பார்த்துவிட்டுக்
கடைசிப் பாடலைப் பாடிவிட்டுக்
கடைசிச் சொல்லையும் சொல்லிவிட்டு
வருவேன்
கடைசியை விட்டுவிட்டு (பக்கம் : 54)

*ஆரம்பம், எதார்த்தமாய்; எனில், ஒரே பெண்ணாய் இல்லை; பெண்களின் பிரதிநிதித்துவமாய்; பெண் வாழ்வு, இருப்பு, நிகழ்நிலை (ஸ்திதி); ஆனால், முன்னிலைப்படுத்தி மொழிவதாய் ஒருமையிலேயே.*




*அடுத்து, தனியாய் ஒரு சொற்றொடர்.*

*தொடர்ச்சி, சித்தர் பாடலொப்ப சொல்முறை மற்றும் தொனி எல்லாமே முன்னமுன்னதன் நீட்சியாய்; எனில், இது வேறே ஒருவகையில்; தன்னிலையின் கூற்று.*

*தாய்மை இல்லாத பெண்மையா.*

*ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பெண்களை அன்னையாகப் பார்த்தார் என்று படித்தது நினைவுள்; அஃது உயர்நிலை; குவளை, அந்நிலையில் நின்றே எழுதுகிறார் முன்னுள்ள கவிதையிலும்; கவிமனம், நுண்ணிதினும் நுண்ணிது; இப்படி ஒரு பார்வை / குரல் நவீனகவிதையிலேயே புதிது; வாசகர்கள் உணர்ந்துகொள்வார்கள்; ஆழ்ந்து படிக்கையில், சொல்லித்தீராத அம்சம் பிடிபடும்; இவ்விரு கவிதைகளுமே இந்தி, மலையாளம், கன்னடம் முதலான மொழிகளுக்குக் கொண்டுசெல்லப்படுமெனில், நவீன தமிழ்க் கவிதைக்கே தனிமரியாதை கிட்டும். (குவளை, நெருங்கிய நண்பன்தான்; தொலைவில் வந்துவிட்டதனால், தொடர்பு குறைந்து இந்த மலர்ச்சி/பூரணம் எப்படிச் சாத்தியமாயிற்று என்று தெரிந்துகொள்ள முடியவில்லை).*

**வனமோகினி**

காரணங்கள் இல்லாத காட்டில்
திரிந்து
வளரும்
சிறுமியின் கதையொன்றைப்
பாட்டி சொல்லக் கேட்டாள்
அவள் கேள்விகளால்
அவளுடன் வளர்ந்தது
கதையின் காடு
வினோதங்களும் அற்புதங்களும்
நிறைந்த அதில்
சாகசங்கள் புரிந்துவந்தாள்
எப்போதும் எங்கும்
காட்டைச் சுமந்து திரிந்தாள்
வசந்தகாலங்களில்
அவள்
முகமெல்லாம் பூப்பூக்கும்

**கண்ணசைவில் கட்டுப்படும் மிருகங்கள்**
**ஏவல் செய்யக் காத்திருப்போர் ஏராளம்**
**காட்டினுள் நுழையும் தந்திரத்தை**
**மட்டும்**
**ரகசியமாய்க் காக்கின்றாள் (பக்கம் : 55)**

*புரிந்துகொள்ள முடியாத புரியாத கவிதை என்று எதுவும் இருக்காது; அப்படி எழுதவேண்டும் என எந்த நல்ல கவிஞனும் எண்ணமாட்டான்; பூடகமாக அமைவது, இருண்மையாக இருப்பது என்று இலங்கலாம்; வெள்ளைக்கவிதை மற்றும் நேர்க்கவிதை எனப் பழகிப்போனவர்கள் சற்றே பயிற்சி பெறவேண்டி வரலாம், அவ்வளவுதான்; அதற்காகப் பாராமுகம் கொள்வது, முகங்கொடுக்காது போவது என்பவையெல்லாம் இலக்கிய அனுபவத்தையே இழக்கவைக்கும்.*

*தலைப்பே தூங்கச் செய்வதாகத்தான் உள்ளது- 'இரவுக்காட்சி'; ஆரம்ப வரிகள் இரண்டு:*

**'நேற்றும் நாளையும்**
**புரட்டிக்கொண்டிருக்கிறது' –**

*கடந்த / வரும் காலத்தில் 'கால மயக்கம்' தோன்றுகிறாற் போல ; பின் இரு வரிகள் :*

**"படுக்கையில்**
**புரண்டுகொண்டிருக்கிறான்"**

*நிகழ்காலமாக; 'புரட்டி' மற்றும் 'புரண்டு' இரு சொற்களையும் ஒன்றோடொன்று இயைக்கலாம்.*

*இரண்டாவது பத்தி, முதல் மூவடி :*

**"கையில் பையோடு**
**காய்கறி வாங்க**
**கடைத்தெருவுக்குப் போகிறாள்"**

*நிகழ்காலம்;*

**"கடைக்காரன் வெறிக்கிறான்**
**கடந்துபோகிறவர்கள் வெறிக்கிறார்கள்**
**பெண்களே இல்லாத கடைத்தெருவும்**
**வெறிக்கிறது";**

**"தன்னைப் பார்த்துக்கொள்கிறாள்**
**கையில் பையிருக்கிறது**
**பொட்டுத் துணியில்லை**
**விழித்துப்போகிறாள்**
**ஜீரோ வாட்ஸ் பல்பின்**
**மஞ்சள் ஒளி**
**இருளைவிட பயமுறுத்துவதாக இருக்கிறது".**

*இறுதி மூவடிகளில் அவள் மனசு/ கடைசிப் பத்தி, வேறே.*


*நவீன தமிழ்க்கவிதை, நுண்மாண் நுழைபுலம் மிக்க கவிஞர்களால் தழைத்தினிதோங்கிவருகிறது; எவ்வளவு நுண்ணிய பொருள், என்ன சொல்முறை; இதுபோல விஷயத்தை இவ்வாறே சொல்லவேண்டும்; நிகழே / யதார்த்தமே நினைவிலும் கனவிலுமென்றாகிவிடும் அவலம்/ கொடுமை; பெண்மனசு / பெண்வாழ்வுதான் பேசுபொருள்; உலகக் கவிதைக்கு இணையான கவிதை; எந்த மொழிக்கும் கொண்டு போகலாம்; பெண்கவிஞர்களேகூட இதுபோல எழுதிடவில்லை என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்தக் கவிதையோடு சேர்த்துப் பார்க்கவேண்டிய இன்னொரு கவிதையும் இத்துடன்.*

**பின்மதியம்**
**தொலைக்காட்சித் தொடர்கள் முடிந்துவிட்டன**
**சூரியன் புழுங்கடிக்கிறான்**
**நீலவானில்**
**வெண்ணிற மேகங்கள்**
**சமையலறைப் பாத்திரங்களெனச்**
**சிதறிக்கிடக்கின்றன**
**வாசலுக்கு வந்தவள்**



எதேச்சையாக அண்ணாந்து பார்க்க
காண்டாமிருகமொன்று முட்ட வருகிறது
கதவைத் தாழிட்டுக் கொண்டவளை
விடாமல் துரத்துகிறது
காடு மலையெல்லாம் ஓடி
அருவிக் கரையை அடைந்தவள்
அக்கரைக்குத் தாவ, எத்தனிக்கையில்
எச்சில் பாத்திரங்களால் இடறிவிழுகிறாள்
மூடப்படுவதற்குச் சற்றுமுன் விழித்துப்
பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்து அடுக்கி
முகமலம்பிக்கொண்டு வாசலுக்கு வந்தவள்
தெருவின் இருபுறமும் பார்த்தபின்
ஆகாயத்தைப் பார்த்தாள்
இருண்டுகிடந்தது
இதுவரையிலானவை ஒவ்வொன்றாக
நினைவில் வந்துசேர
மீதமிருந்த இடத்தை இருண்ட வானம்
அடைத்தது

அழுவதற்குத் தயாரானவள்
தொப்பென்ற சப்தத்தில் திடுக்கிட்டாள்
'பள்ளிக்கூடப்பை'யைத் தொப்பென்று
போட்டுவிட்டு
நாற்காலியில் தாவி அமர்ந்து
காலணிகளைக் கழற்றியபடி புன்சிரிக்கிறாள்
நிச்சலா



கறுத்த மேகங்கள் பரபரவென்று கலைகின்றன
(பக்கம் : 65)

*ஆரம்பத்திலுள்ள ஐந்தடியும் விவரணங்கள் தகவல்கள் - பொழுதை/ சூழலைக் காட்டும் விதமாய்;*

"வாசலுக்கு வந்தவள்
எதேச்சையாக அண்ணாந்து பார்க்க
காண்டாமிருகமொன்று முட்ட வருகிறது"

*காண்டாமிருகம், முட்ட என்னது? யதார்த்தத்தில் இல்லாதது;*

"கதவைத் தாழிட்டுக் கொண்டவளை
விடாமல் துரத்துகிறது"

*அதெப்படி?*

"காடு மலையெல்லாம் ஓடி
அருவிக் கரையை அடைந்தவள்
அக்கரைக்குத் தாவ, எத்தனிக்கையில்
எச்சில் பாத்திரங்களால் இடறிவிழுகிறாள்
மூடப்படுவதற்குச் சற்றுமுன் விழித்துப்
பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்து அடுக்கி
முகமலம்பிக்கொண்டு வாசலுக்கு வந்தவள்
தெருவின் இருபுறமும் பார்த்தபின்
ஆகாயத்தைப் பார்த்தாள்" -

*கவிதையின் தொடக்கத்தில் "வாசலுக்கு வந்தவள்" என்று ஒருமுறை; இங்கே மறுமுறை; "முட்ட வருகிறது", "முட்டப்படுவதற்குச் சற்றுமுன்" இந்தச் சொற்றொடர்கள் குறிப்பன என்ன?; முன்னம், "நீலவானில்/ வெண்ணிற மேகங்கள்"; "இருண்டுகிடந்தது"; இதற்கிடையேதான், 'காண்டாமிருகம்';*

"இதுவரையிலானவை ஒவ்வொன்றாக
நினைவில் வந்து சேர
மீதமிருந்த இடத்தை
இருண்ட வானம் அடைத்தது";

*பின்னுள்ள ஐந்து வரிகளும் நிகழ்எதார்த்தம்; கடைசி வரி, தற்குறிப்பு; தலைப்பு : 'பின்மதியம்'.*

*எதார்த்தம்தான் மாயப்புனைவு விரவ; குறியீடு சேர; பொருள் புரிந்திருக்கும்; இந்த விஷயத்தை இப்படி நுவல்வதே முறைமை ஆகும்; உணர்வுக்கூரான வாழ்வியல் பொருளை நுணுக்கமாக நவில்வதே உயர்கவிதை; பருவட்டான கவிதைகள் மலிந்து, சீரிய கவிதை அரிதாகிவிட்ட வேளையில் இதுபோலும் கவிதைகள் போற்றுதற்குரியவை.*

-அடுத்த இதழில் முடியும்.

• கவி : ரிஸ்கா முக்தார்
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்

புறக்கணிக்கப்பட்ட நேசமொன்றைச் சுமந்தலைவது
யாருக்கும் அத்தனை எளிதல்ல..

அதுவொரு தவம்;
அதை நீ அறிய வாய்ப்பில்லை..

இறுகத் தாழிடப்பட்ட நேசத்தின் கதவுகளை
நீண்ட நேரமாய்த் தட்டிக்கொண்டிருக்கிறேன்..

மூடப்பட்ட கதவுகளுக்கு முன் நிற்பவர்களின்
ஏக்கத்தினை
நீ அறிய வாய்ப்பில்லை..

ஆதரவாய்த் தலைக்கோதி
என்னாச்சு..? எனக் கேட்கும் குரலொன்றில்
என் மொத்த சோகமும் வழிந்தோடக்கூடும்..

இருந்தும்
அதை நீ அறிய வாய்ப்பில்லை..

என் ப்ரியமானவனே!!
நேசத்தின் சிறகுகளைக் கத்தரித்துப்
புறக்கணிப்பின் சிலுவையொன்றைத் தோள்களில்
சுமத்துகின்றாய்..

நல்லது..
உறைந்துகொண்டிருக்கும்
சிறு புன்னகையுடன்
மண்டியிட்டுக் காத்திருக்கிறேன்..

மரணத்தின் வாசலில்
எனை
நிற்க வைக்கப்போகுமந்த
இறுதிக்கடமையை
இப்போதே
நிறைவேற்று..

இத்தனைக்குப்பின்பும்..
புறக்கணித்த களைப்பில்
நீ ஓய்ந்து போகையில்..
இளைப்பாற இடம் தந்து
உனை மடிசாய்த்துக்கொள்ளவே முன்வருமெந்தன்
நேசத்தின் பெருநிழல்..

இருந்தும்
அதை நீ அறிய வாய்ப்பில்லை!!! ■



• கட்டாரி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# சிலேட்டுக்குச்சி

என்னதா கால்சட்டைக்கிக் காலு தடிமம் பொருத்தமா இருந்தாலும் பேண்டு வாங்கித் தரச் சொல்லி மொறச்சிக்கிட்டே பள்ளிக்கொடம் போன காலம் அது. நா இனிமே பெரிய மனுசன்னு நானே நெனச்சிக்கிட்டு இருந்ததப் புரிஞ்சிக்கிட்ட மாதிரி "ஆமா.. இவுக பெரிய்ய்ய்ய மனுச.... பேண்டு வேணுமாம் பேண்டு.... இந்த வருசம் காலுச் சட்ட போதும். அடுத்த வருசம் பாப்பம்''ன்னு எம் மொத்த நெனப்பையும் மொத்தமா ஒத்தக்கொத்தாப் புடுங்கிவிட்ருவாக அம்மா.. கூடவே ஒரு டப்பா புளிச்சோத்த பையிக்குள்ள திணிச்சி மிச்சம் வைக்காம திங்கணும்ன்னும் பேச்சுக்குதாஞ் சொல்லுவாக. அங்க நாங்க போடுற ஆட்டத்துல சோத்துல கெடக்குற கருவப்புள்ளகொட மிஞ்சாதுன்னு அவுகளுக்கு நல்லாவே தெரியும். சின்னப் புள்ளையா இருக்குறப்ப பெரிய மனுசனாக் காட்டிக்கிறதும் பெரிய மனுசனா ஆனதுக்குப் பொறவு சின்னப்புள்ளையாவே இருக்க நெனைக்கிறதுமான மனுசப் பொறப்பெல்லாம் ஒரு பொறப்பான்னு அப்ப யோசிக்கத் தெரியல.



அந்த மாதிரி ஒரு காலகட்டத்துலதா எங்களுக்குக் "குபீர் சிரிப்புக் குப்புச்சாமி"யா வாழ்க்கையச் சொல்லிக்குடுக்க வந்தவரு எங்க பால்ராஜ் சார். இது நாங்க வச்ச பட்டப்பேரு இல்லைங்க. அவருக்கு அவரா ஆண்டுவிழா நாடகத்துல வச்சிக்கிட்ட பேரு. நாடகத்துல அப்பிடிச் சிரிச்சாரே தவிர... நேர்ல சிரிச்சாப் பத்துப் பச்சப் புள்ளைகளுக்கு மொத்தமாச் சோறு ஊட்டிறலாம். அம்புட்டுக் கனிவு இருக்கும்.

எங்களுக்கு வாழ்க்கையச் சொல்லிக்குடுக்க வந்தாருன்னு சொன்னது.. அவரு எடுத்த பாடம் வரலாறு.. யாரோ ஒருத்தவுக வாழ்ந்த வாழ்க்கையத்தான வரலாறா நாம படிக்கிறம்.. அது நம்ம வாழ்க்கைக்கி எப்பிடி பயன் படுத்தணும்ன்னுச் சொல்லுறதுலதான அவுக வாழ்ந்த வாழ்க்கைக்கி ஒரு அர்த்தம் கெடைக்கிது. அப்பிடி எங்களுக்கு அர்த்தம் வெளக்கினவருதா பால்ராஜ் சார். 'யாருப்பா.. ஒங்க கிளாஸ் டீச்சர்'ன்னு யாராவது கேட்டா... அவரு பேரப் பெருமிதமாச் சொல்லிக்கிறலாம். அப்பிடியா ஊருக்கும் நல்ல மனுசன். அவரு சொல்லிக் குடுக்குற இங்கிலீசும் வரலாறும் அவருக்கிட்ட படிக்கிற பயலுகள அதுல புலமைத்துவம் கிடைக்கிற அளவுக்குக் கொண்டுவிடும்ன்னா.... வெறும் வாய் வார்த்தைக்கி எல்லாம் சொல்றது கெடையாதுங்க..... விடும்..!

கிப்பித் தலை, அரைக்கையும் இல்லாம... முழுக்கையும் இல்லாம முழங்கைச்சட்டை... பெல்பாட்டம் பேண்டுன்னு... நல்லாச் செங்குத்தாக் குத்திவச்ச வாள் மாதிரி நேராப் புடிச்சிச் சைக்கிள்ள வந்தா... ரெண்டு கிலோ மீட்டர் முன்னாடி இருந்தே சொல்லிரலாம்.. அது பால்ராஜ் சார்...! எதுக்கால வாற அம்புட்டுப் பயலுக சொல்லுற வணக்கத்துக்கும் சிரிப்பு மாறாம "வணக்கம்" சொல்லிட்டுப் போவாரு. வராந்தாவுல நடந்து வாரப்ப திடீர்ன்னு ஒரு பயமேல கையப் போட்டு... "என்னடா தம்பி...

சாப்ட்டியா...? நல்லாப் படிக்கிறியா..? எத்தனாவது ரேங்கு... அரையாண்டுல?" ரொம்ப நல்லாத் தெரிஞ்ச மாதிரியே பேசிட்டு "நல்லாப் படிக்கணும்..ம்ம்..!!"ன்னு சொல்லிட்டுப் போய்க்கிட்டே இருப்பாரு. அவரு சொல்லுறதுலையே நமக்கு நல்லாப் படிக்கணும்ன்னு மட்டுந்தா தோணும்.

எங்களுக்குப் பொதுவா மத்தியான சாப்பாட்டுக்கு மொதப் பீரியடுதா வரலாறு. பொதுவா மத்த பாடம் எதுவும் இருந்தா... சோறும்... சோறு சார்ந்த நெனப்புமாவே இருக்கும். சாரு வந்து பாடம் எடுக்குறப்ப மட்டும் இருக்கவே இருக்காது. அவரு பாடம் சொல்லிக் குடுக்குறப்ப... கண்ணு முன்னாடி... கலிங்கத்துல ரத்தம் ஓடும். அதுக்கு அப்பறமா அசோகரு மரம் நட்டுக்கிட்டே நம்மள தண்ணி ஊத்தக் கேப்பாரு. சாணக்கியர் நம்மகிட்ட வந்து புதிரு போடுவாரு. செல எப்படிச் செதுக்குனாகன்னு ராசராசன் வந்து நம்மகிட்ட பேசிக்கிட்டு இருப்பாரு... இப்பிடியா அந்தந்தக் காலகட்டத்துக்கே நம்மள கூட்டிக்கிட்டுப் போயிருவாரு. எப்பவும் அடிக்க மாட்டாரு. யாரு என்ன கேள்வி கேட்டாலும் ஒரு சிரிப்போடதா பதிலும் வரும்..

இவருக்கு அவரப் புடிக்காது.. அவருக்கு இவரப் புடிக்காதுன்னு பொதுவாப் பொறணி பேசிக்கிட்டுத் திரியிறப்ப எல்லாருக்குமே புடிச்ச ஒரு மனுசன் யாருன்னா.. அது எங்க பால்ராஜ் சாருதான். பயலுகள்கிட்ட நவாப் பழம் மாதிரியும் பெரியவுககிட்ட வெத்தல பாக்கு மாதிரியும் சுளுவா ஒட்டிக்கிற அவரோட கொணந்தா அதுக்குக் காரணமின்னு நெனக்கிறேன்.

ஒருநாளு சனிக்கெழம பள்ளிக்கொடம். சனிக்கெழமன்னா எங்களுக்கு அரைப் பள்ளிக்கொடந்தான். மத்தியானம் லீவுங்கிறதுனால கடேசி பீரியடுக்கு முன்னாடியே பையிமூட்ட எல்லாங் கட்டி ரெடியா வச்சிருந்தோம். அன்னைக்கின்னு பாத்து சாரு வரக் கொஞ்சம் லேட்டு. எங்க ஹெட்மாஸ்டரு ரூமு பக்கத்துலங்கிறதையும் மறந்து கொஞ்சம் உற்சாக மிகுதில கத்திக் கூப்பாடு போட்டுட்டோம். யாரு வெளில என்ன சொன்னாகன்னு தெரியல.. சாரு .. சரட்டுன்னு உள்ள வந்தாரு. என்னைக்கும் பாக்காத கோபம்.. படிக்கிறவம்.. படிக்காதவம்.. வளத்தி.. குட்டை... அறிவாளி.. மக்கு... அடங்குனவன்.. அடங்காதவன்.. போர்டுல பேரு எழுதுற எங்க லீடரு உள்பட எல்லாத்தையும் சகட்டுமேனிக்கு.. ஒரு சாமுராய் கணக்கா வெளுவெளுன்னு வெளுத்து எடுத்தாரு.

"எல்லாப் பயலுகளும் வெளில போய் முட்டி போடுங்க... இன்னைக்கி நாஞ் சொல்லாம ஒரு பய வீட்டுக்குப் போகப்படாது" ன்னுட்டுப் போயிட்டாரு. பெல்லு அடிச்சிப் பயலுக எல்லாம் தெறிச்சி ஓட... கூடவே எல்லாரும் எங்களைப் பாத்துச் சிரிச்சிக்கிட்டும் ஓடுனாய்ங்க. தலையத் தொங்கப்போட்டுக்கிட்டே அழுது முடிச்சோம். ஒருவழியாக் கோவம் கொறஞ்சி எதுவும் பேசாம வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாரு.

திங்கக்கெழம காலையில வந்து "பயலுகளா.... அன்னிக்கிக் கொஞ்சம் கடுமையாத்தா நடந்துக்கிட்டேன். எம்பேர்லையும் தப்பு இருக்கு. நானும் சீக்கிரமா வந்திருக்கணும்.. இனிமே அப்பிடி நடக்காம நாம எல்லாரும் பாத்திக்கிருவோம்"ன்னு பழைய மாதிரியே பச்சப் புள்ள மாதிரி சிரிச்சாரு... அவரு செஞ்சது தப்பு இல்லைன்னாலும் அதைத் தப்பா நெனச்சி வருத்தப்படுற மனசு இப்ப இருக்குற எத்தன வாத்தியார்களுக்கு இருக்குன்னு தெரியல.

ஒருநாளு.. "சார்.. இவன் என்னைய நாங் கருப்பா இருக்கேன்னு கிண்டல் பண்ணிக்கிட்டே இருக்கான் சார்"ன்னு பிராது வச்சேன். "டேய்.. பயலே.. அப்படில்லாம் யாரையும் சொல்லக் கூடாதுடா. போ போ..." ன்னு அவனை அனுப்பிட்டு என்னைப் பாத்து "டேய்.. நா ரொம் பல்லாம் சொல்ல மாட்டம் "கருத்துள்ளவன் எல்லாம் கருத்துள்ளவன்" போய்ப் படி" ன்னு எனக்குள்ள ஒரு வெதையப் போட்டாரு. என்னைப் போலப் பலபேருக்கும்..! இன்னைக்கி வரைக்கும் பல விசயங்களக் கடந்துவரவும்... செஞ்சிக் காமிக்கவும் அது மொளைச்சிக்கிட்டே இருக்கு.

இன்னைக்கும் அதே சைக்கிள்.. அதே சிரிப்பு.. எம்புட்டு வேகமாப் போனாலும் அவரப் பாத்தா எறங்கி நின்னுப் பேசிட்டுப் போக வைக்கிற சாந்தம்... வாய்ப்பே இல்லைங்க.. சார் சார்தான்.... அந்தப் பள்ளிக்கொடத்த விட்டு வாரப்ப சாரு எனக்கு எழுதிக் கொடுத்தது...

"நியாயங்கள் காயப்படுத்தப்படும்போது பொங்கி எழு..

காயங்களை நியாயப்படுத்த சிந்தனை செய்"

அப்ப அவரு எழுதினது என்னமோ காகிதத்துலன்னாலும்... இன்னைக்கி வரைக்கும் அது.. அவர மாதிரியே.. மனசுல இருக்கு.....! ■

• கிருஷ்ணப்ரியா

# சுகன் என்றொரு அன்பு



மிகப்பல வருடங்களுக்கு முன்பு, 1987ஆம் வருடமாக இருக்கலாம், கவிதைகளை எழுதுவதிலும், கவியரங்கங்களில் பேசுவதிலும் நான் ஆர்வமாகத் திரிந்த காலத்தில் முதன்முறையாகச் சுகனைச் சந்தித்தேன். சுகன் ஒருங்கிணைத்த கவியரங்கங்களில் பேசியதும், கவிதைகள் கதைகள் என்று பேசி மகிழ்ந்திருந்ததும் மிகவும் இனிய நாட்கள்... சாட்டியக்குடி இளம்பிறை என்ற கவிஞர் தோழி இளம்பிறையின் நட்பு கிட்டியதும், தஞ்சை பிரகாஷ் என்ற மிகப்பெரிய ஆளுமையின் கதை சொல்லல் நிகழ்வுகளில் சொக்கிக் கிடந்ததும் சுகனின் தயவால்தான். சுகன் என்ற இனிய மனிதரை அறிமுகம் செய்துகொள்ளாமல் இருந்திருந்தால், நான் கவிதைகளின் பக்கம் வந்திருப்பேனா எனத் தெரியவில்லை. கவிதைகளின் மீதான என் விருப்பத்தை மேலும் தூண்டியவர் அவரன்றி வேறு யாருமில்லை. ஏதோ தோன்றியதை எழுதிக்கொண்டிருந்த என்னிடம், ஊக்கமளித்து, சுகன் இதழுக்குப் படைப்புகளாக வாங்கியவர் அவர். சுகன் நடத்திய தமிழ்த்தாய் இலக்கியப் பேரவையின் கூட்டங்கள் இல்லாமல் இருந்திருந்தால், இலக்கிய இதழ்களைக் கூட வாசிக்கத் தெரியாதவளாக ஆயிருப்பேனோ என்னவோ.. ஆனால் அவர் என்னைச் சரியான திசைக்குத் திரும்ப உதவினார்.

வெறும் இலக்கிய நட்பாக மட்டுமல்லாமல், குடும்ப உறுப்பினர்களோடு அன்பின் நூலால் இணைந்த மாலையாக ஆகிப்போனது எங்கள் நட்பு...

எந்த மனக்குழப்பம் இருந்தாலும் உடனே ஓடிச் செல்கிற இடமாகச் சுகனின் இல்லம் எனக்கிருந்திருக்கிறது. ஒருமுறை அவரைத் தேடிப் போய், அவர் வீட்டிலில்லாமல் நான் திரும்ப, திருமதி வதனா சுகன் சொன்ன தகவலில் மாலை வீடு திரும்பியதுமே சுகன் என்னைத் தொலைபேசியில் அழைத்தது இப்போது நினைவு அடுக்குகளில் இருந்து வெளியே வந்து என்னைக் கண்ணீரில் நனைக்கிறது.

பலரும் என்னைக் குறிப்பிடுகையில் நான் எழுதிய அபிஷேகம் கவிதையைப் பற்றிச் சொல்வதுண்டு. அந்தக் கவிதையை நான் எழுதிய சூழலை நினைத்துப் பார்க்கிறேன். கோவிலுக்குச் சென்று அங்கே பார்த்த அபிஷேகம் குறித்து உடனேயே ஒரு கவிதை எழுதி முடித்து மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்க்கிறேன். யாரிடமாவது அந்தக் கவிதையைப் பகிர்ந்துகொள்ளத் துடித்தது மனசு... உடனே என் கைகள் சுகனது

என்னைத்தான் தொடர்பு கொண்டன. 'நான் ஒரு கவிதை எழுதியிருக்கேன், படிக்கவா?' என்று கேட்டதும், 'ஆஹா.. படிங்கம்மா' என்ற அவரது உற்சாகக் குரலில் சொல்ல, நான் உணர்ச்சி வசப்பட்ட குரலில் கவிதையைத் தொலைபேசியில் வாசிக்கிறேன். . 'ரொம்பச் சிறப்பா வந்திருக்கும்மா. உடனே எனக்கு அனுப்புங்க' என்று சொன்னதோடு நில்லாமல், சுகனில் பிரசுரித்தார். அந்தக் கவிதை தினமணியில் கலாரசிகன் பக்கத்தில் பாராட்டப்பட்டதும், தொடர்ந்து முரசொலியில் வெளியிடப்பட்டு மிகுந்த கவனத்தை ஈர்த்ததும் சுகனால் எனக்குக் கிடைத்த அங்கீகாரம் என்று மட்டும்தான் சொல்ல முடியும். அம்மா சுசீலா விருதையும் எனக்குப் பெற்றுத் தந்தது அந்தக் கவிதை.

விமர்சனம் என்ற பெயரில் எப்போதுமே அவர் என்னைக் குத்திக் கிழித்ததில்லை. அதற்கு அவர் ஒரு காரணம் சொல்வார். 'பலவிதமான நெருக்கடிகளுக்கு மத்தியில் உங்களைப் போன்ற பெண்கள் எழுத வருகிறார்கள். உங்கள் எழுத்தில் இருக்கும் சிறப்பை உரக்கச் சொல்லி, விமர்சனங்களை மெல்லச் சொன்னால்தான் நீங்கள் தொடர்ந்து இயங்க உத்வேகமாக இருக்கும்' என்ற அவரது காரணம் என்னை மிகவும் நெகிழ வைத்தது. கவிதைத் தொகுப்பு போடும் எண்ணமில்லாமலிருந்த என்னை, உங்களுக்கு முகவரி அட்டையாக உங்கள் கவிதைத் தொகுப்பு இருக்கும் என்று நம்பிக்கையூட்டி, அவரது பதிப்பகத்திலேயே நூலைக் கொண்டு வந்ததோடு, சுகன் 300 நிகழ்வில் வெளியீடும் நடத்தி எனக்குப் பெருமையைத் தந்தவர் அவர்.

சிறுகதைகளைக் கூட அவரது சுகன் இதழில்தான் முயற்சி செய்தேன். முதல் சிறுகதை வந்தபோது, 'இதை இப்படியே போடலாமா, உங்கள் மீது பலவிதமான கேள்விகள் வரலாம் (அது ஒரு ஆட்டோகிராப்தனமான காதல் கதை) பரவாயில்லையா?' என்று போன் செய்து கேட்ட அவரது பண்பு என்னை ஆச்சரியப்படுத்தியது. அதைப்போலவே கதைகளைக் கொண்டுபோய்க் கொடுக்கும்போது, 'நீங்கள் சொல்லும்போது அந்தக் கதையில் இருக்கிற வண்ணங்கள் எழுதும்போது வரவில்லையேம்மா... நான் ஒன்னு சொல்றேன் கேளுங்க. முகப்பூச்சு போட்டு அலங்காரம் செய்த மாதிரியும் தெரியக் கூடாது, ஆனால் முகப்பூச்சு போட்டுக் கொள்ளவும் வேண்டும். அது மாதிரி கதைகளில் வண்ணங்கள் உறுத்தாமல் பூசத் தெரிய வேண்டும்', என்ற அவரது அறிவுரையை அடிக்கடி நினைத்துக் கொள்கிறேன். முகப்பூச்சு பூசாதவள் என்பதாலோ என்னமோ, இன்னமும் அப்படி உறுத்தாத அலங்காரங்களைக் கதைகளில் கொண்டுவரத் தெரியாதவளாகவே இருக்கிறேன். அதைப்பற்றி யோசிக்கையில் எல்லாம், கூடவே அவரது ஆலோசனைகளும் நினைவுக்கு வருகின்றன.

எத்தனையோ கூட்டங்களில் பேசியிருக்கிறேன். தஞ்சை பிரகாஷின் படைப்புகளை அவர் ஒருங்கிணைத்த கூட்டங்களில் பேசியது மறக்க முடியாத அனுபவம். பேசமுடியுமா என்னால் என்ற என் புலம்பலை ஒருபோதும் காதில் வாங்கிக் கொள்ளாமல், 'உங்களால் முடியும், இயல்பாகப் பேசுங்கள்' என்று மட்டுமே சொல்லி என்னை மேடைகளில் ஏற்றியவர் அவர். இதை எழுதஎழுதக் கண்கள் பனிக்கிறது.. அய்யோ.. ஏன் சுகன் இத்தனை வேகமாகப் பிரிந்து போனீர்கள்?

'இளைத்த மாதிரி தெரிகிறீர்களே, நீரிழிவு நோயிருக்கிறதா?' என்ற என் கேள்விக்குச் சிரித்தபடியே 'உங்கள் துறைக் கண்ணாடியைக் கழற்றி வைத்துவிட்டு என்னைப் பாருங்கள்.. நான் நன்றாகத்தானிருக்கிறேன்' என்றார். ஆனால், இனிய மனிதரான அவருக்குள் இருந்த பிடிவாதம் அவர் உடல்நலனில் அக்கறை காட்டவில்லை. அவரை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டுக் கண்ணீரை மறைத்துக் கொண்டு, எப்படியாவது மீண்டும் நல்ல உடல்நிலைக்கு அவரைக் கொண்டுவந்துவிடத் துடித்தார் அவரது மனைவி. அவரது அத்தனை உழைப்பையும், கண்ணீரையும் வீணாக்கிவிட்டு மறைந்து போனார் சுகன். முழுதாக ஐம்பது வயதில் அவரது காலம் முடிந்ததை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் பதறுகிறது. ஜூன் 5ஆம் தேதி வரும்போதெல்லாம் சுகனும் சேர்ந்தே நினைவுக்கு வருவதை உங்களுக்கு போன் செய்து சொல்லத் தோன்றுகிறது சுகன். எப்போது போன் செய்தாலும் எனக்குக் குழப்பம் தீரவும், தெளிவு பிறக்கவும் நேரம் பாராமல் பேசுவீர்களே... இப்போது எங்கிருக்கிறீர்கள் சுகன்... ■

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

எல்லைக்கோடுகள் என்றும் குருதியால்தான்
வரையப்பட்டிருக்கிறது
வெற்றியின் முழக்கங்கள்கூட
குண்டுச்சத்தத்தில்தான் உரைக்கப்பட்டிருக்கிறது
பொம்மைகள்கூட துப்பாக்கிகள்தான்
எங்கள் குழந்தைகளுக்கு
ஆமாம் அஹிம்சை அரைகிலோ
என்ன விலை

– அகதா

## நீர் நோக்கு...

எந்த நதி என்று
யாருக்கும் தெரியாமல்
வந்து விழுந்தது மழைத்துளி
...
தரையில் மோதித் தன்
நீண்ட பயணத்தை முடித்துக்கொண்ட
பெருங்கடல்...
மீண்டும் ஆறாக முயல்கிறது..
பிறவிப் பெருங்கடல்..
...
சுமை இறக்கிய
மேகங்களை
மேய்த்துக்கொண்டிருக்கிறது
காற்று..
..
மீண்டு வருவோமென்றே
விடைபெற்ற மழைத்துளிகளின்
விலாசம் தேடுகிறது
வானம்...
..
கருவறைக்குள் நுழையும்
சிறு துளியொன்றில்
ஏதோ ஒரு வானத்தின்
எதிர்பார்ப்பும்..சேர்ந்தே
பயணிக்கின்றது
..
கடைசி மண்துகளால்
முகடாக்கப்பட்டுத்
தெளிக்கப்பட்ட
கண்ணீர்த்துளிகளின்
ஈரம் காயுகையில்..
மீண்டும் வானம் பார்த்து
நிற்கும்..
புதைக்கப்பட்ட
அதே நீர்த்துளி
..

– சிந்தா



ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

## ஒரு தேசபக்தனின் கதை!



இந்தப் பதின்மூன்றாவது போரில்...
மொத்தமாகச் சூறையாடியபின் அந்த நகரம் இருந்த இடம்
எங்களால் புறக்கணிக்கப்பட்டது.
பெண்களையும்
குழந்தைகளையும்
போர் விதிகளின்படி விடுதலை செய்து
அநாதைகளாக்கிவிட்டு....
புகைக்கரி மண்டிய குளத்தில் அடிமைகள்
குளித்துக்கொள்ள அனுமதித்தோம்.
அனைவரும் விரைத்தபடி
மறுத்தனர்!
அவர்களின் நெஞ்சில்
தீட்டப்பட்டிருந்த அடையாள
இலச்சினைகளைக்
கூரிய ஈட்டி முனைகளால்
கீறி அழித்தோம்!
அனேக மூட்டைகளில்
துண்டுதுண்டாய் அவர்களின் நகரம் கட்டப்பட்டிருந்தது.
முதுகிலேற்றிக் கசையடி கொடுத்தோம்!

கண்களில் கனல் காட்டிய சில அடிமைகளின் உலகை
இருட்டாக்கிய பின்
எஞ்சியவர்கள் ஊமைகளாயினர்!
எங்கள் காயங்களிலிருந்தும்
இரத்தம்தான் வடிந்தது.
ஆனால்
நாங்கள்தான்
வெற்றிபெற்றுவிட்டோமே!
ஆர்ப்பரித்து நெருங்கினால்
இந்த அடிமைகளில்
மாண்டவர்கள் மூட்டிய தீ
இன்னும் எங்கள் நகரத்தை எரித்துக்கொண்டிருந்தது!
செப்பனிட்டுக்
கொண்டுவந்த மூட்டைகளை அவிழ்த்துப் பரப்பினோம்.
இரத்த நெடிசூழ
எங்கள் நகரம் எழுந்தது!

அந்தப்புரத்திலிருந்து
வெளியே வந்த அரசன்
வெற்றி வெற்றியென்று
கொக்கரித்தான்!

அவசரமாய் ஓடிவந்த ஒற்றன்
பகைதேச நகரமொன்றில்
அமைதி நிலவுவதாக
ஓலை வாசித்தான்.
அரசனுக்குப் படுக்கையறையிலிருந்து
அடுத்த போருக்கு அழைப்பு வந்ததும்,
அண்டைநகரத்து அமைதியை
அள்ளிவந்து கருவூலத்தில்
சேர்க்கக் கட்டளையிட்டுவிட்டு
மின்னலெனக் கதவடைத்தான்!
நாங்கள்
விழுப்புண் தொட்டுத்
திலகமிட்டுக்கொண்டு
புறப்பட்டபோது
இருட்டத் தொடங்கிவிட்டிருந்தது!?

– குறிஞ்சி நாடன் ■

# வாழ்த்துக்கள் என்றொரு வார்த்தை

• ஆ.நாகமுத்து பாண்டியன்
முதுகலை மூன்றாமாண்டு, கணினி பயன்பாட்டியல்,
அன்னை கல்லூரி, கும்பகோணம்.




கும்பகோணம் ஆர்.சி.விடிவெள்ளி உயர் நிலைப்பள்ளிதான் என் இலக்கிய ஆர்வத்திற்கு முதல் தொடக்கமாக இருந்தது. நான் ஒன்பதாம் வகுப்பு படித்தபோது வகுப்பாசிரியராக இருந்த அருட்சகோதரி சந்திரா அவர்கள் தினமும் வகுப்பில் ஒவ்வொருவரைத் தேர்வு செய்து ஏதேனும் ஒருதலைப்பில் ஐந்து நிமிடம் பேசச் சொல்லுவார். அந்த வருடத்தில் நான் இரண்டுமுறை புத்தர், வீரமாமுனிவர் என்ற தலைப்புகளில் திக்கித்திக்கிப் பேசியிருக்கிறேன். இந்த இலக்கிய அறிவோடும் அப்போது பள்ளியின் தலைமையாசிரியராக இருந்த அருட்சகோதரி லீமாரோஸ் அவர்கள் எனக்குக் கற்றுக்கொடுத்த நற்பண்புகளோடும் பயணித்துக்கொண்டிருந்தேன். பிறகு பத்தாம் வகுப்பு வரை பள்ளி படிப்பு வீடு என்று நாட்கள் சென்றன. பத்தாம் வகுப்பு முடிந்து வெற்றிகர மாகப் பதினொன்றாம் வகுப்பிற்கு வேறொரு பள்ளிக்கு மாறினேன். மாற்றம் பள்ளியில் மட்டுமல்ல என் வாழ்விலும் நிகழத்தொடங்கியது. கும்பகோணம் சிறிய மலர் மேல்நிலைப்பள்ளியில் உருவத்தில் குள்ளமும் தோற்றத்தில் எளிமையும் கொண்ட தமிழாசிரியர்தான் என் உயரத்திற்கு அடித்தளமிட்டார். அவர் பெயர் புலவர் அந்தோணி. பதினொன்றாம் வகுப்புத் தொடக்கத்தில் வகுப்பில் புத்தகங்களை வாசிப்பது, தமிழில் பேசுவது, பேச்சு கவிதை கட்டுரைப் போட்டிகளுக்கு வகுப்பு வகுப்பாகப் பெயர் எடுப்பது என்று படிப்படியாகத் தமிழ் மீது ஆர்வம் வந்தது. முதலில் பள்ளி அளவில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்றுத் தோல்வியைத் தழுவினேன். இதனால் பள்ளி சார்பில் வெளியில் நடக்கும் போட்டிகளில் பங்குபெற முடியவில்லை. காரணம் நான் படித்த பள்ளியில் பேச்சாளர்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் எழுத்தாளர்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் பேசத்தான் முடியவில்லை எழுதலாம் என்று முடிவெடுத்துப் பல கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டேன். பொதுவாகக் கட்டுரைப் போட்டி ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும். ஆனால் பேச்சுப் போட்டி கணக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கும் நிலையில் கட்டுரைப் போட்டியை முடித்துவிட்டுப் பேச்சுப் போட்டி நடக்கும் அறைக்குச் சென்று ஒவ்வொருவரும் பேசுவதைக் கேட்டுக்கேட்டு என்னையே செதுக்கிக்கொண்டேன். காலம் கடந்தது. பன்னிரெண்டாம் வகுப்புத் தொடக்கம் எனக்கு ஒரு நல்ல தொடக்கமாக அமைந்தது. தஞ்சாவூரில் சாலைப் பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு ஒரு பள்ளியிலிருந்து மூன்றுபேர் கலந்து கொள்ளலாம் என்ற விதிமுறையுடன் பேச்சுப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த மூவரில் ஒருவனாக நானும் சென்று பெரிய பேச்சாளர்களைப் பின்னுக்குத் தள்ளி முதல்பரிசு பெற்றேன். அன்று என்னுள் எரிந்த சாதனை என்னும் அணையா நெருப்பு இன்னும் என்னுள் எரிந்துகொண்டிருக்கிறது. இந்தப் படிப்படியான முன்னேற்றம்தான் என்னைப் பேச்சுத் துறையில் சாதனையாளனாக இன்று மாற்றியிருக்கிறது.

05.04.2015 அன்று கும்பகோணம் அரசுப் பொறியியல் கல்லூரியில் தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு "FACT" என்ற அமைப்பு பேச்சுப் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதில் நானும் பங்கு பெற்றேன். தலைப்போ விவசாயம், நீர் மேலாண்மை பற்றி இருந்தது. எளிமையான தலைப்பு என்பதால் எப்போதும் இல்லாத வகையில் அரங்கம் அதிரும்வண்ணம் மிகச்சிறப்பாகப் பேசினேன். என் உரையைக் கேட்டு அனைவரும் கை கொடுத்தார்கள். பாராட்டினார்கள்.. ஊக்கமூட்டினார்கள். ஆனால் நானோ இது எல்லாப் போட்டிகளையும் போல வெற்றி பெற்றால் புத்தகமோ, சான்றிதழோ அல்லது கேடயமோ கொடுத்து

அனுப்பி வைத்துவிடுவார்கள்.. இதற்கு வெற்றி பெற்றால் என்ன, தோற்றால் என்ன என்ற மிதப்பில் இருந்தேன். சிறிது நேரத்தில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்ற செய்தி வர அனைவரும் பதட்டத்துடன் முடிவுகள் அறிவிக்கும் இடத்திற்கு ஓடினார்கள். நானோ பொறுமையாக நடந்து சென்றுகொண்டிருந்தேன்.

அப்போது திடீரென ஒரு செய்தி வந்தது. வெற்றி பெற்றவர்க்கு நாளை நடைபெறும் விழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கரங்களால் பரிசு வழங்கப்படும் என்று. உடனே என்னை அறியாமல் ஓடிச் சென்றேன் முடிவுகள் அறிவிக்கப்படும் இடத்திற்கு. மனதில் டிக்டிக் என்ற சத்தத்தோடு என் கண்கள் நடுவரை நோக்கியே இருந்தன. நான் எந்தப் போட்டியிலும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இறைவனைப் பிரார்த்தனை செய்தது இல்லை. ஆனால் அன்று நான் வேண்டினேன், எப்படியாவது கலாம் ஐயாவைப் பார்க்க வேண்டும் என்று. வேண்டிக்கொண்டிருக்கும் போதே முடிவுகள் அறிவித்தார்கள். ஆனால் அறிவிக்கப்படவில்லை.. அறிவிக்கிறோம் என்று சொன்னவர்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டே இருந்தார்கள். என்னைப் போன்ற பேச்சாளர்களோ முடிவுகள் எப்படி இருக்குமோ என்ற சிந்தனையிலே இருந்தோம்.

இதோ சொல்கிறோம் அதோ சொல்கிறோம் என்று சொன்னவர்கள் இறுதியாக ஒரு மணி நேரம் கழித்துச் சொன்னார்கள்.... பல்கலைக்கழக அளவில் முதலிடத்தைப் பெறுபவர் அன்னை கல்லூரி மாணவன் ஆ.நாகமுத்து பாண்டியன் என்று. மகிழ்ச்சியின் உச்சத்திற்குச் சென்றேன். நாட்டின் குடியரசுத் தலைவர் பதவியில் இருந்தவர் தரிசனம் மிக எளிமையாக நாட்டின் சாதாரணக் குடிமகனுக்கும் கிடைக்கும் என்பதை அன்று புரிந்துகொண்டேன். உடனே நாளை நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு கலாம் ஐயா கையால் பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி அனைவரும் கலைந்து சென்றார்கள். நான் வீட்டிற்குச் சென்று அனைவரிடமும் அன்று நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் பகிர்ந்துகொண்டேன். காலம் சட்டென்று ஓடியது. நாளை விழாவில் என்ன நிற ஆடை அணிய வேண்டும், எந்த நேரத்தில் செல்ல வேண்டும், ஐயாவிடம் என்ன வார்த்தை களைப் பேச வேண்டும் என்ற சிந்தனையில் உறங்கினேன். கனவு காணுங்கள் என்று சொன்ன கலாம் ஐயாவைக் காணுவதுதான் அன்றைய கனவாக இருந்தது.

மறுநாள் சூரியன் விடிந்தது. என் வாழ்விலும் கூட. விழா நடக்கும் அரசுப் பொறியியல் கல்லூரிக்குச் சென்றேன். திரும்பும் இடமெல்லாம் இளைஞர் கூட்டம். அத்துணைப்பேர் கண்களும் மேடையை நோக்கியே.. கலாமைக் காண வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு. சிறிது நேரம் கழிந்தது. எந்தவிதக் கூச்சல் குழப்பமும் இல்லாமல் அமைதியான முறையில் மென்மையான தன் இரு கைகளையும் கூப்பியவாறு சிரித்த முகத்துடன் தரிசனம் கொடுத்தார். நாங்களோ இருகைகளையும் தட்டி ஐயாவை வரவேற்றோம். பிறகு மேடையில் குத்துவிளக்கேற்றினார். எங்கள் வாழ்விலும் கூட.

எல்லாப் போட்டிப் பரிசளிப்பு விழாக்களிலும் பேசி முடித்துவிட்டுக் கடைசியில்தான் பரிசு கொடுப்பார்கள். காரணம் முதலில் பரிசு கொடுத்துவிட்டால் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள். பிறகு கூட்டம் இல்லாமல் விழா நடக்கும் என்ற பயத்தில் அப்படிச் செய்துவிடுவார்கள். ஆனால் இங்கு மாற்றாக முதலில் பரிசு கொடுக்கப்பட்டது. என் பெயர் அறிவித்தவுடன் நானும் கலாம் ஐயாவின் அருகில் சென்று கை கொடுத்து அவர் பாதங்களை வணங்கினேன். அதற்கு ஐயா அவர்கள் வாழ்த்துக்கள் என்று சொன்னதை என் வாழ்நாளில் கிடைத்த பாக்கியமாக எண்ணி மகிழ்ந்துகொண்டேன். பிறகு கும்பகோணத்தின் பெருமையைச் சொல்லி ஊக்க உரை நிகழ்த்தினார். ஐயாவின் உரையைக் கேட்கக் கடைசி வரை இருக்கை கொள்ளாத இளைஞர் கூட்டம் நிரம்பி வழிந்திருந்தது.. கடைசி வரைக்கும். பிறகு விடைபெற்றார் மேடையை விட்டு. பிறகு இரண்டு மூன்று மாதம் கழித்து ஒரு செய்தி வந்தது.. இந்த உலகத்தை விட்டு விடைபெற்றார் என்று. கலாம் ஐயா என்னிடம் பேசிய ஒற்றை வார்த்தை 'வாழ்த்துக்கள்'. இந்த வாழ்த்துக்கள் என்ற வார்த்தை நான் வெற்றி பெறுகிறபோது என் காதில் ஒலிப்பதில்லை. நான் தோற்று இந்த மண்ணில் மண்டியிட்டுக் கிடக்கும்போதெல்லாம் ஒலித்து என்னை மீண்டும் அதே புத்துணர்ச்சியோடு விவேகத் தோடு அடுத்தடுத்த போட்டிகளில் களமிறங்கத் தூண்டிக்கொண்டிருக்கிறது. என் கல்லூரியின் துணைகொண்டு இன்று பேச்சால் மாநில எல்லைகளை அளந்துகொண்டிருக்கிறேன். விரைவில் கடல் கடந்து உலக நாடுகளுக்குப் பயணிக்க விரும்புகிறேன்.. நல்ல தமிழ் பரப்ப! ■

**கவிச்சித்திரம்**

கவி : ராம் பெரியசாமி
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்



# பறவைகளுக்கு வீரவணக்கம்

செவ்வானத்தின் மற்றுமொரு
உணர்நிலைப் பிறழ்வு
வனக்குவியல்களின் பசுமைக்குடுவைக்குள்
சற்றும் எதிர்பாராத சதியின்
காட்டுத்தீயொன்று
கட்டுக்கடங்காத எரிநிலை பிரவகிக்கும்
கணத்தில்..

மழைவேண்டிக் காற்றில்
மண்டியிட்டுப் பறக்கின்ற
மழைக்குருவிகளுக்கு
ஏறக்குறைய நெடுநிலை
மூச்சுகளடைத்துச் சாம்பல் புகைக்கட்டிற்குள்
தீர்ந்துபோக ஓலமிடுகிறது....

கண்முன்னே எரிந்துருகும்
அம்மரத்தின் நிர்வாண
ஒரு பொந்திற்குள்
பறக்கவியலாத் தம் குஞ்சுகளை
அவற்றின் கூப்பாடுகளை
என்ன செய்வதென்றறியாச்
சிரத்துள்ளாகிக் கண்களை விரிப்பதற்குள் கருகிப்போன
வனவீட்டை நான் சுள்ளிகள்
பொறுக்கிச் சேர்ப்பேன்
இனி எங்ஙனம் உயிரை
உயிர்ப்பிப்பேனெனத் தவிக்கின்ற
இத்தருணத்தில்...

இந்நேரம் கடவுள் முளைத்திருக்க
வேண்டும்...

புல் மட்டும் முளைக்குமென
எறும்புகளுக்கு முன்கூட்டியே
தெரியும்... ■

சிறுகதை

• ரிஸ்வான் ராஜா
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# தனிமை



சுவற்றின் நான்கில் ஒரு பகுதியளவில் பெரியதொரு தொலைக்காட்சி மாட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் ஓடிக் கொண்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் சிலர் கடுகடுத்த முகத்தோடு காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஜன்னலின் வழியே நுழைந்த சூரியக் கதிர் களைப்பில் கூடத்தின் நடுவில் படுத்துக்கிடந்தது.

செய்தித்தாளை ஐந்தாவது பக்கத்திலிருந்து ஆறாவது பக்கத்திற்குத் திருப்பும் முயற்சியில் மின்விசிறி தனது இறக்கைகளை நீட்டியபடி காற்றில் சுழன்றது. டீ மேசையில் தூரத்துப் பார்வையைச் சரி செய்யும் தங்கச் சட்டத்தாலான மூக்குக் கண்ணாடி இருந்தது. அதனருகில் பாதிக் குடித்தது போக மீதி காபி கோப்பையில் ஆறியிருந்தது.

குளியலறையில் சீரான இடைவெளியில் டொக்டொக்கென்று தண்ணீர் சொட்டும் சத்தத்தோடு சேர்ந்து அடுக்குமாடிக் குடியிருப்பின் ஏதோவொரு வீட்டில் அழுத்தப்படும் வாசற்மணிச் சத்தமும் கேட்டது.

எதையோ யோசித்தவாறு சோபாவில் சாய்ந்திருந்த கந்தசாமி, டீ மேசையில் வந்தமர்ந்த ஈயைப் பார்த்ததும் இமைகள் விரிய எழுந்து உட்கார்ந்தார்.

ஈ கை, கால், முகம், இறக்கை, பின்பகுதியென ஒவ்வொன்றாகத் துடைத்துவிட்டுச் சிந்திக் கிடந்த காபியை உறிஞ்சத் தொடங்கியது. கந்தசாமி அசையாமல் அதையே உற்றுப் பார்த்தார். லேசாகத் தலையை நிமிர்த்திய ஈ மீண்டும் தனது உடம்பின் ஒவ்வொரு பகுதியையும் துடைத்துக் கொண்டது.

கந்தசாமி மௌனம் கலைத்தவராய், “நீ எங்க இருந்து வர்ற? உனக்கு யாரு இவ்வளவு சுத்தமா இருக்கணும்னு சொல்லிக் கொடுத்தது? உண்மையிலயே நீ இந்த அளவு சுத்தமா இருக்கணும்னுதான் நினைக்கிறியா?” என்று அடுத்தடுத்துக் கேள்விகளை அதனிடம் கேட்டார்.

அவர் கேட்டது எல்லாம் காதில் விழுந்தது போல் சட்டென்று பறந்து கோப்பையின் வாயில் அமர்ந்தது.



“இல்ல இல்ல.. நான் உன்ன விரட்ட மாட்டேன். நீ பயப்படாமப் பொறுமையாக் குடி” என்றார். ஈ கோப்பைக்குள் நுழைந்தது.

“காபி நான் போட்டதுதான். இனிப்பெல்லாம் எப்படிச் சரியா இருக்கா?” என்றார். ஈ அப்படியே நகர்ந்து மேசைக்கு வந்தது.

“சரி உனக்குக் காபி குடிக்குற பழக்கத்த யார் ஆரம்பிச்சுவிட்டது? எனக்கு என் பொண்டாட்டி தான். கல்யாணத்துக்கு முன்னாடிவரை டீதான் குடிச்சிக்கிட்டு இருந்தேன். அவளுக்குக் காபி பிடிக்கும்கிறதனால.. போகப்போக அதே பழக்கத்தை எனக்கும் பழக்கிட்டா. சும்மாச் சொல்லக்கூடாது. நானும் வெளில எங்கயெல்லாமோ காபி குடிச்சிருக்கேன். ஆனா, அவ போடுற காபியோட சுவையே தனிதான். ம்ம்ம்... அன்பானவங்க பண்ற சாதாரண விசயம் கூட நமக்கு அதிகமாப் படுதோன்னு சில சமயம் நினைச்சிக்குவேன். யோசிச்சிப் பார்த்தா அதுவும் உண்மைதான்ல. நீ என்ன நினைக்குற?” என்றார்.

ஈ அவரின் வலது கையின் மேல் வந்து அமர்ந்தது. மெதுவாகக் கையை முகத்திற்கு நேராக உயர்த்திப் பார்த்தார். அதன் இறகுகளில் இலையின் பின்புறத்தில் கோடுகள் தெரித் தோடுவதைப் போல் நரம்புகள் ஓடின. கூலிங்கிளாஸைப் போல் பெரிய கண்களும், தலை முதுகிலெல்லாம் யானையின் தலையில் இருப்பது போல் நட்டுக்கொண்டிருக்கும் முடிகள் என்று அனைத்தையும் ஆராய்ந்தபடியே பேசத் தொடங்கினார்.

“எனக்கு ஒரு பையன். ஒரு பொண்ணு. கல்யாணத்துக்குப் பிறகு பையன் யூஎஸ்லயும், பொண்ணு கனடாவுலயும் செட்டிலாகிட்டாங்க. மாசம் ரெண்டு மூனுத்தடவ ஸ்கைப்ல கூப்பிடுவாங்க. வருசத்துக்கு ஒருதடவ வந்து போவாங்க.

ஆமாம் நீ உன் மனைவி பசங்க எல்லாம் ஒரே இடத்துலதான் இருக்கீங்களா?” என்றார்.

ஈ அங்கிருந்து சுவற்றில் மாட்டி இருந்த புகைப்படத்தின் மேல் உட்கார்ந்தது.

“ஓ அது யாருன்னு கேட்கிறியா. அதுதான் என் மனைவி செண்பகம். என் பையன் எங்களுக்காகத்தான் இந்தப் பிளாட்ட வாங்கினான். நானும் அவளும் மட்டும்தான் இருந்தோம். போன ஜனவரிலதான் அவ இறந்துபோயிட்டா. இன்னையோட ஆறு மாசம் எட்டு நாளாவுது. ராத்திரி பேசிட்டு நல்லாத்தான் படுத்தா. காலைல எழுந்திரிக்கவே இல்ல.

பையனும், பொண்ணும் என் பேரப்புள்ளைங் களை அழைச்சிட்டு வந்து, ஒரு வாரம் தங்கிட்டு, அதுக்கு மேல லீவு கிடைக்கலன்னு சொல்லிப் போயிட்டாங்க. என்னையும் எங்கக்கூட வந்துருங்கப்பான்னு கூப்டாங்க. நமக்கு அங்கயெல்லாம் ஒத்துவராது பாரு. அதனால வரலன்னு சொல்லிட்டேன்.

பையனுக்கு ரெண்டு பொண்ணுங்க.. பெரியவ காலேஜ் போறா. சின்னவ பிளஸ் ஒன் படிக்குறா. பொண்ணுக்கு ஒரு பையன். எட்டாவது படிக்குறான். பேரப்புள்ளைங்களுக்கு என் மேல ரொம்பப் பிரியம். இங்க வந்தாப் போதும்.. எப்பப் பார்த்தாலும் தாத்தா தாத்தான்னு எங்கூடவே தான் இருப்பாங்க” என்று பெருமூச்சு விட்டவரின் கண்கள் லேசாகக் கலங்கி இருந்தன. ஈ ஜன்னல் கம்பிக்குச் சென்றது.


“ஏன் உடனே போகப் பாக்குற. வீட்டுல யாரும் தேடுவாங்களா என்ன? இன்னும் அரை மணி நேரத்துல பி பிளாக்குலேர்ந்து டேவிட்டு, ராஜலெட்சுமியும் ஏ பிளாக்குல இருக்குற பாலமுருகனும் அவங்களோட நாயை அழைச்சி கிட்டுக் கார் பார்க்கிங் பக்கத்துல உள்ள பூங்காவுக்கு வாக்கிங் போவாங்க. நாங்க தினமும் அங்கத்தான் சந்திச்சுப் பேசுவோம். அவங்க வர்ற வரைக்கும் இரு. நாம கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருப்போம். உனக்குத் தெரியுமா.. நானும் அடுத்த மாசம் ஒரு நாய் வாங்கலாம்னு இருக்கேன். நீ தினமும் என்னைப் பார்க்க வர்றேன்னு சொன்னியனா.. நான் வாங்கல. என்ன சொல்ற.. வர்றியா?” என்றார்.

ஈ பறந்து வெளியே சென்ற மறுநிமிசம்.. கந்தசாமி ஓடிச் சென்று ஜன்னலின் அருகில் தனியே நின்றபடி பார்த்தார். ■

• பேராசிரியர் முனைவர்
கு.ஞானசம்பந்தன்

# இருளும் ஒளியும் இரண்டு கண்கள்

பிருந்தா சாரதியின் எழுத்துக்கள் எப்போதும் ஆழமும் உண்மையும் கொண்டவை. அவரது 'ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்' என்ற அற்புதமான ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அலைபேசியில் அடிக்கடி பேசிக்கொள்வோம். அப்போது அவருடைய 'இருளும் ஒளியும்' கவிதைகளை என்னுடன்




பகிர்ந்துகொள்வார். இப்போது அந்தக் கவிதைகளை நூலாகக் கொண்டுவந்திருக்கிறார்.

கவிதைகளைத் தொடங்கும்போதே சுடரைப் போற்றி எழுதுகின்றார்.

'வளைந்து நெளிந்து விதவிதமாக
அபிநயம் காட்டிக்
காற்றின் கொன்னக்கோலுக்கேற்றபடி
நடனமிடும் தீபமே
ஆதி நர்த்தகியே....
உன்னை வணங்குகிறேன்'

அவர் வணங்குகிற அந்த வணக்கம் தமிழ் வணக்கம் போல் நமக்குத் தோன்றுகிறது. அடுத்து,

'காட்டுத் தீயை
வீட்டு விளக்காய்க்
கட்டுப்படுத்திக் கொடுத்தவர் எவரோ
அவரே விஞ்ஞானி...
அவரைப் போற்றுகிறேன்'

என்கிறார். எப்படிச் சிலப்பதிகாரத்தில் ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும் என்று இளங்கோவடிகள் கூறுவாரோ அப்படி ஒளியையும் சுடரையும் இவர் போற்றுகிறார்.

என்னைப் பெரிதும் கவர்ந்த ஒரு கவிதை,

'விளக்கில் வசிக்கும்
தேவதைகள் காத்திருப்பது
விளக்கேற்றும் தேவதையின்
வருகைக்காக.'

அழகான ஒரு அற்புதம் இது. ஏனெனில் விளக்கே ஒரு தேவதை என்று நாம் சொல்வோம்.

அந்த விளக்கே விளக்கேற்ற வரும் தேவதைக்காகக் காத்திருக்கிறதாம்.

மின்னல் கவிதை என்றால் என்ன தெரியுமா?

'பிறப்பா இறப்பா

தீக்குச்சியின் உரசல்.'

எத்தனை அற்புதமான தத்துவம்? அந்த இடத்தில் நிகழ்வது இருளின் இறப்பா? ஒளியின் பிறப்பா? எளிய கேள்வி... ஆனால் ஆழமாகச் சிந்திக்க வைக்கிறார்.

அதே போல அழகான ஓர் ஓவியத்தை ஒரு கவிதையாகத் தீட்டிக் காட்டுகிறார்.

'திரி காம்பு

சுடர் மொட்டு'

அடடே... எத்தனையோ முறை நாம் தீபத்தைப் பார்த்திருக்கிறோம். இப்போதுதான் தெரிகிறது அதிலும் ஒரு தாவரம் இருக்கிறது என்பது. நாமெல்லாம் 'தா... வரம்...' என்றுதான் விளக்கின் முன்பு போய்க் கேட்போம். இவரோ விளக்கிலே தாவரத்தைப் பார்க்கிறார்.

'வெளியே எத்தனை

விளக்குகள் எரிந்தாலும்

உன்னைப் பிரகாசமாக்குவது

உனக்குள் எரியும் சுடர்தான்'

நமக்குள் சுடர் இருக்கிறது என்பதைத் திருமூலர் சொல்வார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'

என்று. அவர் சொல்வதை இவர் அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

'ஊனுடம்பு அகல்

எண்ணெய்க் குருதி

நாடி நரம்பாகும் திரி

மூன்றையும் வசமாக்கி

ஆடிக் களித்து

நின்று ஒளிரும்

அறிவே சுடர்.'

என்று விளக்கை வைத்துச் சொல்கிறார். அதைக்காட்டிலும் ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு வரி மூன்று வரிக் கவிதைகளில் - திருக்குறளில் இரண்டு வரிகளில் உலகத்தை அடக்கி இருப்பதைப் போலக் கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி என்பதைப் போல, அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி என்பதைப் போல உலகத்தையே கொண்டுவந்து அடக்கிக் காட்டியிருக்கும் ஆச்சரியம்.

'நீ விளக்கென்றால்

இன்னொரு விளக்கை

ஏற்றி வை'

ஆகா... என்ன ஒரு ஆக்கப்பூர்வமான சிந்தனை.

'மலர்கள் தாவர விளக்குகள்

விழிகள் மாமிச விளக்குகள்'

என்பது ஒரு புதிய சிந்தனை.

விட்டில் பூச்சியையும் விளக்கையும் இப்படிப் பார்க்க முடியுமா?

'விட்டில் பூச்சி

விரும்பி உண்ணும்

விஷக் கனி

விளக்குச் சுடர்'

சாப்பிட்ட உடனேயே சாகடிக்கும் தீக்கனிதானே சுடர்.

'கனியின் சுவை

சுடரின் ஒளி'

ஒன்று நாவின் சுவை... மற்றொன்று விழியின் சுவை. இரண்டையும் ஒப்பிட்டது மிக அருமை.

அதேபோல உபயதாரர்களின் பெயர் விளக்கின் வெளிச்சத்தை எப்படி மறைக்கிறது என்று ஒரு கவிதை. இன்னொன்று

'தூண்டிவிடும்

தூண்டுகோலைச்

சுடுவதென்ன நியாயம்

சுடரே?'

நம்மை உற்சாகப்படுத்துபவர்களையே சில நேரங்களில் காயப்படுத்திவிடுவோம். அப்படியான ஒரு சூழ்நிலையைச் சொல்கிறார் இதில்.

‘உன் கால்கள் சோரும்போது

கை விளக்கை

அடுத்தவர் கைக்கு மாற்று’

இவற்றில் உள்ள தத்துவங்களை எல்லாம் தனியாகப் பேச வேண்டும்.

அகலும் இல்லை திரியும் இல்லை. ஆனால் பிரமாண்ட சுடராகச் சூரியன் தோன்றுகிறதாம்.

நம்முடைய ஆழ்வார்களின் முதல் மூவரையும் விளக்கேற்றிப் பார்த்தவர்கள் என்பார்கள்.

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக

இன்புருகு சிந்தை

என்று ஒருவரும், கடலை எண்ணெயாகவும், சூரியனை விளக்காகவும் இன்னொருவரும் பாடியிருப்பார்கள். அதேபோலத் திரியும் அகலும் இன்றிச் சூரியன் தோன்றுவதாக இவர் கூறுகிறார். சூரியனைப் பாடாமல் எந்தக் கவிஞன் இருந்திருக்கிறான்?

‘உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு’

என்று கடலில் சூரியன் தோன்றுவது மயில்மேல் முருகன் தோன்றுவது போல் இருக்கிறது என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் பாடுவார்.

‘தீக்குச்சியும் அகலும் இன்றிக்

கிழக்கில் எரியத்தொடங்குகிறது

ஒரு பிரம்மாண்ட சுடர்’

என்று நம் பிருந்தா எழுதுகிறார். தமிழ்க் கவிதை மரபின் நீண்ட தொடர்ச்சியை நன்கு அறிந்தவராகப் பிருந்தா எனக்குத் தெரிகிறார்.

‘தண்ணீர்ப் பாம்பாய்

நெளிகிறது

குளத்தில் குழல்விளக்கு’

என்று ஒரு கவிதை. கிராமத்தில் ‘டியூப் லைட்டை’ வாழைத்தண்டு விளக்கு என்பார்கள். இவருக்கு எப்படித் தோன்றுகிறது பாருங்கள்... தண்ணீரில் குழல்விளக்கு தெரிவது தண்ணீர்ப் பாம்பு போல் தெரிகிறதாம்.

‘விளக்கில் படி

விளக்கையும் படி

விளக்காக வேண்டும் நீ.’

சித்தர்களைப் போல் சிந்திக்கிறார் நம்முடைய பிருந்தா சித்தர். ஏனென்றால் சித்து விளையாட்டாக வார்த்தைகளில் விளக்கேற்றி வைக்கிறார்.

உண்மையாகச் சொல்வது என்றால் அவரே ஒரு கவிதையில் சொல்லியிருப்பது போல அணைந்துபோன விளக்குகளில் பாடல்களால் விளக்கேற்றி வைத்தான் தான்சேன். இவர் தமிழ்ச் சொற்களைக் கொண்டு விளக்கேற்றி வைத்திருக்கிறார்.

ஒளியைப் போற்றுவது போலவே இருளையும் போற்றுகிறார் பிருந்தா சாரதி. இருளைப் பற்றிக் கவலைப்பட்டவர்களில் பாரதியும் ஒருவர். அவருடைய வசன கவிதை ஒன்று

‘சூரியனே

இருளை என்ன செய்துவிட்டாய்

விழுங்கி விட்டாயா?’

என்று கேட்கிறார். அதுபோல இருளைப் பாடுகின்ற அந்தத் தன்மை நம்மை வியக்க வைக்கிறது. பிருந்தா சாரதியுடைய அந்த வரிகளைப் பாருங்கள்.

‘விளக்கேற்றித் திருமணம் செய்யலாம்

விளக்கை அணைத்தல்லவா

தாம்பத்யத்தைத் தொடங்கவேண்டும்?

இருளையும் கொண்டாடுவோம்.’

இருள்தானே ஒன்றைத் தொடங்கி வைக்கிறது?

இப்படித் தொடங்குகின்றன இருள் என்ற தலைப்பிலான கவிதைகள்.

‘இருளில் இருந்து புறப்பட்டவன்

இருளைப் பார்த்துப்

பயப்படுவதுதான் வியப்பு.’

கர்ப்பக் கிரகம் என்றாலே இருட்டுதான். கர்ப்பப்பையிலிருந்து வெளிவந்த நாம் இருட்டைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்?

இன்னொரு கவிதையில்

‘காலத்தின்

இரண்டு கால்கள்

இருளும் ஒளியும்’




என்கிறார். உண்மைதான். இரண்டு கால்களில் பேதம் ஏது? இந்த இரண்டு கால்களால்தானே காலத்தையே மனிதன் அளக்கிறான். அபாரமான பார்வை இது.

அதேபோல நிறவேற்றுமை மேல்நாடுகளில் தலைவிரித்து ஆடியபோது அதை மாற்று வதற்காக வந்த சான்றோர்கள் எல்லாம் மிக அழகாகச் சொன்னார்கள்.

வெள்ளை கருப்பு இதில் என்ன பேதம் இருக்கிறது? பியானோவின் கட்டைகளைப் பாருங்கள் என்று மார்ட்டின் லூதர் கிங் சொன்னதாக நாம் கேட்டிருக்கிறோம். அதே போல இவர் கூறுகிறார்,

'பியானோவின்
கறுப்பு வெள்ளைக் கட்டைகள்
இரவும் பகலும்'

என்று.. அற்புதமான உவமை இது.

இன்னும் பகலைப் போற்றுகிறவர்கள் ஏன் இருளைப் பழிக்கிறார்கள் என்றால், பொறாமைதானாம். எவ்வாறு? நட்சத்திரப் பந்தலுக்குக் கீழே நிலவின் குளுமையைப் பொறுக்க முடியாமல்தான்...

'இருட்டில் பேய்கள் உலவுவதாகக்
கதை கட்டிவிட்டது பகல்
பேரழகான நட்சத்திரப் பந்தலோடும்
நிகரில்லாத
நிலவின் குளுமையோடும்
இரவு பெருவாழ்வு வாழ்வதைப்
பொறுத்துக்கொள்ள முடியாமல்'

நட்சத்திரப் பந்தல் என்ற வார்த்தையைச் சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியின் திருமணக் காட்சியிலே காட்டுகிறார் இளங்கோவடிகள். அங்கே அமைத்திருந்த பந்தல் எப்படி இருந்ததாம்? நீல விதானத்து நித்திலப் பந்தற் கீழ்...

என்று ஆகாயத்தில் நட்சத்திரங்களை வைத்துப் பந்தல் போட்டது போல் இருக்கிறது என்று அழகாக அந்த உவமையைச் சொல்லுவார்.

கிருஷ்ணன் தூது சருக்கத்தில் மகாபாரதத்தில் கிருஷ்ணன் புறப்பட்டு வரும்போது வில்லிபுத்தூர் ஆழ்வார் ஆகாயத்தைப் பார்க்கின்றார். நட்சத்திரங்கள் இருக்கின்றன. அந்த நட்சத்திரங்கள் எப்படி இருக்கின்றதாம்? கானகத்தில் பூத்த முல்லை மலர்கள் எல்லாம் வானத்தில் சென்று ஒட்டிக்கொண்டதோ! என்று தோன்றுவது போல இருக்கின்றதாம்.

அதாவது நட்சத்திரங்களின் மின்னும் தன்மையை முல்லைப் பூக்களோடு ஒப்பிட்டுச் சொல்வது அவருடைய அழகான வார்த்தைகள்.

கானெலாம் மலர்ந்த முல்லை

ககனமீது எழுந்ததென்ன

அந்த நட்சத்திர உவமையை இங்கு அழகாகச் சொல்லி இருக்கிறார் பிருந்தா.

அதேபோல, பகல் நேரத்தில் வேஷம் போடலாம். ஆனால் இருட்டில் வேஷத்தைக் கலைப்பதைத்தவிர வேறு வழி இல்லை என்கிறார் வேறொரு இடத்தில். ஒரு வேண்டுதலும் வைக்கிறார்.

விலங்கின் கண்கள் வேண்டும்

இருளை அறிய.

உண்மைதான். இருள் வரவரப் பார்வை கூர்மை ஆகிறது அல்லவா?

நம்முடைய விரல்களுக்கு முன்னே நகம் இருக்கக்கூடிய அந்த இடத்திற்கு நகக்கண் என்று பெயர் உண்டு. ஏன் தெரியுமா? நாம் இருள் வந்ததும் கைகளால் துழாவுகிறோம். அது கதவா? ஜன்னலா? எதிரே நிற்பது மனைவியா? என்று விரல்களால் தொட்டு உணர்வதால் அதற்கு நகக்கண் என்று பெயர். அதைத்தான் இவர் சொல்கிறார்.

‘விரலும் குரலும்

விழிகளாகின்றன

பார்வை தொலைந்த

இருட்டில்’

என. இன்னொரு கவிதையில் ஒரு சிறுகதையையே சொல்லியிருக்கிறார்.

‘இருள் அப்பிக் கிடக்கும்

இந்தப் பனி படர்ந்த பின்னிரவில்

ஆறு வயது மகனைத்

துணைக்கழைத்துக்கொண்டு

குடித்துவிட்டு

எங்கோ சாலையில் விழுந்து கிடக்கும்

தன் கணவனைத் தேடி

அவள் செல்வது

காதலால் அல்ல...

வீதியில் விழுந்து கிடக்கும்

தன் வீட்டு மானத்தை

விடிவதற்குள்

வீட்டுக்கு எடுத்து வருவதற்கு.’

இருளை இது போல் பல்வேறு கோணங்களில் பார்த்திருக்கிறார்.

‘இரவை அறிந்தவன்

மௌன மொழி பேசுகிறான்.’

இவரது மொழி மௌன மொழி மட்டுமல்ல. இந்த மொழியிலே ஒலி இருக்கிறது என்றால் அது வெளிச்சத்தைக் குறிக்கும். இந்த மொழியிலே மௌனம் இருக்கிறது என்றால் அது இருளைக் குறிக்கும். சொல்லாத சொல்லுக்கு விலை ஏதும் இல்லை என்பதுபோல இந்த மௌனத்தின் மொழியை இப்படி அற்புதமாக எழுதியிருக்கிறார் பிருந்தா. இருளையும் ஒளியையும் இரு கண்களாகப் பாவித்த அவரைப் பாராட்டுவோம் போற்றுவோம்.

இந்த ‘இருளும் ஒளியும்’ சாதாரண ஒரு நூலாக எனக்குத் தோன்றவில்லை. இது ஒரு தத்துவப் பிரகாச நூல். இங்கே நான் பகவத்கீதை தந்த சாரதியை நினைத்துக்கொள்கிறேன். கண்ணபெருமான் பதினெட்டு நாள் பாரத யுத்தத்திற்கு லட்சம் சுலோகங்களைத் தேர்த்தட்டில் இருந்து சொல்லியிருப்பாரா? நமக்குத் தெரியாது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பார்.

இப்போது நம் சாரதியின் சுருங்கச் சொல்லும் கீதங்களாக ‘இருளும் ஒளியும்’.


தொடரட்டும் இவரது எழுத்துலகப்பணி. ■

• தேவரசிகன்

# கொஞ்சம் சுஜாதாவைப் பற்றி

என் பழைய கோப்புகளை ஒருசமயம் நேரம் போகாமல் புரட்டிக்கொண்டிருந்தபோது அகஸ்மாத்தாய்த் தென்பட்டது கணையாழி மார்ச் 1983இல் இடம்பெற்ற எனது கடிதம் ஒன்று.

“சுஜாதாவின் எழுத்தை லைட் ரீடிங்கென ஒதுக்கும் அந்த அம்மாவை முன்னிலைப்படுத்திச் சில கேள்விகள். லைட் ரீடிங்கிற்கும் சீரியஸ் ரீடிங்கிற்கும் இடையே உள்ள Distinction உண்மையில் தெரிகிறதா? கவசம் அணிந்து கொண்டு, கத்தி, கப்படா வகையறாக்களுடன் ஆக்ரோஷமாய்ப் பாய்வதைத்தான் நீங்கள் உண்மை வீரமென ஏற்றுக்கொள்வீர்களா? விஷமத்துடன் புன்னகைத்து நாம் நிதானித்து முடிப்பதற்குள் அருகில் மென்மையாய் நெருங்கிக் கழுத்திற்குள் நாசுக்காய் விஷ ஊசியைச் செருகும்



“Eye Witness” பட வில்லனை நீங்கள் “லைட்” டாகவா எடுத்துக்கொள்வீர்கள்? எழுத்தில் லைட் என்பதும் சீரியஸ் என்பதும் எழுதும் முறையிலல்ல. எழுத்தின் பின்விளைவுகளும், அவற்றின் ஊற்றாகிப்போன மனோ நிதர்சனமும், வீரியமும்தான் லைட் அல்லது சீரியஸ் என்ற பதங்களை அர்த்தப்படுத்த முடியும். கல்லூரி நாட்களில், என்றோ படித்த பாக்கியம் ராமஸ்வாமியின் “அப்புசாமியும், சீதாப்பாட்டியும்” நினைவிற்கு வந்து, சூழ்நிலை மறந்து சிரித்தமைக்காக, கெமிஸ்ட்ரி லாபரட்டரியில் ஒரு கண்ணியமான புரஃபஸரிடமிருந்து அவமானப்பட்டிருக்கிறேன். உங்கள் கணக்குப்படியேயான “சாட்சாத்” ஒரு லைட் ரீடிங்கின் “சீரியஸ்” விளைவு எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? சுஜாதாவின் “வீடு'' என்ற சிறுகதையையும் நைலான்கயிறு நாவலில் வருகிற சுநந்தாவின் டைரியையும் படித்துவிட்டு நினைவுவரும்போதெல்லாம் Restless ஆக உணர்ந்திருக்கிறேன். சுஜாதாவின் Non-fiction எல்லாம் படித்துவிட்டுத்தான் அந்த முடிவிற்கு வந்தீர்களா? சுஜாதாவின் எழுத்து ஒரு லைட் ரீடிங் அல்ல”.

கணையாழியில் 1983இல் ஒரு தடவை சுஜாதாவின் எழுத்து லைட் ரீடிங்கா சீரியஸ் ரீடிங்கா என விவாதம் எழுந்தபோது சீரியஸ் ரீடிங் என்ற அணிக்காக மேற்கண்ட எனது கடிதம் பிரசுரிக்கப்பட்டது.

இந்தக் காலக்கட்டம் என்றால் சுஜாதாவின் “நகரம்” சிறுகதையையும் அவருக்கு வக்காலத்து வாங்க நான் முன்வைத்திருப்பேன்.

சுபமங்களா, அக்டோபர் 1994 இதழில் வெளியான எனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது

போல ஜெயமோகனுக்குப் பிடித்த சுஜாதாவின் "குதிரை''க் கதையையும் நான் சிபாரிசு செய்திருக்கலாம்.

எனக்குத் தெரிந்த சாகித்ய அகாதமியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதைப் போல் "சுஜாதா"வின் எழுத்துவகை பொழுது போக்கு இலக்கியம் எனும் பிரிவில் வகைப் படுத்தப்படுவதால், அவருக்குச் சாகித்ய அகாதமி விருது கிடைக்காமல் கூட போயிருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும், சுஜாதாவின் எழுத்தைப் படிக்க நுழையும் ஒவ்வொரு கணமும், துள்ளி ஓடித்திரியும் அழகிய கன்றுக்குட்டி ஒன்றைத் துரத்திப்பிடித்து, நிறுத்திவைத்து, அதன் கழுத்துப் பகுதியைத் தடவிப் பார்க்கும் உணர்வுதான் ஏற்படுகிறது.

சாகித்ய அகாதமிக்காரர்கள் போனால் போகட்டும். அவர்களும் எத்தனைப் பேருக்குத் தான் விருது கொடுப்பார்கள். வடிகட்டும் பொறுப்புக்கென்று அவர்களுக்கென ஒரு Strategy வேண்டாமா.

இன்றும் மனதில் சுஜாதாவின் கட்டுரை ஒன்று ரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கிறது. அது தொலைக்காட்சி வசதி டில்லி, மும்பாய் நகரங்களுக்கு மட்டும் வந்து, சென்னைக்கும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கும் வராத ஒரு நேரம். அந்தக் கட்டுரையில் பின்வருமாறு அவர் குறிப்பிடுவார்.

"சிவாஜி சாட்டையைச் சொடுக்க, காஞ்சனா டான்ஸ் ஆட, எல்.ஆர்.ஈஸ்வரி "பட்டத்து ராணி பார்க்கும் பார்வை" என வரும் "சிவந்த மண்" படப்பாடலை நாம் தொலைக்காட்சியில் கண்டு களிக்கப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை".

எனது சென்னை வாசத்தின்போது சுஜாதாவின் "டாக்டர் நரேந்திரனின் விநோத கொலை வழக்கு" எனும் நாடகத்தைப் பூரணம் விஸ்வநாதனின் நடிப்பில் கண்டுகளித்த அனுபவம் உண்டு. Mercy Killing-ஐப் பின்புலமாக வைத்து எழுதப்பட்ட அந்நாடகத்தில் சுஜாதா நம்மைக் கண்கலங்க வைத்துவிடுவார்.

சுஜாதாவின் திரைப்பட வசனங்களில் எனக்கு அதிக ஈர்ப்பு இல்லை. என்றாலும், ஒரே



விதிவிலக்கு "விக்ரம்" படத்தில் மந்திரி வேடத்தில் இருக்கும் வி.கே.ராமசாமியின் வசனம். ("எந்த விலைமகள் மகன்யா அந்த ராக்கெட்டைக் கடத்ினது?")

அவர் எழுத்துக்கு என்னிடமிருந்து கண்டனம் கூட உண்டு.

அவரது சிறுகதை ஒன்றில் அவரது ஒரு ஆண் கதாபாத்திரம், தன்னை ஒரு பெண் கதாபாத்திரம் "அத்தான்" என்று விளிக்கும்போது "என்னை அத்தான் என்று அழைக்காதே! அப்படி அழைக்கும்போது எனக்கு சினிமா எஸ்ட்ராக் களை நினைவுபடுத்துகிறாய்" என அந்த ஆண் கதாபாத்திரம் எச்சரிக்கும்.

பொதுவாக, பிராமணரல்லாத மற்ற சமூகத்தினரிடையே இந்த அத்தான் என்ற உறவுமுறைச் சொல், ஒரு பெண் தனது கணவனையோ, திருமணமான தனது கணவரின் சகோதரர்களையோ, மாமன் மகனையோ, அத்தை மகனையோ குறிக்கப் பயன்படுத்தப்படுவது ஒரு மரபு.

இந்த விஷயம் எழுபதுகளில் ஒரு கண்டனத்திற்குள்ளாகாமல் தப்பித்தது ஒரு ஆச்சர்யம்தான். இருந்தாலும் பிறிதொரு சமயம் "ரத்தம் ஒரே நிறம்" என்ற தொடர் குமுதத்தில் அவரால் எழுதப்பட்டபோது, குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரால் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுந்ததும், சுஜாதா கொலைமிரட்டல்களுக்கு ஆளான செய்தியும் யாவரும் அறிந்ததே.

எது எப்படியிருந்தாலும், விருதுகளைத் தாண்டி, கண்டனங்களைத் தாண்டி, விமர்சனங்களைத் தாண்டி, சுஜாதா எப்போதும் ரசிக்கப்பட்டுக்கொண்டுதான் இருப்பார். ■

கஸல் தொடர்

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : கொ.வடிவேல்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 5



**கா**தலென்பது
உனது நம்பிக்கையும்
எனது முட்டாள்தனமும்..

•

நிபந்தனையின்றி நீ தரும் அன்பு
என்னிடம் வரும்போது
நிர்பந்தமாகிவிடுகிறது
காதலைப் போல..

•

என் நம்பிக்கையற்ற பொழுதுகளில்
நீ
நம்பிக்கையுடன் உள்நுழைகிறாய்
எனக்குள்

•

நெடுஞ்சாலைக்கும் நிற்கும் மரத்துக்கும்
எந்தச் சம்பந்தமும் இல்லை
இருப்பினும்
விரிவுபடுத்த வெட்டித்தானே ஆகவேண்டும்

•

உன் கால்தடம் ஒவ்வொன்றும்
ஒட்டகமாக ஒட்டிக்கொள்கிறது
பாலைவனமாக இருக்கும் எனக்குள்

•

உன்னால் நிராகரிக்கப்பட்ட சொற்களால்
என்னைப் பேசவைப்பது
தண்டனையின் உச்சம்

•

கண்களில் தோல்வியைச்
சுமக்கவைத்துவிட்டுக்
கண்ணீருக்கு வெற்றியைத் தருகிறாய்

•

நீ புரட்டிப் பார்க்காத
பக்கங்களில் மட்டுமே
நான் புன்னகைக்கிறேன். ■

நான் வாசித்தேன்

மாணவர் பக்கம்

• செ. ஓவியம்
முனைவர் பட்டஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி, திருச்சி.




# இலக்குமிகுமாரன் ஞானதிரவியத்தின் அகஒட்டு

அகம் - உள்ளம். ஒட்டுதல் - பொருந்துதல். இந்நாவலானது மனிதர்களின் மனமானது பொருந்துதல் அல்லது ஒட்டுதல் என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. மனித, சமூக உறவினால் குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படும் மாற்றங்கள் குறித்து நுட்பமாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

1990க்குப் பிறகு விவசாயமானது மழை வளம் குன்றி ஆறு வற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவந்துகொண்டிருந்தது. கிராமங்கள் நகர்மயமாயின. மக்கள் விவசாய வேலைகளை விட்டுக் கூலி வேலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் மக்களில் பெரும்பான்மையோர் வெளிநாடுகளுக்குச் செல்லும் சூழல் உருவானது. அவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலையில் ஆண்களின் செயல்பாடுகளையும், மிகவும் குறிப்பாக, கிராமங்களில் குடும்பத்தில் இருக்கும் பெண்களின் துன்ப துயரங்களையும் இந்நாவலில் காணமுடிகிறது. குழந்தை வளர்ப்பில் எல்லாக் குழந்தைகளையும் சமமாகப் பார்க்கவேண்டும். ஆனால் குடும்பத்திலும் சமூகத்திலும் ஆண்கள்தான் உயர்வான இடத்தில் உள்ளனர்.

இந்நாவலிலும் சின்னமணியும் சின்னசாமியும் தம் பிள்ளை முரளியை ஒரு மருத்துவராகப் படிக்கவைக்க வேண்டும் என நினைத்துப் பல துன்பங்களைப் பொறுத்துக்கொள்கின்றனர். ஆனால் தனது பெண் குழந்தைகள் வேலை செய்யும்போது எவ்வித அக்கறையும் காட்டுவதாக இல்லை. முரளி தானே செய்துகொள்ளக்கூடிய வேலைகளைக்கூட செய்ய விடுவதில்லை. ஆனால் முரளி இந்தப் பக்கம் இருக்கும் பொருளை அந்தப் பக்கம் எடுத்துப் போட்டுவிட்டாலே "நீ டாக்டராகப் பொறந்தவன். நீ எதுக்கு இந்த வேலையெல்லாம் பாக்கணும்" என்றும் "உலகில் மிக உயர்ந்த டாக்டராகப் போகும் பிள்ளை நீராகாரம் குடிப்பதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை'' என்றும் காணப்படும் வார்த்தைகளில் பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் ஆண் பெண் பாகுபாடு காட்டி வளர்ப்பதைச் சுட்டியுள்ளார். கண்டித்து வளர்க்காத குழந்தையால் தான் துன்பப்படுவது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் துன்பத்திற்கு உள்ளாக்கும் பெற்றோர் குறித்து ஆசிரியர் கூறியுள்ளார்.

பொருள் ஈட்டுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் ஆண்கள் பற்றி யாருக்கும் கவலை இல்லை. அவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் கணவனை வெளி நாட்டிற்கு அனுப்பிவிட்டுக் குடும்பங்களில் இருக்கும் பெண்களின் நிலை மிகவும் துன்பத்திற்கு உள்ளானதாக உள்ளது. 'பொட்டு வைக்கப்பிடாது பூ முடிக்கப்பிடாது ஒரு நல்லநாள் பெரியநாளுக்கு நல்ல சேல கட்டிக்கப்பிடாது வெளியூருக்குப் போப்பிடாது எங்கேயும் ராத்தங்கப்பிடாது எரஞ்சு பேசப்பிடாது ஒரு நல்லது கெட்டதுக்குச் சபையில முன்னாடி நிக்கப்பிடாது' என்று பெண்களுக்கு எழுதப்படாச் சட்டங்கள் ஏராளம் இருந்தன. ஆனால் வெளிநாடு சென்ற கருப்பு சிலோன்காரப் பெண்ணுடன் வாழ்க்கை நடத்திக் கண்மணி

என்ற பெண்குழந்தையையும் தன்னுடன் கூட்டி வந்ததும் பொன்னம்மாவின் கணவன் சீன பெண்ணோடு தொடர்பாக இருந்ததும் ஆண்களுக்கான சுதந்திரமாகச் சமூகம் ஏற்றுக்கொண்டது. ஆண்கள் தவறு செய்யும்போது கண்டுகொள்ளாத உலகம் பெண்கள் சிறு தவறு செய்தாலும் பெரிதாக நினைத்துச் சமூகக் குற்றவாளியாகப் பார்க்கும் நிலையைக் காணமுடிகிறது.

சின்னமணி தன் அண்ணன் கருப்பு வெளிநாடு சென்றபிறகு அண்ணி இராமாமிருதத்தையும், அண்ணன் குழந்தைகளையும் அக்கறையோடு பார்க்கும் நிலையானது குடும்ப உறவு நிலையை விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றும் பொறுப்புணர்ச்சியையும் கிராமச் சூழலில் உறவின் உன்னதத்தையும் விளக்குகிறது.. "தன் பிள்ளைகளுக்கு இருக்கிறதோ இல்லையோ கருப்பின் பிள்ளைகளுக்குக் கொடுத்தனுப் பியவண்ணமிருந்தாள்".. ராமாமிர்தம் மூன்று பிள்ளைகளை வளர்க்கப் பட்டபாடுகளில் முடிந்தவரை 'அதிகாரப்பூர்வமற்ற'வகையில் சின்னமணியும் சின்னசாமியும் பங்கு கொண்டனர் என்பதிலிருந்து உறவு நிலைகளில் புரிதலும், விட்டுக்கொடுக்கும் தன்மையும் இருப்பதைக் காணமுடிகிறது. அதேசமயத்தில் பெற்றோர்கள் இல்லாத நிலையில் அண்ணன்கள் இருந்தும் கைவிடப்பட்ட நிலையைச் செல்வத்தின் பாத்திரப்படைப்பு விளக்குகிறது.

வெளிநாட்டில் கருப்பிற்கும் சிலோன் பெண்ணுக்கும் பிறந்த கண்மணி தந்தையான கருப்பு வீட்டில் வளர்ந்தாலும் சொந்தப் பிள்ளையாக அவள் வளர்க்கப்படவில்லை. கருப்புவின் இரு பெண் குழந்தைகள் பள்ளி சென்ற நிலையில், கருப்புவின் மனைவி இராமாமிருதத்திற்கு வீட்டில் ஒத்தாசையாக வேலை செய்வதற்காகக் கண்மணியின் படிப்பு பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இச்செயலானது தந்தையின் துணையில் ஒரு குழந்தை வளர்ந்தும் அவரின் பொறுப்பற்ற நிலையால் ஒரு குழந்தையின் எதிர்காலமே பாதிக்கப்படுவதைக் காட்டுகிறது.


விவசாயம் முழுதும் பொய்த்த நிலையில் பிழைப்பை ஓட்ட எல்லோரும் வெளிநாடு செல்கின்றனர். ஆனால் செல்வம் மட்டும் செல்லவில்லை. சிறுவயதிலிருந்து வெளிநாடு செல்வதையே விரும்பாதவன். சொந்த மண்ணில் இருந்து செய்யாத வேலையை வெளிநாடு சென்றுதான் செய்யமுடியும் என்ற நிலையை முற்றும் வெறுத்தவன். தன் படிப்பாலும் திறமையாலும் துன்பமான சூழல்களிலெல்லாம் சமாளித்தவன். உறவுகள் கைவிட்ட நிலையிலும், தன்னைத் தேடி வந்த உறவான மனைவியின் மீது அக்கறையும் அன்பும் செலுத்தியவன். சொந்தங்கள் எல்லாம் சேர்ந்து வெளிநாடு அனுப்பும் இக்கட்டான நிலையிலும் அதனைச் சமாளித்துச் சொந்த மண்ணிலே கடைசி வாழ்க்கையை வாழ்ந்து வெற்றி கண்டவன். வறுமையின் காரணமாக நகர வாழ்க்கைக்குச் செல்லும்பொழுது தன் சொந்தக் கிராமத்தையும், தன் அப்பா, அம்மா வாழ்ந்த வீட்டின் நினைவுகளையும் சுமந்தவனாக, அவற்றை விட்டு நீங்க முடியாதவனாகச் செல்வது மண்ணின் பிடிப்பையும், பெற்றோரின் பாசத்தையும் வெளிக்காட்டுகின்றன.

ஒரு குழந்தை தவறு செய்யும்பொழுது அதைச் சுட்டிக்காட்டும் பொறுப்பு பெற்றோருக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் உண்டு. ஆனால் இந்நாவலில் முரளி தவறு செய்யும்பொழு தெல்லாம் அதைப் பெற்றோர்கள் திருத்தவில்லை. செல்வம் பலமுறை தன் மனைவி கமலத்திடம் கூறியும் அவரும் தன் பெற்றோர், தம்பி முரளிக்காகப் பயந்து திருத்தவும் இல்லை. இதன் விளைவு சரியான நேரத்தில் திருத்தப் படாதவற்றால் இரு பெண்களைத் திருமணம் செய்கிறான். அதில் கண்மணியின் எதிர்காலமே துன்பமாக மாறும் சூழலை இந்நாவல் கூறுகிறது. நிறைவாக, இந்நாவலானது ஒரு மனிதன் தன் பொறுப்பில் இருந்து மாறும்போது ஏற்படும் பாதிப்புகளைச் சுட்டுகிறது. குழந்தைகள் வளர்ப்பு, தாய்மண்ணை நேசித்தல், உறவுகளின் பிணைப்பு, உறவுகளில் சிக்கல்கள் போன்ற பன்முகத்தன்மை கொண்டதாக உள்ளது. உறவானது மனிதர்கள் புரிந்துகொள்ளும்போது உன்னத நிலையையும், புரிந்துகொள்ளாத நிலையில் மகிழ்வற்ற எதிர்காலத்தையும் தரும் என்பதை இந்நாவல் நுட்பமாகப் புலப்படுத்துகிறது. ■

சிறுகதை

காலம் கடந்த காவியம்

• லா.ச. ராமாமிர்தம்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



# பாற்கடல்

நமஸ்காரம், ஷேமம், ஷேமத்திற்கு எழுத வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நீங்களோ எனக்குக் கடிதம் எழுதப்போவதில்லை. உங்களுக்கே அந்த எண்ணமே இருக்கிறதோ இல்லையோ? இங்கே இருக்கும்போதே, வாய் கொப்புளிக்க, செம்பில் ஜலத்தை என் கையிலிருந்து வாங்க.. சுற்றும்முற்றும் திருட்டுப் பார்வை, ஆயிரம் நாணல் கோணல். நீங்களா கட்டின மனைவிக்குக் கடிதம் எழுதப்போகிறீர்கள்? அதனால் நானே முந்திக்கொண்டதாகவே இருக்கட்டும். அகமுடையான் உங்கள் மாதிரியிருந்தால்தானே, என் மாதிரி பெண்டாட்டிக்குப் புக்ககத்தில் கெட்ட பேரை நீங்களே வாங்கி வைக்க முடியும்? “அவள் என்ன படிச்ச பெண், படிச்ச படிப்பு எல்லாம் வீணாய்ப் போகலாமா? ஆம்படையானுக்குக் கடிதம் எழுதிக்கிறாள்!” என்று வீட்டுப் பழைய பெரியவாள், புதுப் பெரியவாள் எல்லாம் என் கன்னத்திலடிக்காமல், தன் கன்னத்திலேயே இடித்துக்கொண்டு, ஏளனம் பண்ணலாம்! பண்ணினால் பண்ணட்டும், பண்ணட்டும்; நான் எழுதியாச்சு. எழுதினது எழுதினதுதான். எழுதினதை நீங்கள், தலைதீபாவளியதுவுமாய், அவ்வளவு தூரத்திலிருக்கிறவர், படித்தது படித்ததுதான். எழுதினதைப் படித்தபின், எழுதினவாளும், படித்தவாளும் குற்றத்தில் ஒன்னுதானே? வேறு எதிலும் ஒற்றுமையிருக்கிறதோ இல்லையோ?



இதென்ன முதல் கடிதமே முகத்தில் அறையற மாதிரி ஆரம்பிக்கிறது என்று தோன்றுகிறதோன்னோ? சரி, நான் அசடு, போங்கோளேன்; திருப்தி தானே? நான் வெகுளி, எனக்கு மனசில் ஒன்னும் வைத்துக் கொள்ளத் தெரியாது. அப்பாகூட அடிச்சுப்பார்; “ஜகதாகிட்டே யாரும் அசதி மறதியாய்க்கூட ஒரு ரகஸ்யத்தைச் சொல்லிடாதேயுங்கள். ஒருத்தர்கிட்டேயும் சொல்லக்கூடாது என்றால் ஒரு கடிதாசுத் துண்டிலாவது அதை எழுதி எறிந்துவிடுவாள். இல்லாவிடில் அவளுக்கு மண்டை வெடித்துவிடும். ஜகதா அவ்வளவு ஆபத்தான மனுஷி.'' ஆமாம். அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள். நான் பின் யாரிடத்தில் சொல்லிக்கொள்வது, தலைதீபாவளிக்கு என் கணவர்

என்னுடன் இல்லாத கஷ்டத்தை? என் அப்பா அம்மாவுக்கு எழுதலாமா? எழுதினால், புக்காத்து விஷயங்களைப் பிறந்த வீட்டுக்கு விட்டுக் கொடுத்தேன் என்கிற பொல்லாப்பைக் கட்டிக்கவா? நான் அசடாயிருக்கலாம்; ஆனால் அவ்வளவு அசடு இல்லை. அப்புறம் எனக்கு யாரிருக்கா; நீங்களே சொல்லுங்களேன்!

தீபாவளிக்கு இரண்டு நாளைக்கு முன்னால் அம்மா வந்திருந்தாள், ஆசையாப் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தலைதீபாவளிக்கு அழைத்துப் போகணும் என்று. நீங்கள் ஊரில் இல்லை. இருக்கவும் மாட்டேள் என்று தெரிந்ததும் அவள் முகம் விழுந்ததைப் பார்க்கணுமே, எடுத்து மறுபடியும் சேர்த்து ஒட்டவைக்கிற தினுசாய்த்தானிருந்தது.

“சரி, மாப்பிள்ளைதான் இல்லை, ஜகதாவைக் கூட்டிக்கொண்டு போகிறேனே! நாங்களும் பிரிஞ்சுக் கொஞ்ச நாளாச்சு. உங்களிஷ்டப்படியே கல்யாணமாகி நாலாம் நாளாக் கிருஹப்பிர வேசத்துக்கு விட்டதுதானே!” என்று சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் அம்மா (உங்கள் அம்மா - இப்போ எனக்கு இரண்டு அம்மான்னா ஆயிட்டா!) ஓரக்கண்ணால் என்னைப் பார்த்துக்கொண்டே, “என் பிள்ளை எப்போ அங்கே வர முடியல்லியோ உங்கள் பெண் இங்கேயே நாலு பேரோடு ஸல்லோபுல்லோன்னு இருந்துட்டுப் போறாள்! இனிமேல் எங்கள் பெண்ணும்தானே! அப்புறம் உங்களிஷ்டம். அவளிஷ்டம். இங்கே ஒருத்தரும் கையைப் பிடிக்கிறதாயில்லே!” என்றார்.

இதென்ன கன்றுக்குட்டிக்கு வாய்ப்பூட்டைப் போட்டுப் பாலூட்டற சமாச்சாரமா? என்னை அம்மா ஆழம் பார்க்கிறது தெரியாதா, என்ன? நான் ஒன்னும் அவ்வளவு அசடு இல்லை. இந்த வீட்டிலேயே யாரு ளிச்சுனு பேசறா? இங்கேதான் பேசினதுக்குப் பேசின அர்த்தம் கிடையாதே! எனக்குத் திடீர்னு சபலம் அடிச்சுண்டது. என் கையொட்டின தம்பி சீனுவைப் பார்க்கணும்னு. ஒரு நிமிஷம் என்னைப் பிரிஞ்சு இருந்ததில்லை. காலையில் கையலம்பி நனைஞ்ச சட்டையை மாத்தறதிலிருந்து, ராத்திரி தொட்டிலில் அவன் படுக்கையை விரிக்கிற வரைக்கும் அக்காதான் எல்லாம் பண்ணி யாகணும். இப்போ குழந்தை என்ன பண்றானோ? ஆனால் நான் இங்கேயே இருக்கேன்னு சொல்லிவிட்டேன். அம்மா கண் தளும்பிற்று. அம்மா பேசாமே போயிட்டாள். நான் கொஞ்ச நாழி திக்பிரமை பிடிச்சு நின்றேன். அம்மா குறுஞ்சிரிப்புடன் என்னை ஒரு நிமிஷம் ஆழ்ந்து நோக்கிவிட்டுக் காரியத்தைப் பார்க்கப் போயிட்டார். அவருக்கு உள்ளூற சந்தோஷம். எனக்குத் தெரியும், நான் பரீக்ஷையில் ஜெயித்துவிட்டேன் என்று. என்ன பரீக்ஷை? பெண்ணாய்ப் பிறந்தபின் ஸ்வதந்திரம் ஏது என்கிறதுதான்.

“ஆமாம்; நான் கேட்கிறேன் - இதென்ன உத்தியோகம், ஒரு நாள் கிழமைக்குக்கூட பெற்றவர் உற்றவர் கூட இல்லாமல்படிக்கு? என்னதான் ‘காம்’பில் கிளம்பிப் போனாலும் சமயத்துக்கு லீவு வாங்கிக்கொண்டு திரும்பி வரமுடியாதா?

ஆனால் எனக்கே தெரிகிறது; பெண்கள் என்ன, புருஷர்களுக்குத்தான், என்ன சுதந்திரம் இருக்கிறது? எங்களுக்கு வீடு என்றால் உங்களுக்கு உத்தியோகம். பார்க்கப்போனால் யார்தான் விடுதலையாயிருக்கிறார்கள்? எல்லோரும் சேர்ந்து ஒரு பெரும்சிறையிலிருக்கிறோமே, இந்த உலகத்தில்! பணக்காரன் தங்கக் கூண்டில். இந்த இரண்டு ஸ்திதியிலுமில்லாமல் நம்மைப் போல் இருக்கிறவர்கள் இதிலுமில்லை; அதிலுமில்லை; காலை ஊன்றக்கூட ஆதாரமில்லாமல், அந்தரத்தில் தவித்துக்கொண்டிருக்கிறோம். இல்லாவிடில் இந்தச் சமயத்தில் நாம் பிரிந்து நீங்கள் எங்கேயோ இருப்பானேன்? நான் ஏங்கி உருகித் தவித்துக்கொண்டு? உத்தியோகத்தை உதறிவிட்டு ஓடிவந்துவிட முடிகிறதா? நான் ஒன்னும் அவ்வளவு அசடு இல்லை. மனஸு வெச்சேன்னா எல்லாம் எனக்குத் தெரியும். இப்போ மனஸு வெச்சிருக்கேன்!

ஆனால் அதற்காக என்னோடு பேசக்கூடாது என்று இருந்ததா? போகிற சமயத்தில் என்னிடம் வந்து, “ஜகதா, நான் போயிட்டு வரட்டுமா?” என்று ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு போனால், தலையைச் சீவிவிடுவார்களா? அதையும்தான் பார்த்துவிடுகிறது; என்ன ஆகிவிடும்? சாந்தியைத் தைக்குத் தள்ளிப்போட்டு விட்டாலும் வாய்வார்த்தை கூட பேசிக்கக்கூடாது என்றால் பிள்ளைகள் கலியாணம் பண்ணிக் கொள்வானேன்? இந்த வீடே வேடிக்கையாய்த் தானிருக்கிறது. நீங்கள் எல்லாம் இப்படியிருக்கிற

தால்தானே நாங்கள் எல்லாம் வெட்கம் கெட்டவர்களாகி விடுகிறோம்?

ஆனால் அம்மாவே சொல்லியிருக்கிறாள். கூட்டுக் குடித்தனம் என்றால் அப்படித் தானிருக்கும் என்று. அவளும் சம்சாரி வீட்டில்தான் வாழ்க்கைப்பட்டாளாம். இடம் போகாத வீட்டில் நாலு ஜோடிகள் வாசம் பண்ணுமானால் என்ன பண்றது? வீட்டுக்கு விருந்தாளி வந்துட்டால் கேட்கவே வேண்டாம். திடீர்னு ஒரு ஜோடியின் ஒரு படுக்கை தானாகவே திண்ணையில் வந்து விழுந்து விடுமாம். சீட்டைப் போட்டுக் குலுக்கினாற் போல் யார் படுக்கை என்று போட்ட பிறகுதான் தெரியுமாம். சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது; திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி வாயை மூடிண்டிருக்க வேண்டியதுதான். அம்மா சொல்றப்போ எனக்குச் சிரிப்பாய் வரும், இந்தச் சம்பந்தம் பண்ணுவதற்கு முன்னால் அப்பா கூடச் சொன்னார்: "இதென்னடி, இது அவ்வளவு உசிதமோ? ஒரே சம்சார வீடாயிருக்கிறது. பையன் நாலு பேருக்கு நடுவே நாலாமவனாயிருக்கிறான். இன்னும் கலியாணத்துக்கு ஒன்று இரண்டு பெண்கள் காத்திருக்கிறாப் போலிருக்கிறது..."

"இருக்கட்டும், இருக்கட்டும், நிறையக் குடித்தனமாயிருந்து நிறையப் பெருகட்டும். நாளாவட்டத்தில் இதுதான் நம் பெண்ணுக்கு நல்லதா விளையும், பாருங்கோ. இப்போ நமக்கு என்ன குறைஞ்சுப் போச்சு? எடுத்தவுடனே பிக்கு பிடுங்கல் இல்லாமல், கையைக் கோத்துண்டுப் போனவாளெல்லாம் கடைசியில், உலகம் தெரியாமல், எது நிலைச்சுது தெரியாமல், நாயும் பூனையுமா நாறிண்டிருக்கிறதை நான் பார்த்துண்டுதானே இருக்கேன்! பையன் நல்ல வேளையா நாலாம் பிள்ளையாத்தானே இருக்கான்? என் மாதிரி, என் பெண், வீட்டுக்கு மூத்த நாட்டுப்பெண்ணாய் வாழ்க்கைப்பட வேண்டாமே?"

அம்மா அப்படிச் சொல்றப்போ நன்னாத்தானிருக்கு. நாவலில் கதாநாயகி யாயிருக்க யார்தான் ஆசைப்படமாட்டார்கள்? ஆனால் தனக்கென்று வரப்போத்தானே தெரியறது? நிஜம்மா, நீங்கள் அன்றைக்கு ஆதரவாய் எனக்கு ஒரு வார்த்தைகூட இல்லாமல் வண்டியிலேறிப் போயிட்ட பிறகு, எனக்கு அழுகையா வந்துவிட்டது. என் நெஞ்சின் பாரத்தை யாரிடம் கொட்டிக் கொள்வேன்? எல்லாரும் எனக்குப் புதிசு, வாயில் முன்றானை நுனியை அடைச்சுண்டுக் கிணற்றடிக்கு ஓடிப்போயிட்டேன். எத்தனை நாழி அங்கேயே உட்கார்ந்திருந்தேனோ அறியேன்.

"என்னடி குட்டீ, என்ன பண்றே?"

எனக்குத் தூக்கிப்போட்டது. அம்மா எதிரே நின்னுண்டிருந்தாள். உங்கம்மா செக்கச் செவேல் என்று நெற்றியில் பதக்கம் மாதிரி குங்குமமிட்டுக் கொண்டு கொழகொழன்னு பசுப்போல் ஒரொரு சமயம் எவ்வளவு அழகாயிருக்கிறார்!

"ஒன்னுமில்லையே அம்மா!'' என்று அவசரமாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டேன். ஆனால் மூக்கை உறிஞ்சாமல் இருக்கமுடியவில்லை.

"அடாடா! கடுஞ் ஜலதோஷம். மூக்கையும் கண்ணையும் கொட்டறதா? ராத்திரி மோர் சேர்த்துக்காதே" (கபடும் கருணையும் கண்ணில் கூடி அம்மா கண்ணைச் சிமிட்டும்போது, அதுவும் ஒரு அழகாய்த்தானிருக்கிறது!) "என்னவோ அம்மா, புதுப் பெண்ணாயிருக்கே; உன் உடம்பு எங்களுக்குப் பிடிபடறவரைக்கும் உடம்பை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ. அட குட்டி இதென்ன இங்கே பாருடீ!"

அம்மா ஆச்சரியத்துடன் கிணற்றுள் எட்டிப் பார்த்தார். அவசரமாய் நானும் எழுந்து என்னென்று பார்த்தேன்; ஆனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

"ஏ குட்டி, எனக்குத்தான், கண்சதை மறைக்கிறதா? கிணற்றில் ஜலம் இருக்கோ?"

"இருக்கிறதே!"

"குறைஞ்சிருக்கா?"

"இல்லையே, நிறைய இருக்கே!"

"இருக்கோன்னோ? அதான் கேட்டேன்; அதான் சொல்ல வந்தேன். கிணற்று ஜலத்தைச் சமுத்திரம் அடித்துக்கொண்டு போக முடியாதுன்னு! நேரமாச்சு. சுவாமிப் பிறையின் கீழ் கோலத்தைப் போடு" என்று குறுஞ்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

நான் கிணற்றடியிலேயே இன்னும் சற்றுநேரம் நின்றிருந்தேன். நெஞ்சில் சின்னதாய் அகல் விளக்கை ஏற்றி வெச்ச மாதிரியிருந்தது. மேலே மரத்திலிருந்து பவழமல்லி உதிர்ந்து கிணற்றுக்குள் விழுந்துகொண்டிருந்தது.

தும்பையறுத்துக்கொண்டு கன்றுக்குட்டி முகத்தை என் கையில் தேய்த்துக்கொண்டிருந்தது.

இந்த வீட்டில் யார்தான் பளிச்சென்று பேசுகிறார்கள்? வெளிச்சம் எல்லாம் பேச்சில் இல்லை. அதைத் தாண்டி அதனுள்தான் இருக்கிறது.

ஆனால் ஊமைக்கு மாத்திரம் உணர்ச்சியில்லையா? அவர்களுக்குத்தான் அதிகம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் அசல் ஊமையில்லையே, ஊமை மாதிரிதானே! எனக்கு 'ரெஸ்பெக்டே' இல்லையோன்னோ? ஆமாம், அப்படித்தான். போங்கோ நான் உங்களுக்கு இப்போ கடிதம் எழுதவில்லை. உங்களுடன் கடிதத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன். இல்லை, கடிதாசியில் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். என் யோசனை என்னுடையது. அதை யாராலும் தடுக்க முடியாது. என்னாலேயே தடுக்க முடியாதே, நான் என்ன செய்வேன்? நான்தான் அப்பவே சொல்லி விட்டேனே, என் நெஞ்சிலிருக்கிறதை அப்படியே கொட்டிவிடுவேன் என்று!

எனக்கு மாத்திரம் தெரியாதா, நீங்கள் நெஞ்சில் முள் மாட்டிண்ட மாதிரி, கண்டத்தை முழுங்கிண்டு, முகம் நெருப்பாய்க் காய, வாசலுக்கும், உள்ளுக்குமா அலைஞ்சது? அப்போ உங்களுக்கு மாத்திரம் என்னோடு பேச ஆசையில்லை என்று நான் சொல்ல முடியுமா? அதை நினைத்தால்தான் எனக்குத் துக்கம் இப்போகூட நெஞ்சை அடைக்கிறது. என்ன பேசவேண்டும் என்று நினைத்தீர்களோ? அதைக் கேட்கும் பாக்கியம் எனக்கு இல்லை. இதற்கு முன்னால் நீங்கள் யாரோ, நான் யாரோ? பரதேசிக் கோலத்தில் படி தாண்டி உள்வந்து நீங்கள் என் கைபிடித்ததும் ஜன்மேதி ஜன்மங்கள் காத்திருந்த காரியம் நிறைவேறி விட்டாற்போல் எனக்குத் தோன்றுவானேன்?

அப்படிக் காத்திருந்த பொருள் கைகூடிய பின்னரும், இன்னமும் காத்திருக்கும் பொருளாகவே இருப்பானேன்? இன்னமும் ஜன்மங்களின் காரியம் நிறைவேறவில்லையா? இப்பொழுது நெருப்பு என்றால் வாய் வெந்துபோய் விடாது. தாலி கட்டின வீட்டில் அடித்து விழுகிறாயே என்று கேட்காதேயுங்கள். இப்போ நான் சொல்லப் போவதைத் தைரியமாய்த்தான் சொல்லவேணும். நீங்கள் எங்கேயோ 'காம்ப்' என்று தூரதேசம் போய்விட்டீர்கள். இந்த நிமிஷம் எந்த ஊரில் எந்த ஹோட்டலில், சத்திரத்தில், எந்தக் கூரையை அண்ணாந்து பார்த்தபடி என்ன யோசனை பண்ணுகிறீர்களோ? நானும் புழுங்கிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் திரும்பி வருவதற்குள் எனக்கு எதுவும் நேராது என்று என்ன நிச்சயம்? நினைக்கக்கூட நெஞ்சு கூசினாலும், நினைக்கத்தான் செய்கிறது. உங்களைப் பற்றியும் அப்படித்தானே? அந்தந்த நாள் ஒரு ஒரு ஆயுசு என்று கழியும் இந்த நாளில், நாமிருவரும், இவ்வளவு சுருக்க, இவ்வளவு நாள் பிரிந்திருக்கும் இந்தச் சமயத்தில், நம்மிருவரிடையிலும் நேர்ந்திருக்கும் ஒரு ஒரு பார்வையிலும், மூச்சிலும் தாழ்ந்த ஒன்றிரண்டு பேச்சுக்களும், நாடியோ, அகஸ்மாத்தாவோ, ஒருவர் மேல் ஒருவர் பட்ட ஸ்பரிசமோ, நினைவின் பொக்கிஷமாய்த்தான் தோன்றுகிறது. நாங்கள் அம்மாதிரி பொக்கிஷங்களைப் பத்திரமாய்க் காப்பாற்றுவதிலும் அவர்களை நம்பிக் கொண்டிருப்பதிலும்தான் உயிர் வாழ்கிறோம்.

என் தகப்பனாருக்கு வாசலில் யாராவது வயதானவர்கள் போனால், அவரை அறியாமலே அவர் கைகள் கூம்பும். "என்னப்பா?" என்று கேட்டால் சொல்வார், "அம்மா இந்தக் கிழவனார் வயது நான் இருப்பேனா என்று எனக்கு நிச்சயமில்லை. இந்த நாளில் இத்தனை வயசு வரைக்கும் இருக்கிறதே, காலத்தையும், வயசையும் இவர்கள் ஜயம் கொண்ட மாதிரிதானே? இவர்களுடைய அந்த வெற்றிக்கு வணங்குகிறேன்," என்று வேணுமென்றே குரலைப் பணிவாய் வைத்துக்கொண்டு அப்படிச் சொல்கையில், ஏதோ ஒரு தினுசில் உருக்கமாயிருக்கும்.

ஏன், அவ்வளவு தூரம் போவானேன்? இந்தக் குடும்பத்திலேயே, ஆயுசுக்கும் ரணமாய், தீபாவளிக்குத் தீபாவளி தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும் திருஷ்டாந்தம் இல்லையா? நீங்கள் இப்போது நால்வராயிருப்பவர்கள், ஐவராயிருந்தவர்கள்தானே.

கடைசியில் எதைப்பற்றி எழுத வேண்டுமென்று நினைத்திருந்தேனோ, அதுக்கே வந்துவிட்டேன். நீங்கள் இல்லாமலே நடந்த தலை தீபாவளிக் கொண்டாட்டத்தைப் பற்றித்தான்.

**– அடுத்த இதழில் முடியும்.** ■

# இறுதியாத்திரை

• கவி: அனாமிகா
சித்திரம் : கொ.வடிவேல்

பிணக்கூராய்வு அறைக்கு வெளியே
நான் நின்றுகொண்டிருக்கிறேன்
சுற்றிலும் யார்யாரோ கதறி அழுதுகொண்டிருக்கிறார்கள்
மரித்த பின்னான உன் உடலை
நான் எப்படி எதிர்கொள்ளப் போகிறேன்
கண்களில் நீர்மை தாங்கி அழுபவர்களை வேடிக்கைப்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்
கூட்டத்தில் தனித்து நின்று திரிகிறேன்
மரணம் எவ்வளவு கொடிய பயங்கரம்
உன் வெற்றுடலில் நிரம்பிய
தனித்த நான்கு சொல்களில்
மரணம் உயிர்த்திருக்கிறது
உன் உயிர் பிரிதலின் புகாரை
சௌகர்யமாய் வைத்திருக்கிற மரணத்திடம்
இனியென்ன பிரார்த்தனையெனக்கு
உன் உடல்தான் என்பதை அடையாளம் காண்பிக்க
அம்மாவையும் தங்கையையும் அணைத்துக்கொண்டு
பிரேதாலயத்திற்குள் அழைத்துச்செல்கிற தம்பியை
வெறுமையாய்ப் பார்த்து நிற்கிறேன்
எனக்குச் சத்தியமாய்த் தைரியமில்லை
இறந்த பின்னான உன் உடல்
எடை கூடியிருக்கலாம்
சுயமரணத்தை யாசித்த திமிர்
உனக்கு எப்படிப் பொருந்திப்போயிருக்கும்
வாழ்வின் நெடிய கழிதலின்
கொண்டாட்டங்களைப் புறந்தள்ள
உனக்கு மட்டுமே முடிந்திருக்கிறது
உன் மரணம் ஒரு கொடுங்கனவினைப்போல் எனக்கு
இருந்திருக்கக்கூடாதா சௌமி
கூட்டத்தைப் பார்
நிறை மன்னிப்புகளைக்
கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்
கொஞ்சம் குற்றப்படுத்துதலையும்
தார்மீகக் கோபங்களையும் இனி நீ
ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை
பரிதாப பாவனைகளையும்
கேட்கின்ற குரல்களின் தவிப்பையும்
ஆதங்கத்தில் சில வசைச்சொற்களையும்
அவரவர்களுக்குள்ளாகவே
காட்டிக்கொண்டு புலம்புகிறார்கள்
அதோ உன் ஐந்தடியுடல்
வெள்ளைத்துணியில் பொதியப்பட்டு

• கவி: அனாமிகா
சித்திரம் : கொ.வடிவேல்

ஸ்டச்சரில் கிடத்திக்கொண்டு வருகிறார்கள்
மார்ச்சுவரி முழுக்கத் துயரத்தின் பெரும் ஓலம்
ஒட்டுமொத்த உதடுகளும்
சௌமி சௌமி சௌமியென
உன்னைப் பிரியாவிடை கொடுக்கிறார்கள்
சிலர் மயங்கி விழுகிறார்கள்
சிலர் அவர்களைத் தாங்கிப் பிடிக்கிறார்கள்
சிலர் தண்ணீரைப் பருகத் தருகிறார்கள்
இந்தக் குறைந்த வாழ்வில் எத்தனைப் பேரைச்
சம்பாதித்து வைத்திருக்கிறாய் நீ
உன்னை ஏற்றிக்கொண்டு மலைப்பிரதேசத்திலிருக்கும் உன்
பிறந்தகம் நோக்கிச் செல்கிறது அமரர் ஊர்தி
நீ ஊர்ந்து தவழ்ந்து நடந்து ஓடி விளையாடிய
முற்றத்தில் சவமாய்க் கிடக்கிறாய் சௌமி
தாங்கும் வலிமையற்றுத் திண்ணைச்சுவரில் சரிகிறேன்
இந்த நிலத்தில் இந்தப் பூமியில்
உன் இறுதிநாள் கடும்பனியில் உறைந்திருக்கின்றது
உன் வீட்டிலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவிலுள்ள
முல்லக்குரை மயானத்திற்கு உன்னைச் சுமந்துகொண்டு
போகிறார்கள்
சாலையெங்கும் பூக்கள் தூவித்தூவிப் போகிறார்கள் சாவின்
வாசனையை
அவை ஈன்று பெருக்குகின்றன
அதோ உன் பள்ளித்தோழிகள்
பேருந்து நிறுத்தத்திலிருந்து ஓடிவருகிறார்கள்
உன்னைக் கட்டிப்பிடித்து உலுக்கியழுகிறார்கள்
மேலும் நான் உடைந்துபோகிறேன்
மனம் கனம் கூடி நெஞ்சடைக்கிறது
வாய்பொத்தி அழுகிறேன்
சில சடங்குகள்
சம்பிரதாயமாய் நடக்கின்றன பின்
ஈரக்குழிக்குள் பத்திரமாய்
உனை இறக்குகிறார்கள்
உனைக் கடைசியாய்ப் பார்க்கிறேன் நீ நெடுந்துயிலில்
ஆழ்ந்திருக்கிறாய்
நான் கண்கள் மூடி உன்னை ஒருமுறை இறுக அணைக்கிறேன்
அவ்வளவுதான்
எனக்குள் எல்லாமும் முற்றிலும் அழிந்து
ஒரு தூரத்தொலைவிற்குள் நீ மட்டும் என் ஆன்மாவை
இழுத்துக்கொண்டு மாய்ந்து போகிறாய் சௌமி. ■



நாடக வடிவில் சங்க இலக்கியம்

• ஆகி

# நெடுவெண்ணிலவு

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண்ணிலவே
(குறுந்தொகை 47)

பாடலின் நிகழ்ச்சி மலைப் பின்னணியில் நடைபெறுகிறது. தலைவனும் தலைவியும் மனமிணைந்து களவில் இருக்கின்றனர். இரவு நேரத்தில் தலைவியைப் பார்க்க, காட்டின் வழியாகத் தலைவன் வருகிறான். அவனிடம் நேரடியாகப் பேசமுடியாத தோழி, நிலவைப் பார்த்துப் பேசித் தலைவியை விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தலைவனுக்குப் புரியவைக்கிறாள்.

தலைவன் வந்திருப்பதை அறியாதவர்கள் போன்று, ஆனால் அவன் கேட்க வேண்டும் என்றே தலைவியும் தோழியும் பேசிக்கொள்வது:

**தோழி :** உலகில் அனைவருக்கும் பிடித்தமான நிலவு தலைவனுக்கு மட்டும் நல்லது செய்யவில்லையே?

**தலைவி :** நிலவு ஒளிவீசும் இந்த இரவு நேரத்தில் என்னைக் காண அன்போடு வருபவர்தானே தலைவர்.. அவருக்கு ஏன் அது நல்லது செய்யவில்லை என்கிறாய்?

**தோழி :** காரணம் இருக்கிறது. நாம் இருப்பது அடர்ந்த மலைக்காட்டுப் பகுதி. இங்கு வந்து தலைவன் நம்மைப் பார்ப்பது எவ்வளவு கடினம் தெரியுமா?

**தலைவி :** எவ்வளவு கடினம்?

**தோழி :** கரிய பெரிய அடிப்பகுதியை உடைய வேங்கை மரங்கள் இந்தக் காட்டுப் பகுதியில் இருக்கின்றன. அந்த மரங்களின் மஞ்சள் நிறப் பூக்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய குண்டுக் கற்களின் மேலே விழுந்துகிடக்கும். இரவு நேரத்தில் தலைவன் வரும்போது இது பார்ப்பதற்கு எப்படி இருக்கும் தெரியுமா? ஒரு புலிக்குட்டி படுத்திருப்பது போல இருக்கும்.

**தலைவி :** அச்சச்சோ.. நிலவொளியில் தலைவன் அதைப் பார்த்துப் பயந்துவிடுவானே?

**தோழி :** அதனால்தான் சொல்கிறேன்.. நிலவு நல்லை இல்லை. அது மட்டுமல்ல.. வெளிச்சம் கொடுத்துத் தலைவன் வருவதை நிலா ஊருக்கே காட்டிக்கொடுத்துவிடுகிறது. அதனாலும் நல்லை இல்லை.

**தலைவி :** ஆமாம். பொல்லாத நிலாதான்.

**தோழி :** அதனால்தான் நெடுவெண்ணிலவு என்கிறேன். எல்லாருக்கும் சரியான நேரம் ஒளி வீசும் நிலவு நமக்கு நீண்ட நேரம் ஒளிவீசிக் கொல்கிறதே..

**தலைவி :** இல்லைம்மா.. நிலா அதற்குரிய நேரம்தான் ஒளிவீசுகிறது. ஆனால் நிலவு மறைந்துவிட்டால் பரவாயில்லையே என்று எண்ணும் நமக்கு நிலா அதிகநேரம் ஒளிவீசுவது போலத் தோன்றுகிறது.

**தோழி :** எப்படியோ.. தலைவன் ஒரு விஷயத்தைப் புரிந்துகொண்டால் நல்லது.

**தலைவி :** என்ன விஷயம்?

**தோழி :** அவன் வரக்கூடிய வழியும் ஆபத்து. அவன் இப்படி வருவதை ஊர்மக்கள் பார்த்தாலும் ஆபத்து. அதனால் இப்படி வராமல் விரைவில் உன்னைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமடி.

**(தான் இருப்பதை அறியாதார் போன்று அவர்கள் பேசியதைக் கேட்ட தலைவனுக்கு முடிவெடுக்க வேண்டியது கட்டாயமாகிறது).** ■

உலகம் தழுவிய போட்டி...
திறமைகளுக்காக திறந்திருக்கும் மேடை...
விரைவில்....

MEDAI
The Stage is yours
PADAIPPU



படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

நூல்களைப் பெற - 97908 21981

